ஸ்ரீ:



ஸ்ரீமதே ராமாநுஜாய நம:


# ஸ்ரீவைஷ்ணவஸ்ரீ

| முழக்கம்-15 | பாஞ்சஜன்யம் டிசம்பர் 2012-163 | ஒலி 12 |
|---|---|---|


## 1. கிராமக்கோயில்களில் கைங்கர்யத்தில் ஈடுபட்டிருக்கும் ஸ்ரீவைஷ்ணவ அர்ச்சகர்களுக்கான ஆன்மீக மற்றும் பொருளாதார மேம்பாட்டுத் திட்டம்

தற்போது கிராமக்கோயில்களில் ஆராதனத்தை மேற்கொள்வதற்குத் தகுதியுடைய அர்ச்சகர்கள் கிடைப்பது அரிதாகி விட்டது. அதிகவருவாய் வரக்கூடிய தொழில் களுக்குப் பெரும்பாலானோர் சென்றுவிடுகின்றனர். கிராமக் கோயில்களில் பணிசெய்வதால் கிடைக்கும் மிகக்குறைந்த வருவாயைக் கொண்டு தற்போதைய சூழலில் வாழ்க்கைப் படகை ஓட்டிச்செல்ல இயலாது. இது அனைவரும் அறிந்த உண்மையே. இதன் விளைவாகப் பெரும்பாலான கிராம விஷ்ணுகோயில்களில் ஆகமக்கோட்பாடுகளுக்குப் புறம்பாக

சிவன்கோயிலில் பணி புரியும் குருக்கள் பூஜை செய்து வருகின்றார். கிராமத்து மக்களைப் பொருத்தவரை ஸ்ரீபாஞ்ச ராத்ரம், வைகானஸம் போன்ற பாகுபாடுகளைப் பற்றிய சிந்தனை அவர்களுக்குக் கிடையாது. அவர்களைப் பொருத்த வரை பூணூல் அணிந்த எந்த ப்ராஹ்மணனும் எந்தக் கோயிலிலும் பூஜை செய்யலாம். *(ஆயிரம் பெரியார்களும், வீரமணிகளும், 'யார்வேண்டுமானாலும் அர்ச்சகர் ஆகலாம்' என்று முழக்கம் இட்டாலும் மற்றைய சந்தர்ப்ப அரசியல்வாதிகள் அதற்குத் தாளம் போட்டாலும் இவர்களுடைய வாதம் கிராமப்புறங்களில் செல்லுபடியாகாது.)*

கோயில் சொத்துக்கள் இன்று நாட்டில் பலரால் 'கபளீகரம்' செய்யப்பட்டு வரும் நிலையில் கோயில்களுக்குரிய வருமானம் அடியோடு நின்று போயிற்று. ஒரு கால பூஜைத் திட்டம் என்பது ஒரு கண் துடைப்பே. ஏனெனில் திருக்கோயில்களுக்குச் சொந்தமான நிலங்களிலிருந்தும், மனைகளிலிருந்தும் கிடைக்கக்கூடும் வருவாயை முறைப்படி வசூல் செய்தாலே ஆண்டு வருமானம் 5,500 கோடியைத் தாண்டும். அதைச் செய்வதற்கு அரசியல்வாதிகளுக்கு மனமில்லை. கோயிலுக்குச் சொந்தமான மனைகளைப் பலர் ஆக்ரமித்துள்ளனர். கோயில்களைக் காக்க வேண்டிய இந்துசமய அறநிலையத் துறையினர் பல பகற்கொள்ளைகளில் ஈடுபட்டு வருகின்றனர். *(திருச் செந்தூர் திருக்கோயிலுக்கான பசலி எண்கள் 1416,17,18 ஆகியவற்றிற்கான தணிக்கை அறிக்கை 2013 ஜனவரி இதழில் வெளிவரவுள்ளது. அதைப்படித்துப் பார்த்தால் 2Gஊழல், நிலக்கரி சுரங்க ஊழல், Bofors ஊழல், சவப்பெட்டி ஊழல், சுடுகாட்டு ஊழல், இறக்குமதி ஊழல் போன்றவைகளெல்லாம் மன்னிக்கப்பட வேண்டியவைகளே என்ற எண்ணமே தோன்றும்.)*

காலத்தின் கட்டாயத்தால் வேறுவழியின்றி கிராமப் புறத்து அர்ச்சகர்கள் அந்தந்தக் கிராமங்களில் உள்ள எம்பெருமான்களை ஆராதித்து வருகின்றனர். 'கிங்பிஷர்' நிறுவனத்தில் ஊழியர்களுக்கு மூன்று மாதங்களாக சம்பளம் வழங்கப்பட வில்லை என்பது ஊடகங்களில் தலைப்புச் செய்தியாய் இடம்பெறும். ஆனால் பல ஆண்டுகளுக்குக் கோயிலில்



பணிபுரியும் அர்ச்சகர் போன்ற ஊழியர்களுக்குச் சம்பளம் கொடுக்கப்படவில்லை என்பதைப்பற்றி யாருக்கும் தெரியாது. அப்படியே தெரிந்தாலும் அவர்கள் அதற்காக எந்த மனத்துயரும் கொள்வதில்லை.

நாளுக்கு நாள் விஷம்போல ஏறிவரும் விலைவாசியின் கொடுமையை அனைவரும் எதிர்கொள்ள வேண்டியுள்ளது. மத்திய அரசு ஊழியர்களுக்கு அவ்வப்போது பஞ்சப்படி அதிகரிக்கப்பட்டு வருகிறது. ஆனால் 95 சதவிகிதம் மக்கள் பொருளாதாரச் சீர்கேடுகளில் சிக்கித் தவிக்கின்றனர். மேலும் கிராமப்புற அர்ச்சகர்களுக்கு முறையான ஆகமக் கல்வியோ அல்லது ஸம்ப்ரதாய ஞானத்தையோ புகட்டுவார் இல்லை. மார்கழி மாதம் வந்துவிட்டால் அனைவரும் போட்டி போட்டுக்கொண்டு நகரங்களில் உபந்யஸிக்கிறார்களே தவிர, கிராமப்புறங் களுக்குச் சென்று திருப்பாவையின் பெருமையை எடுத்து ரைப்போம் என்று யாரும் முன்வருவதில்லை. *(ஆண்டின் சில நாட்கள் நம் பொற்பொழிவார்கள் கிராமங்களுக்குச் சென்று எந்த ஸந்மானத்தையும் எதிர்பாராமல் அடிப்படை ஸம்பிரதாய அறிவை ஊட்ட முன் வர வேண்டும்.)* நகரத்தில் உள்ளோர் ஞானவான்களாயும், கிராமங்களில் இருப்போர் ஆன்மீக ஞானமற்றவர்களாக திகழச்செய்வதே நம்முடைய குறிக்கோளாக மாறிவிட்டது.

இதுபோன்ற அவலங்களுக்கு ஓரளவு தீர்வு காண்பதற்காகச் சோதனை அடிப்படையில் தமிழ்நாட்டில் பத்து கிராமக்கோயில்களைத் தத்தெடுத்து, அந்தத்திருக் கோயில்களில் பணிபுரியும் அர்ச்சகர்களுக்கு மாதம் ரூபாய் 8,000 உதவித்தொகை, கோயில்மனையில் குடியிருப்பு, சூரியஒளி கொண்டு திருக்கோயிலுக்கும், அர்ச்சகர் குடியிருப்பிற்கும் மின்வசதி, அர்ச்சகருக்கும் அவர்தம் குடும்பத்தினருக்கும் இலவசக் கல்வி வசதி மற்றும் மருத்துவ வசதி, அந்தக் கிராமத்து மக்களின் உடல் நலத்தைப்பேணும் பொருட்டு மருத்துவமுகாம்கள் ஆகியவற்றை சுமார் ஒருகோடி ரூபாய் மூலதனத்தைக் கொண்டு செய்துகொடுப்பதற்கு ஓர் அன்பர் முன்வந்துள்ளார்.

நந்தன வருஷம் தை மாதம் (2013 ஜனவரி) இந்தத் திட்டத்தை தமிழ்நாட்டில் மிகவும் நலிந்த நிலையில் உள்ள கிராமத் திருக்கோயில்கள் மற்றும் அந்தக் கோயில்களில் பணிபுரியும் அர்ச்சகர்களுக்கு இந்த உதவித் தொகை வழங்கப் படவுள்ளது. அவர்களுக்குரிய அடிப்படை ஆகமப் பயிற்சி யினை அளித்திட ஸ்ரீபாஞ்சராத்ர ஆகம வித்வான் தேரெழுந் தூர் ஸ்ரீ.உ.வே. ராமன் பட்டாசார்யர் முன்வந்துள்ளார்.

இவ்வாறு பணஉதவி பெறுவோர் கீழ்க்கண்ட தகுதி கொண்டவர்களாயும், கைங்கர்யங்களை மனமுவந்து செய்ப வர்களாயும் இருக்க வேண்டும்.

1. உபநயனம் ஆகி பஞ்சஸம்ஸ்காரம் பெற்றிருக்க வேண்டும்.

2. ஆகமத்தில் அடிப்படை பயிற்சி பெற்றிராவிட்டால் திருவரங்கத்தில் பதினைந்து நாட்கள் தங்கி தீவிர அடிப்படை ஆகமப் பயிற்சினைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

3. உள்ளூர் மக்களிடம் சுமுகமான உறவு கொண்டு இன் முகத்துடன் பணிசெய்பவராய் இருக்க வேண்டும். அந்த அர்ச்சகர் ப்ரஹ்மசாரியாகவோ, கிருஹஸ்தராகவோ இருந் திடலாம்.

4. அடிப்படை ஆசார அநுஷ்டாநங்களை அனுசரிப்பவராய் இருக்க வேண்டும். *(அதாவது பெருமாள் ஆராதனத்தில் ஈடுபட்டிருக்கும்போது நெற்றியில் திருமண்காப்பு, சிகை, கச்சம் தரித்த உடை(கிருஹஸ்தராய் இருந்தால்), லாகிரி வஸ்துக்களை வாயில் அடைத்துக் கொண்டு ஆராதனை யில் ஈடுபடாதிருத்தல், தேவதாந்தர கோயில்களுக்குச் சென்று வழிபடாமலிருத்தல் போன்றவை).*

5. இரண்டு கிராமங்களுக்கு ஒரு அர்ச்சகர் என்ற கணக்கில் இந்தத்திட்டம் அமுல்படுத்தப்பட்டால் ஒரு நபருக்கு பதினைந்தாயிரம் ரூபாய் உதவித்தொகை கிடைக்கும்.

6. ஒவ்வொரு கிராமத்து அர்ச்சகருக்கும் வீட்டு வாடகை தரப்படும். நீண்ட காலத் திட்டத்தின்கீழ் கோயில் நிலத்தில் குடியிருப்பு கட்டித்தரப்படும்.



7. பெருமாள் ஆராதனத்திற்கென தினந்தோறும் ஒரு லிட்டர் பசும்பால், அரை லிட்டர் தயிர், கால் லிட்டர் எண்ணெய், 1 கிலோ அரிசி, 500 கிராம் கொண்டைக் கடலை மற்றும் தேவையான மளிகை சாமான்கள் அளிக்கப்படும். மாலை அல்லது இரவு வேளைகளில் அர்ச்சகர் ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ரநாமபாராயணத்தை ஒலிபெருக்கி முன்பு செய்திட வேண்டும் *(ஒவ்வொரு கிராமத்திருக்கோயிலிலும் ஒலி பரப்பி வசதிகள் செய்து தரப்படும்)*. அதன்பிறகு திருப்பல் லாண்டு, பூச்சூடல், காப்பிடல் ஆகியவற்றுடன் மற்றைய நித்யா நுஸந்தான பாசுரங்களை ஸேவித்து ஆழ்வார் பிரஸாதமாக சுண்டல் விநியோகம் செய்ய வேண்டும். உடையவ ருடைய திட்டமும் இதுவே. அதே போல காலையில் விச்வரூ பத்திற்குப் பால், அதன்பிறகு திருப்பாவை அனுஸந்தானம், பிறகு தத்யோதன விநியோகம் செய்யப்பட வேண்டும். மார்கழி மாதம் பொங்கல் விநியோகம் செய்யப்பட வேண்டும்.

8. இவ்வாறு நியமிக்கப்படும் அர்ச்சகரிடம் மூன்று மாத உதவித்தொகை முன்தேதியிட்ட காசோலையாகக் கொடுக் கப்படஉள்ளது.

9. நீண்டகாலத்திட்ட அடிப்படையில் கோயிலுக்குச் சொந்தமான இடங்களில் கோசாலை, நந்தவனம் அமைக்கப் பட உள்ளது. கோயில் நிலத்தில் தென்னங்கன்றுகள் நடப்பட்டு ஒரு நிலையான வருவாய்க்கு ஏற்பாடு செய்யப்பட உள்ளது.

10. உள்ளூர் மக்கள் மேலும் மேலும் திருக்கோயிலின் வளர்ச்சிக்கு உதவ வேண்டும்.

11. ஆண்டுக்கு மும்முறை பொது மக்கள் நலத்தைப் பேணும் பொருட்டு மருத்துவ முகாம்கள் நடைபெற உள்ளன.

பாஞ்சஜன்யம் வாசகர்கள் தங்களால் இயன்ற பொரு ளுதவியைத் தந்துதவ வேண்டும். எம்பெருமான் கொடுத்த செல்வம் ஓரளவிற்கே நமது பயன்பாட்டிற்குக் கொடுக்கப் பட்டது. பகவத்பாகவத கைங்கர்யத்தில் ஈடுபடுவோர்க்குச்

செல்வம் மேலும் மேலும் பெருகும். இந்தப் பிறவியில் பகவத் பாகவத கைங்கர்யத்தில் நமது செல்வத்தைச் செலவிட ஓர் வாய்ப்புக் கிடைத்ததே என்ற எண்ணத்தை ஒவ்வொருவரும் கொண்டால் 'வைகுந்தமாகும் தம்மூரெல்லாம்' என்று ஆழ்வார் அருளிச்செய்தபடி நாம் இருக்கும் ஊரே பரம பதத்தில் வாழ்வதைப் போன்ற நிலையை ஏற்படுத்திவிடும்.

✱ ✱ ✱

## 2. ஸ்ரீமான்மதுரகவிதாஸர் தீர்த்தோத்ஸவம்.

ஸ்ரீரங்கத்தைச் சேர்ந்த வீரேசுவரத்தில் பிள்ளை வகுப்பில் பிறந்த பாகவதோத்தமர் ஸ்ரீமான் மதுரகவிதாஸர். ஸ்ரீரங்க விமானத்துக்கு லக்ஷம் ரூபாய் செலவில் பொன் தகடு பூட்டி கி.பி.1903இல் மிக விமரிசையாக மஹாஸம்ப்ரோக்ஷணம் நடத்தி வைத்தவர் இவர்.

பெரியபெருமாள், ஸ்ரீரங்கநாச்சியார் முதலானவர்களுக்குத் தினந்தோறும் அதிக அளவில் திருமாலைகள் ஸமர்ப்பிப்பதற்காக காவேரிக்கரையிலுள்ள தம்முடைய 10காணி தோட்டத்தையும் பெரியபெருமாளுக்கு ஸமர்ப்பித்து, அதில் நீர்ப்பூ (செங்கழுநீர்), நிலப்பூ (இருவாட்சி), மரப்பூ (பாதிரி, கருமுகை), கொடிப்பூ (மல்லிகை) என்ற நாலு வகைப் பூக்களையும் உண்டாக்கி விரக்தர்களான ஏகாங்கிளைக் கொண்டு திருமாலை ஸமர்ப்பிக்கும் நந்தவனமாக ஏற்பாடு செய்த மஹான் இவர்.

திருநந்தவனக் கைங்கர்யம் எப்போதும் இடையூறின்றி நடப்பதற்காக திருச்சி சடகோப நாயுடு, ரங்கசாமி நாயுடு தமது தமையனார் நம்பி பெரியண்ண பிள்ளை, மதுரநாயகம் பிள்ளை ஆகியோருடன் மேலும் ஐவரை டிரஸ்டிகளாக நியமித்து ஒரு உயில் எழுதி ரிஜிஸ்டர் செய்து அதில் செய்ய வேண்டிய கைங்கர்யங்களைக் குறிப்பிட்டுள்ளார். திருமாலை கட்டி ஸமர்ப்பித்தல், பெருமாள் தாயாருக்கு ஊறுகாய்க்கு காய்கொடுத்தல், வைகாசி விசாகத்திற்கு பால் மாங்காய், ஜேஷ்டாபிஷேகத் திற்கு மாம்பழம் போன்ற பழவகைகள் கொடுக்கக் கண்டிருக்கிறது.



ஸ்ரீமான் மதுரகவிதாஸர் 1904 குரோதி வருடம் ஐப்பசி மாதம் நம்பெருமாள் ஊஞ்சல் 7ஆம் திருநாள் இரவு கோஷ்டிகளுக்கு தீர்த்த வினியோகம் ஆனபிறகு 11 மணிக்கு ஆசார்யன் திருவடியடைந்தார். மேற்படி டிரஸ்டிகள், உயிலில் கண்டிருக்கிறபடி கைங்கர்யங்களைக் குறைவில்லாமல் நடத்தி வந்து 1914ஆம் வருடம் நந்தவனத்தின் கீழ்புறம் கொஞ்சபாகம் சுமார் 8 ஏக்கர் பரிவர்த்தனை செய்து, பதிலாக நஞ்சை நிலம் பெற்றுக்கொண்டு அந்த நிலத்தை வாங்கியவர்களையும் டிரஸ்டிகளாக சேர்த்துக் கொண்டு நிர்வாகம் செய்து வந்தனர்.

இத்தகைய பெருமைகள் பல படைத்த ஸ்ரீமான் மதுரகவிதாஸருடைய 108ஆவது தீர்த்தோத்ஸவம் 2012 நவம்பர் 24ஆம் நாள் கொண்டாடப்பட்டது. நம்பெருமாள் ஊஞ்சல் உத்ஸவத்தின் ஏழாம்நாளன்று அரையர் ஸ்வாமிகள் எழுந்தருளி அருளிச்செயல் கோஷ்டியை அலங்கரித்தனர். நூற்றுக்கணக்கான பாகவதோத்தமர்கள் அன்று நந்தவனத்திற்கு வருகை தந்து அந்த உத்ஸவத்தில் பங்கு கொண்டனர்.

பெரியாழ்வார், தமது திருமொழி இரண்டாம் பத்து ஏழாம் பதிகத்தில் கண்ணனுக்கு செண்பகம், மல்லிகை, பாதிரி, செங்கழுநீர், புன்னை, குருக்கத்தி, இருவாட்சி, கருமுகை பூக்களை சூட்டி மகிழ்கிறார். மதுரகவி நந்தவனத்தில் முப்பது ஆண்டுகளுக்கு முன்பு மேலே குறிப்பிடப்பட்டுள்ள அனைத்துப் பூக்களும் பயிரிடப்பட்டு வந்தன. இயற்கையின் சீற்றங்களால் நந்தவனத்தின் சிலபகுதிகள் பாழ்பட்டு பல பூக்கள் தற்போது பயிரிடப்படுவதில்லை. பாதிரிமரம் தற்போது தளிர்த்து துளிர்விட்டுள்ளது. கருமுகைப்பூமரம் சிறு செடிகளாகக் காணப்படுகின்றன. செங்கழுநீர்ப்பூ பயிரிடப்பட்டு வந்த குளத்தில் ஆற்று வெள்ளம் புகுந்ததால் கோரை மண்டிக் கிடக்கின்றது. பெரியபெருமாளுக்கும், ஸ்ரீரங்க நாச்சியாருக்கும் ஸமர்ப்பிக்கப்படும் மாலைகள் தற்போது ஸ்ரீமதுரகவியின் நந்தவனத்திலிருந்து கொண்டுவரப்படுகின்றன. மிகப்பெரிய (2000 செடிகள் கொண்ட) கிருஷ்ணதுளசி நந்தவனம் இங்கே அமைந்துள்ளது.

இந்த நந்தவனத்தை அறநிலையத்துறை தன் கட்டுப்பாட்டில் எடுத்துக்கொள்வதற்கு மேற்கொண்ட முயற்சிகள் வெற்றிபெறவில்லை. நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளது. ஒருவேளை அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டில் நந்தவனம் செல்லக்கூடுமானால் நம்பெருமாளின் 'கற்பு' பறிபோய்விடும். இந்த நந்தவனத்தின் கீழைப்புறம் இந்துசமய அறநிலையத்துறை பயணியர் விடுதி ஒன்றை கட்டியிருப்பது பற்றி இந்த இதழில் வேறோர் கட்டுரையில் குறிப்பிட்டுள்ளோம். தர்ம சொத்துக்களுக்கு ஊறு விளைவிப்பதே இந்துசமய அறநிலையத்துறையின் தற்போதைய கொள்கையாகும். ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு இதைப்பற்றியெல்லாம் கவலையில்லை. ஆங்காங்கே உள்ள சிலர் கூக்குரல் இடுவதைக் கூட ஸ்ரீவைஷ்ணவர்களால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை.

மதுரகவி நந்தவனத்தின் பராமரிப்புச் செலவுகள் ஆண்டுதோறும் பெருகிவருகின்றன. கார்த்திகை மாதம் சொக்கப்பனை உத்ஸவ நிமித்தமாக நம்பெருமாள் எழுந்தருளும்போது பல ஆண்டுகளுக்கு முன்பு செங்கழுநீர் மலர்களால் அலங்கரிக்கப்பட்ட திருவாசியில் எழுந்தருளுவார். செங்கழுநீர்ப்பூ மலரும் குளத்தில் கோரை மண்டிக்கிடப்பதால் அந்தப்பூ, பயிரிடப்படுவதில்லை. ஸ்ரீமான் மதுரகவியைப் போன்ற கைங்கர்ய சிந்தனை கொண்ட ஒருவர் அந்தக்குளத்தை தூர்வாரி செங்கழுநீர் பூக்களைப்பயிரிட்டு மீண்டும் நம்பெருமாள் செங்கழுநீர்ப்பூ திருவாசியில் எழுந்தருளினால்தான் பழமை காப்பாற்றப்படும். ஏனெனில் உபயக்காரர்கள் யாருக்கும் இதுபோன்ற ஆக்கபூர்வமான பணிகளில் ஈடுபடத் திருவுள்ளம் இல்லை. கோடிக்கணக்கில் திருக்கோயில் சொத்தைச் சூறையாடிவிட்டு உபயம் என்ற பெயரில் தனம்படைத்தோரிடம் 'வசூல்' செய்யும் இந்துசமய அறநிலையத்துறைக்குக் கோடிக்கணக்கில் அள்ளிக்கொடுப்பார்கள் அல்லது பாவச்சுமையைக் குறைத்திடுவதாக எண்ணங் கொண்டு பல லட்சரூபாய்களை உண்டியலில் போட்டு விடுவார்கள். இது நம் சமூகத்தின் தலைவிதி. ✱✱✱



## 'கோயிலொழுகு' என்னும் தலைப்பில் திருச்சி அகில இந்திய வானொலி முதல் அலை வரிசையில் 28.11.2012 அன்று இரவு ஒன்பதரை மணிக்கு ஒலிபரப்பப்பட்ட பாஞ்சஜன்யம் ஆசிரியரின் உரை.

'கோயிலொழுகு' என்னும் நூல், 'கோயில்' என்று வைணவர்களால் போற்றப்படும் திருவரங்கம் கோயில் வரலாற்றை, இதிஹாஸ, புராண காலத்திலிருந்து பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதிவரைக் கூறும் ஒரு தொகுப்பு நூலாகும். திருவரங்கம் கோயில் அதிகாரிகளால் செவிவழிச் செய்திகளையும், கல்வெட்டுகளையுங்கொண்டு அவ்வப்போது தொகுக்கப்பட்ட நூல் இது.

இராமானுசர் திருவங்கம் கோயில் நிர்வாஹத்தை ஒழுங்குபடுத்தியமுறை குருபரம்பரை நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ள போதிலும், கோயிலொழுகிலேயே அது விரிவாகப் பேசப்படுகிறது. இதிஹாஸ புராணகால வரலாறுகளும், ஆழ்வார்கள், இராமானுசருக்கு முந்தைய ஆசார்யர்கள் கால வரலாறுகளும் இதில் சுருக்கமாகவே குறிப்பிடப்பட்டு, இராமானுசர் கால வரலாறுகள் மிக விரிவாகப் பேசப்பட்டிருப்பதால் இக்கோயிலொழுகு இராமானுசர் காலத்திலோ அல்லது அதை ஒட்டியோ எழுதத் தொடங்கப்பட்டிருக்க வேண்டும் என விளங்குகிறது. ஒழுகு என்றால் ஒரு பதிவேட்டைக் குறிக்கும்; அரசர்கள் வழங்கிய அறக்கொடைகளை முறையாகப் பதிவு செய்த ஆவணமாக அது கொள்ளப்படுகிறது.

கோயிலில் நடைபெற்ற திருப்பணிகள், அரசர்கள் பொலியூட்டாக விட்ட நிலக்கொடைகள் முற்றூட்டு நிலங்கள் மற்றும் கிராமங்கள், இயற்கைப் பேரிடர்கள், செயற்கையாக நிகழ்ந்த பேரழிவுகள், மாமன்னர்கள் மற்றும் சமயச் சான்றோர்கள் ஆகியோரின் வருகைகள் ஆகிய செய்திகளைத் திருக்கோயில் ஸ்ரீபண்டாரத்துப் பணியாளர்கள் நால்வர், அதிகாரிகள் முன்னிலையில் அப்பதிவுகளை ஏடுகளில் எழுதி வந்தனர்; அவ்வேட்டுச் சுவடிகள் முத்திரையிடப்பெற்று பத்திரமாகச் சேமிக்கப்பெற்றன. பிற்காலத்தில் வழக்குகளும் விவகாரங்களும் ஏற்பட்டபொழுது அந்நூல் வெளியே எடுக்கப்பட்டுப் பரிசோதிக்கப்பட்டு முடிவுகள் மேற் கொள்ளப்பெற்றன. பரம்பரை பரம்பரையாக இக்குறிப்புகள் ஏடு படுத்தப்பட்டன.

கோயிலொழுகில் நிகழ்ச்சிகள் பல காலவரிசையில் இடம்பெயர்ந்து காணப்படுகின்றன. பின்னே வந்த சுவடி எழுதுவோர் ஓலைகளை இடம்மாற்றிக் கோத்து விட்டனர் என்றே கொள்ள வேண்டும். கோயிலொழுகில் முகம்மதியப் படை வீரர்களின் தாக்குதலை வருணித்த பிறகே ஆசார்யர்களின் வரலாறு இடம் பெறுவதற்கு அதுவே காரணமாகும். விஜயநகர மன்னர்களின் ஆட்சிக் காலத்திய நிகழ்ச்சிகள் மட்டும் இந்நூலில் காலவரிசை மாறாதபடி குறிப்பிடப் பட்டுள்ளன.

வைணவ குருபரம்பரை நூல்களில் சொல்லப்படாத பல அரிய வரலாற்றுச் செய்திகள் கோயிலொழுகில் காணப் படுகின்றன. இந்நூல் மணிப்பிரவாளநடையில் எழுதப்பட் டுள்ளது. சில நிகழ்ச்சிகள் மிக நீண்ட சொற்றொடர்களைக் கொண்டு விவரிக்கப்படுகின்றன. சில சொற்றொடர்கள் முற்றுப் பெறாமலும் நிற்கின்றன. இந்நூலின் மணிப்பிரவாள நடையைக் கொண்டு பல ஆய்வாளர்கள் இதனை ஒரு சமயக் கோட்பாட்டு விளக்க நூலாக எண்ணங்கொண்டு வரலாற்றுச் சான்றாதாரங்களில் ஒன்றாக மதிக்கத் தவறிவிட்டனர். அக்காலத்து வழக்கிலிருந்த கோயில் மரபுகளையும் கலைச் சொற்களையும் ஒருங்கே தன்னகத்தே கொண்ட வரலாற்றுப்



பெட்டகம் என்பதை அண்மைக் காலத்தே ஆய்வாளர்கள் உணரத் தொடங்கியுள்ளனர்.

திருவரங்க மாஹாத்மியம் என்ற புராணச் செய்தியோடு கோயிலொழுகு தொடங்குகிறது. திருவரங்க விமானம் இராமபிரானால் விபீடணனுக்குப் பரிசாக வழங்கப்பெற்றதையும், அஃது காவிரியாற்றிற்கு நடுவில் சந்திரபுஷ்கரிணியின் கரையில் நிலைநிறுத்தப்பெற்றதையும் கோயிலொழுகு முதற்கண் விவரிக்கிறது. அதையடுத்து தர்மவர்மா என்ற சோழ மன்னன் கருவறையைச் சுற்றித் திருச்சுற்றுக்களையும் மண்டபங்களையும் எழுப்பிய பணிகள் இயம்பப்படுகின்றன. பிறகு காவிரி வெள்ளத்தில் விமானம் மூழ்கியப்போது மண்மேடிட்டுக் கோயில் அழிந்ததையும் அப்போது கிளிச் சோழன் தான் கனவில் கண்டபடி புதைந்துபோன திருவரங்க விமானத்தை வெளிக்கொணர்ந்து பிரதிஷ்டை செய்ததையும் கோயிலொழுகு குறிப்பிடுகிறது. இந்நூல் குறிக்கும் தர்ம வர்மா, நந்தசோழன், கிளிச்சோழன் என்ற சோழமன்னர்கள் சங்ககாலத்துக்கு மிக முற்பட்டவர்களாதல் வேண்டும். திருவரங்க விமானத்தின் வரலாற்றையடுத்து ஆழ்வார்களின் அவதாரமும் அவர்களாற்றிய கோயிற்பணிகளும் இடம் பெறுகின்றன. திருமங்கையாழ்வார் திருச்சுற்றுக்களையும், மண்டபங்களையும் அமைத்தார், ஆலிநாடன் திருச்சுற்று என்று இன்றும் அது வழங்குகிறது. குலசேகராழ்வாரின் திருப்பணிகளும், பெரியாழ்வார், ஆண்டாள் ஆகிய இருவரின் வரலாறுகளும் வருணிக்கப்படுகின்றன.

அதையடுத்து, கி.பி. 1250 தொடங்கி 1284 வரை ஆண்ட முதலாம் சடையவர்மன் சுந்தரபாண்டியனின் அறக் கொடைகள் விவரிக்கப்படுகின்றன. அவை கல்வெட்டுகளாகவும் இத்திருக்கோயிலில் காணப்படுகின்றன. கி.பி. 13ஆம் நூற்றாண்டின் முற்பாதியில் அரசாட்சி செய்த ஹொய்சாளர்களின் திருப்பணிகளும் விவரிக்கப்படுகின்றன. வீரநரசிம்மன், இராமநாதன் போன்ற ஹொய்சாள மன்னர்கள் மற்றும் சிங்கண்ணதண்டநாயக்கர், கரியமாணிக்க தண்ட நாயக்கர் போன்ற படைத்தளபதிகளின் அறப்பணிகளும்

பேசப்படுகின்றன. கி.பி. 1311 மற்றும் 1323ஆம் ஆண்டு களில் நிகழ்ந்த முகம்மதியர்களின் படை யெடுப்புகளைக் கோயிலொழுகு மிகவும் உருக்கமான உணர்வோடு விரித்துக் கூறுகிறது. அடுத்து, இராமானுசரின் வாழ்க்கைச் செய்திகள் இந்நூலில் மிகவிரிவாக இடம்பெற்றுள்ளன. ஐந்து வகைப்பட்டதாக இருந்த கோயிற்பணிகளை இராமானுசர் இருபது கொத்துக்களாக விரித்து அமைத்த வரலாறு ஆய்வாளர்களுக்கு அரிய செய்திகளைத் தருகின்றது. அடுத்து, ஸ்ரீபராசரபட்டர் மற்றும் கூரநாராயண ஜீயர் ஆகியோரின் வரலாறுகளும் அவர்கள் மேற்கொண்ட கோயிற் பணிகளும் ஸ்ரீமுதலியாண்டான், ஸ்ரீமணவாளமாமுனிகள் ஆகியோர் ஆற்றிய அரும்பெரும் தொண்டுகளும் குறிப்பிடப் படுகின்றன.

விஜயநகரப் பேரரசர்களின் சீரிய பணிகள் மற்றும் நாயக்க மன்னர்களின் ஆட்சிமுறைகள் பற்றியும் அறிவதற்கு இந்நூல் பெரிதும் பயன்படும் ஆதாரநூலாகும். கோயிலொழுகு ஆங்கிலேய ஆட்சிக்காலம்வரை குறிப்புகளைக் கொண்டுள்ளது. கி.பி. 1803இல் ஜான் வாலேஸ் என்ற ஆங்கிலேய மாவட்ட ஆட்சியரின் ஒரு தீர்ப்புரையோடு இந்நூல் முடிவுறுகிறது.

''கோயிலொழுகு'' நூல் 1888ஆம் வருடத்திலும் 1909 ஆம் வருடத்திலும் அச்சிடப்பட்டன. இரு பதிப்புகளையும் ஒப்பிட்டு 1976ஆம் வருடத்தில் ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்சனம் மாத இதழ் ஆசிரியர் ஸ்ரீ.உ.வே. கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார் தெளிவான பதிப்பாக வெளியிட்டார். கி.பி. 2005ஆம் ஆண்டு மணிப்ரவாள நடையில் அமைந்துள்ள கோயிலொழுகிற்கான விரிவான விளக்கவுரை பல்வேறு வரலாற்றுச் சான்று களுடனும், கல்வெட்டுச் சான்றுகளுடனும் திருவரங்கம் ஸ்ரீவைஷ்ணவஸ்ரீ நிறுவனத்தினரால் ஏழாயிரம் பக்கங்கள் கொண்ட நூலாக வெளியிடப்பட்டது. திருப்பதி வேங்கடேசுவரா பல்கலைக் கழகத்தில் வரலாற்றுப் பேராசிரியராகப் பணியாற்றிய Dr. V.N. ஹரிராவ் என்பவரால் 1961இல் கோயிலொழுகு பற்றி விரிவான ஆராய்ச்சி நூல் ஆங்கிலத்தில் வெளியிடப்பெற்றது. அவருடைய பதிப்பில்தான் ஆங்கிலேயே ஆட்சிக் காலத்துப் பதிவுகள் சேர்க்கப்பட்டுள்ளன.



வரலாற்று ஆசிரியர்களும், கல்வெட்டு ஆய்வாளர்களும், சமய நூல்களில் வரலாற்றுக் குறிப்புகள் அமைந்திருக்க வாய்ப்பில்லை என்ற தவறானதொரு கருத்தை இன்றுவரை கொண்டுள்ளார்கள். பல அரிய வரலாற்றுச் செய்திகள் கோயிலொழுகில் காணக் கிடைக்கின்றன. அவற்றில் சிலவற்றை கருத்தில் கொள்வோம். ஆலிநாடன் திருச்சுற்றில் தன்வந்த்ரி ஸந்நிதி அருகில் ஆரோக்யசாலை (மருத்துவமனை) இயங்கி வந்தது. சுந்தரபாண்டியன் தன் உருவத்தை பொன்னால் செய்து கோயிலில் ப்ரதிஷ்டை செய்ய விரும்பியதைக் கோயில் பரிஜனங்கள் விரும்பவில்லை. அதே கோயில் பரிஜனங்கள் கூரநாராயண ஜீயர் செய்த பெரும் தொண்டினைப் போற்றி, அவரை ஸ்ரீரங்கநாராயண ஜீயராக அமர்த்தினர். ராஜமஹேந்திரன் சோழன் காலத்தில் தென் திருக்காவிரி தெற்கு ராஜகோபுரத்திற்கு அருகில் மேற்கு கிழக்காக பெருக்கெடுத்து ஓடியது. வடதிருக்காவிரி வடக்கு கோபுர வாசலுக்கு அருகில் ஓடியது. இதனால் ஏழு திருச்சுற்றுகளுக்குள்ளும், கருவறையில் திருவனந்தாழ்வாரைச் சுற்றிலும், வெள்ளம் புகுந்து ஊற்றாய் இருந்தது. இதனை ராஜமஹேந்திரன் தடுத்து நிறுத்தினான். மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில் (கி.பி. 1178 - 1218) காவிரி சிந்தாமணி பக்கமாகத் திருப்பிவிடப்பட்டது. அப்போது சிந்தாமணி கிராம மக்கள் தங்கள் ஊர்ப்பக்கம் காவிரியைத் திருப்பிவிடக் கூடாது என்று போராட்டம் நடத்தினர். மன்னர்களின் பிரதிநிதிகள் கோயில் சொத்தை அபகரிக்க முயன்றபோது, கோயிலில் கூடியிருந்த அனைவரும் அதற்கு எதிர்ப்பு தெரிவித்தனர். தற்கொலை முயற்சிகளிலும் ஈடுபட்டனர். அவர்களின் திருவுருவச் சிலைகளை வெள்ளைக் கோபுரத்து வாயில்களில் பொறித்து வைத்தனர்.

கி.பி. 1534ஆம் ஆண்டு நாட்டில் பஞ்சம் வந்து நெல் கிடைக்காமல் இருந்த சமயம் கோயிலுக்குச் சொந்தமான நிலங்களிலிருந்தும், 282 கிராமங்களிலிருந்தும் வந்த நெல்

கோயில் கொட்டாரத்தில் சேமித்து வைக்கப்பட்டிருந்தது. இதனை கொடுக்க வேண்டுமென்று மதுரை நாயக்கர் கேட்டார். அதற்கு மறுப்பு தெரிவித்து உயிர்த்தியாகம் செய்தார் உத்தமநம்பி வம்சத்தைச் சார்ந்த ஒருவர். அது முதல் கொட்டாரத்திற்கு வந்த நெல்லை பெருமாளுக்கு அமுது படைப்பதற்குத் தவிர வேறு காரியத்திற்கு எடுத்துக் கொள் ளக்கூடாது என்று முடிவெடுக்கப்பட்டது. கி.பி. 1323ஆம் ஆண்டு நிகழ்ந்த உலூக்கானின் படையெடுப்பில் 12,000 ஸ்ரீவைஷ்ணவர்கள் கொல்லப்பட்டனர். இந்நிகழ்ச்சியினை பன்னீராயிரவர் முடிதிருத்திய பன்றியாழ்வான் மேட்டுக்கல கம் என்று கோயிலொழுகு குறிப்பிடுகிறது. கி.பி. 1323ஆம் ஆண்டில் முகம்மதியர்கள் திருவரங்கம் கோயிலைக் கைப் பற்றி உள்ளே புகுந்தபோது, ஒரு தேவதாசி கோயிலைப் பாதுகாத்தாள்.

அவளுக்குச் செய்யப்படும் மரியாதையாக தேவதாசி குலத்தில் யார் இறந்தாலும் திருக்கோயில் மடைப்பள்ளியி லிருந்து அந்த உடலை எரியூட்டுவதற்கான நெருப்பு அனுப்பி வைக்கப்பட்டது. 1953ஆம் ஆண்டு வரை இந்த மரியாதை நடைபெற்று வந்தது என்பது குறிப்பிடத்தக்கது. குலசேகராழ்வார் தன் மகளான சேரகுலவல்லியை அழகிய மணவாளனுக்குத் திருமணம் செய்வித்து, தம்முடைய தனத்தை பெருமாளுக்கு ஸ்ரீதனமாக ஸமர்ப்பித்து, சேனை வென்றான் மண்டபம்கட்டி, திருச்சுற்றுத் திருப்பணி செய்து, அதனால் மூன்றாம் திருச்சுற்றிற்கு குலசேகரன் வீதி என்று பெயர் சூட்டப்பெற்றது. பத்தாம் நூற்றாண்டில் நிகழ்ந்த ஒட்டர்கள் கலகத்தின்போது பாதுகாப்புக்காக அழகிய மணவாளன் திருமாலிருஞ்சோலைமலையில் ஓர் ஆண்டு எழுந்தருளியிருந்தார். திருவரங்கம் கோயில் வரவு செலவு கணக்குகள் சரியாகப் பேணப்படாமல் ஊழல்கள் மலிந்துள் ளதைக் கண்ட இராமாநுசர் நிர்வாஹத்தை சீர்திருத்த பல புதிய திட்டங்களை அமுல்படுத்தினார்.

கலியுகராமன் என்று அழைக்கப்படும் மூன்றாம் சடையவர்மன் வீரபாண்டியன் 1297முதல் 1342 வரை ஆட்சி



செய்தவன். தான் ஏற்படுத்திய சதுர்வேதி மங்கலத்தில் ஸ்ரீவைஷ்ணவர்கள் நிலங்களை விற்பதாக இருந்தால் தங்களுக்குள்ளேயே விற்றுக்கொள்ள வேண்டும் என்றும், இல்லாவிடில் இராமாநுச தர்சனத்தைப் பின்பற்றும் பாகவதர் களுக்கே விற்க வேண்டும் என்று ஆணையிட்டான். திருவ ரங்கம் பெரியகோயிலின் வரலாறும் வைணவ வளர்ச்சியின் வரலாறும் ஒன்றுக்கொன்று பின்னிப் பிணைந்துள்ளவை. இதனை தெரிவிப்பதே கோயிலொழுகு. வரலாற்றுச் செய்திகள் பலவற்றைத் தன்னுள்ளே கொண்ட கோயிலொ ழுகு பல அருந்தமிழ்ச் சொற்கள் நிறைந்துள்ளதால் தமிழ் இலக்கியமாகவும் போற்றப்படுகிறது. மேலும் கோயிலொ ழுகில் குறிப்பிடப்படும் பல செய்திகளுக்குத் திருவரங்கம் கோயிலில் அமைந்துள்ள கல்வெட்டுகள் சான்றுகளாகத் திகழ்கின்றன.

கோயிலொழுகில் குறிப்பிடப்படும் பல விழாக்கள் இன்று நடைமுறையில் இல்லை. பலவிழாக்கள் மாற்றம் பெற்றுள்ளன. கோயில் வழக்கங்களைப் பற்றிய தொகுப்பாக விளங்குகிறது கோயிலொழுகு. இதன் பிரதிகள் பலமுறை படி எடுக்கப்பட்டுள்ளன. இதன் காரணமாக இதில் குறிப்பிடப் படும் நிகழ்ச்சிகளில் பல இடங்களில் தொடர்பின்மை காணப்படுகிறது. அந்தந்தக் காலங்களில் மன்னர்களால் ஏற் படுத்தி வைக்கப்பட்ட கல்வெட்டுச் சாஸனங்களின் அடிப் படையில் 'கோயிலொழுகு' எழுதப்பட்டுள்ளது என்பதைக் கல்வெட்டுகளையும் கோயிலொழுகினையும் இணைத்துப் படிப்போர் எளிதில் அறிந்து கொள்ள இயலும்.

திருமங்கையாழ்வார் திருவரங்கத்தில் பலஆண்டுகள் எழுந்தருளியிருந்து கைங்கரியங்கள் பலவற்றைச் செய்து வந்தமையைக் கோயிலொழுகு மிகத்தெளிவாகக் குறிப் பிடுகிறது. படிப்போருக்கு எளிதில் விளக்கம் கொள்ள முடி யாத பலசொற்கள் அமைந்துள்ளன. திருவரங்கம் பெரிய கோயிலுக்கே உரித்தான கோயில் தமிழ்ச் சொற்கள் இடம் பெற்றுள்ளன. சொற்றொடர்களில் முறையாக அமைய வேண்டிய சொற்கள் இடம் பெயர்ந்து தமிழ் இலக்கண

முறைக்கு சற்று மாறுபட்டுள்ளன. திரு. ஆர்.செவல் (R.Sewell) தம்முடைய 'பண்டைய பொருள்களின் தொகுப்பு' என்ற நூலில் (List of Antiquities) ஸ்ரீரங்கத்தில் உள்ள ஸ்தலத்தார்களிடம் சுவடி ஒன்றுள்ளது. அந்தச் சுவடி மிக முக்கியத்துவம் வாய்ந்தது. இதிகாச புராணங்களின் அடிப் படையில் தெரிவிக்கப்படும் ஸ்ரீரங்க மாஹாத்மியத்தைவிட ஆதாரபூர்வமான செய்திகளைக் கொண்டது. இந்த சுவடிக்கு 'வரகு' என்று பெயர். *இதில் ஸ்ரீரங்கம் கோயிலைச் சார்ந்த அனைத்து ஸ்தலத்தார்கள் ஆசார்யர்களைப் பற்றியும் கோயில் நிர்வாக முறையைப் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது"* என்று தெரிவித்துள்ளார்.

***கோயிலொழுகைப்*** *பற்றிய சுருக்கமான குறிப்புகள்* Epigraphica Indica Vol.VI, P.322இல் *அமைந்துள்ளன. ஆய்வு நோக்கில்* ***கோயிலொழுகைப்*** *பற்றிய செய்திகளை* கே.வி.*சுப்ரமணிய அய்யர் அவர்கள்* Indian Antiquiry, Vol.XL, *(இந்திய நாட்டின் பழைய சரித்திரங்களை ஆராயும் நூல்)* பக்கங்கள் 131-144-இல் *தந்துள்ளார்.* இரண்டு **கோயிலொழுகு** பதிப்பு கள் அச்சுவடிவில் வெளிவந்துள்ளன என்று முன்னரே குறிப் பிட்டுள்ளேன். இந்த இரண்டு பதிப்புகளுமே வெவ்வேறு சுவடிகளை ஆதாரமாகக் கொண்டு பதிப்பிக்கப்பட்டுள்ளன என்பதை அந்த இரண்டு பதிப்புக்களைக் கொண்டு நாம் அறிந்து கொள்ளலாம். இந்த இரண்டு பதிப்புகளுக்குள்ளே சில முரண்பாடுகள் காணப்படுகின்றன. ஆனந்தா அச்சுக்கூடத் தாரால் வெளியிடப்பட்ட **கோயிலொழுகு,** கோயில் கைங்கர்யங்களைப் பற்றி விரிவாகக் குறிப்பிடுகிறது. உமாபதி குருபிரகாசம் அச்சுக் கூடத்தாரால் வெளியிடப்பட்ட **கோயி லொழுகு** கோயில் கைங்கர்யங்களைப் பற்றிய எந்தக் குறிப்பு களையும் தரவில்லை. மேலும் நிகழ்ச்சிகளை விவரிக்கும் முறைகளிலும் இந்த இரண்டு பதிப்புகளுக்கும் இடையே ஒருமைப்பட்ட அணுகுமுறை கையாளப்படவில்லை. இந்த இரண்டு பதிப்புகளிலும் முடிவு நிகழ்ச்சியாக மதுரை நாயக்க மன்னனான முதலாம் முத்து வீரப்பநாயக்கர் கால நிகழ்வு களோடு முடிவடைகிறது. *(கி.பி.1609-ஆம் ஆண்டோடு நிகழ்ச்சிகள் முடிவடைகின்றன.)* (தொடரும்)

# துணுக்குத் தோரணம்

**1. திருவெள்ளறையில் 'படிப்பு' சேவித்தல்.**

திருவெள்ளறை ஸ்ரீபங்கஜநாயகி ஸமேத ஸ்ரீபுண்டரீ காக்ஷப்பெருமாள் ஸந்நிதியில் ரக்ஷாபதந்தன உத்ஸவமான தாயார் நவராத்ரி - மஹா நவமி சாற்று முறையன்று தாயார் படிப்பும், பங்குனி பிரம்மோத்ஸவத்தில் ஸப்தாவர்ணத்தன்று பெருமாள் திருமஞ்சனம் திருவீதி புறப்பாடு கண்டருளி உள்ளே எழுந்தருளும்முன் பெருமாள் படிப்பும் பன்னெடுங் காலமாக எங்களாழ்வான் வம்சத்தவர்களான திருவெள்ளறை கீழைத்திருமாளிகை ஸ்வாமிகளால் ஸேவிக்கப்பட்டு வருகி றது. புதிதாகத் தொடங்கப்பட்டு ஐப்பசி மாதத்தில் நடை பெற்றுவரும் புண்டரீகாக்ஷப் பெருமாள் ரக்ஷாபந்தன உத்ஸவ மான டோலோத்ஸவ சாற்றுமுறையன்று பெருமாள் படிப்பும், அதே மாதத்தில் நடைபெறும் ரக்ஷாபந்தன உத்ஸவமான தாயார் டோலோத்ஸவ சாற்றுமுறையன்றும் முறையே பெருமாள் மற்றும் தாயார் படிப்புகள் கீழைத்திருமாளிகை ஸ்வாமிகளால் ஸேவிக்கப்பட்டு வருகிறது. நீண்டகாலமாக நடைபெற்று வந்த, இடையில் தடைபட்டுப் போன பவித்ரோத்ஸவம் சென்ற நான்கு ஆண்டுகளாக மீண்டும் நடைபெற்று வருகிறது. மற்றைய ரக்ஷாபந்தன உத்ஸவங் களைப் போலவே சாற்றுமுறையன்று படிப்பு ஸேவிக்கும் வழக்கம் நடைமுறைப்படுத்தாமல் கொண்டாடப் பட்டு வருகிறது. இது ஒரு குறையே. நீண்டகால பழக்கவழக் கங்களை கொண்டாடி வருவதே ஸ்ரீவைஷ்ணவத்தில் உடையவர்காலந்தொட்டு கைக்கொள்ளப்பட்டு வரும் மரபாகும்.

திருவரங்கத்தில் ஆயனார் வம்சத்தவர்கள் இல்லாத தைக் காரணங்காட்டி படிப்பு ஸேவிப்பதை நிறுத்தி விட் டார்கள். படிப்புத் தீர்த்தம் மட்டும் வழங்கி வருகிறார்கள். இது ஒரு முரண்பாடான செயலாகும். அமுதனார் வம்சத்தவர்

களுடைய பல கைங்கர்யங்களுக்கு மாற்று ஏற்பாடு செய்யப் பட்டு அவை நடைபெற்று வருகின்றன. உதாரணத்திற்கு இராப்பத்து இறுதி நாளன்று இயற்பா ஸேவித்தல், கும்ப ஹாரத்திக்கு தட்டி கொண்டு வருதல் போன்றவை. ஆனால் பெரிய பெருமாள் திருப்பாற்கடலில் ஆவிர்பவித்த நிகழ்ச்சி தொடங்கி திருவரங்கத்தில் பல்வேறு திருப்பணிகளை மேற் கொண்ட ஸ்தலாசார்யர்கள் பெருமை வரை இந்தப் படிப்பில் அமைந்துள்ளன. அழகான சொற்கட்டுக் கொண்ட இந்தப் படிப்பை ஏதோ காரணங்காட்டி நிறுத்தி விட்டார்கள். இது பற்றி திருவரங்கத்தில் யாருக்கும் எந்தக் கவலையும் இல்லை. ஆனால் தினந்தோறும் ஸ்ரீவைஷ்ணவர்கள் ''ராமாநு ஜார்யதி$_3$வ்யாஜ்ஞா ப்ரதிவாஸரமுஜ்ஜ்வலா| தி$_3$க$_3$ந் தவ்யாபி நீ பூ$_4$யாத் ஸா ஹி லோகஹிதைஷிணீ ||'' ''ஸ்ரீமந் ஸ்ரீரங்கநச்ரி யமநுபத்$_3$ரவாமநுதி$_3$நம் ஸம்வர்த்த$_4$ய | ''ஸ்ரீமந் ஸ்ரீரங்க நச்ரியமநுபத்$_3$ரவாமநுதி$_3$நம் ஸம்வர்த்த$_4$ய ||'' என்று சொல் வதின் பொருள் என்னவோ? இது பொருளற்ற கடலோசை போலும். ஆனால் மிராசுபாத்யதை உடையவர்கள் எழுந்தருளி யிருக்கும் திருவெள்ளறையில் ஏதோ ஒரு காரணங் காட்டிப் படிப்பு இல்லையென்று செய்வது கூடாது. ஆகவே நீண்ட காலக் பழக்கவழக்கங்களையொட்டி அனைத்து ரக்ஷா பந்தன உத்ஸவங்களிலும் படிப்பு ஸேவிக்கப்பட வேண்டும்.✱✱✱

**2. சில உண்மைகள். கடிதம் எழுதியவர் கலியன் ராமானுஜதாஸன், நாகர்கோயில்.**

பாஞ்சஜன்யம் இதழ் 161இல் அமைந்துள்ள இரண் டாவது தலையங்கத்தைப் படித்தேன். தமிழகத்தில் இம்மா திரியான பித்தலாட்ட பேர்வழிகள் பலர் உண்டு. உதாரணத் திற்கு தமிழன் பெயரில் தொலைகாட்சி. ஆனால் கிறிஸ்தவ மதபிரச்சாரமும், இஸ்லாமிய மதபிரச்சாரமும் நடைபெற்று வருகிறது. ஆச்சி மசாலா நடத்துபவர் ஐசக் என்ற பெயர் கொண்ட கிறிஸ்தவர். இதைப்போலவே தான் விஜய் டி.வி. தொகுப்பாளர் கோபிநாத் (நீயா? நானா?). இவரது இயற் பெயர் ஜோஸப் என்பது பலர் அறியார். இதுபோலவே ம.தி.மு.க. வை. கோபால்சாமி ஒரு கிறிஸ்தவர். தினசரி பைபிள் படிப்பவர் என்பதும் பலபேருக்கு தெரியாது. புதிய தமிழகம் கட்சி தலைவர் கிருஷ்ணசாமி ஒரு இந்து அல்ல.



அந்தப் பெயரில் நடமாடும் ஒரு கிறிஸ்தவர். ஜனதா தளம் கட்சி எம்.பி., ராம் விலாஸ் பாஸ்வான், ஒரு கிறிஸ்தவர் என்பதும் பலர் அறிந்திராத செய்தியாகும். ✱✱✱

**3. தரமற்ற வணிக வளாகத்தால் ஆண்டுக்கு ரூ. 9 கோடி இழப்பு. 15 ஆண்டுகளாக கண்டுகொள்ளாத அறநிலை யத்துறை.**

இந்துசமய அறநிலையத்துறையால் கட்டப்பட்ட வணிக வளாகம், எவ்வித பயனுமின்றி பாழடைந்திருப்பதால், ஆண்டுக்கு ஒன்பது கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டு வருகிறது. இந்த லட்சணத்தில், இந்த கட்டடத்தை இடித்து விட்டு, மேலும் பலகோடி ரூபாய் செலவில் புதிய கட்டடம் கட்டவும் அறநிலையத்துறை திட்டமிட்டு வருகிறது. கடந்த, 1997ஆம் ஆண்டு, ராஜா அண்ணாமலைபுரத்தில் உள்ள, சேமியர்ஸ் சாலையில், மயிலாப்பூர் கபாலீசுவரர் கோயிலுக்கு சொந்தமான இடத்தில், 1.5 கோடி ரூபாய் செலவில், அடுக்குமாடி வணிக வளாகம், கட்டப்பட்டது.

**முன்பணத்தால் வழக்கு:**

இக்கட்டடத்தின் ஒரு பகுதியில், தனியார் உணவக நிறுவனம், முன்பணமாக, 32 லட்சம் ரூபாயை, இந்து சமய அறநிலையத்துறைக்கு செலுத்தியது. கடந்த, 1998ஆம் ஆண்டு கட்டுமான பணி, நிறைவடைந்தபோது, கட்டடம் மோசமாக இருப்பதால், உணவகம் நடத்த முடியாது' எனக்கூறி அந்த நிறுவனம் செலுத்திய முன்தொகையை திரும்பக் கேட்டது. ஆனால் குறிப்பிட்ட காலத்திற்குள், இந்து சமய அறநிலையத்துறை கட்டடத்தை ஒப்படைக்காததுடன், அந்த நிறுவனம் செலுத்திய, 32 லட்சம் ரூபாயையும் மீண்டும் அளிக்கவில்லை. இதனால், உணவக நிர்வாகம் நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தது. வழக்கு நிலுவையில் இருந்ததால், 15 ஆண்டுகளாக அந்த வணிக வளாகம் செயல் படாமல், பாழடைந்த கட்டடமாக மாறிவிட்டது.

இன்று, நகரத்தின் முக்கியமான இடத்தில் அமைந்துள்ள அந்த இடத்தில் ஒரு கிரவுண்ட் நிலம், மாதம் மூன்று லட்சம் ரூபாய் வாடகைக்கு வழங்கப்படுகிறது. 20

கிரவுண்ட் நிலம் உள்ள அந்த வளாகத்திற்கு, மாதம், 60 லட்ச ரூபாய் வாடகை கிடைக்கும். மேலும் வாகன நிறுத்தும் இடம் மற்றும் சிறுவணிக கடைகள் அமைக்கப்பட்டால், ஆண்டுக்கு இரண்டு கோடி ரூபாய் வருமானம் வரும். ஆனால், மோசமான கட்டுமானத்தாலும், முறையான திட்டம் இல்லாததாலும், இந்து சமய அறநிலையத்துறைக்கு, ஆண்டுக்கு ஒன்பது கோடி ரூபாய் வருவாய் இழப்பு ஏற்பட்டு வருகிறது.

**சமூக விரோதச்செயல்**

இதுகுறித்து, அந்த பகுதிவாசிகள் கூறியதாவது: இந்த வணிக வளாகம் மூடப்பட்டு, 15ஆண்டுகள் ஆகின்றன. இப்பகுதியில், பொதுமக்களின் நடமாட்டம் அதிக அளவில் இல்லாததால், சமூக விரோதிகள், தங்களின் செயல்களுக்கு இந்த வளாகத்தை பயன்படுத்துகின்றனர். ஆண்டவன் சொத்தில் கட்டப்பட்ட இந்த வணிக வளாகத்தில், பலான காரியங்களும் நடக்கின்றன. இந்து சமய அறநிலையத்துறை, உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அவர்கள் தெரிவிக்கின்றனர்.

**பொது ஏலம்:** இது குறித்து இந்து சமயஅறநிலையத்துறை கமிஷ்னர், தனபால் கூறுகையில், குறிப்பிட்ட தனியார் உணவக நிறுவனத்திற்கு வழங்க வேண்டிய நிலுவைத் தொகையை வழங்கி விட்டோம். அந்த இடத்தை பொது ஏலம் விட, ஆலோசித்து வருகிறோம். பயன்படுத்த முடியாத நிலையில் உள்ள அந்தக் கட்டடத்தை இடித்து, புதிய கட்டடம் எழுப்ப முயற்சித்து வருகிறோம் என்றார். கடந்த 15 ஆண்டுகளாக பயன்பாட்டில் இல்லாததால், கட்டடம் பாழடைந்து, எந்நேரமும் இடிந்து விழலாம் என்ற நிலையில் உள்ளது. எனவே, அறநிலையத்துறை, இப்பிரச்னையில் உடனடியாக முடிவெடுக்க வேண்டும் என்ற கோரிக்கை எழுந்துள்ளது.

**விடை தெரியாத கேள்விகள்**

கட்டுமானப் பணி நடந்தபோது, அவ்விடத்தில் அற நிலையத் துறையினர் ஆய்வு செய்யாதது ஏன்? உணவகம் நடத்த முடியாது என, தனியார் நிறுவனம் புகார் அளித்த பிறகும், கட்டுமான நிறுவனத்திற்கு, நிலுவை தொகை அனைத்தையும் வழங்கியது ஏன்? கட்டுமான நிறுவனம் மீது, குற்றச்சாட்டு இருந்தபோதும், பாதுகாப்பு தொகையைக்கூட நிலுவையில் வைக்காமல் வழங்கியது ஏன்? தர கட்டுப்பட்டு சான்றிதழ் வாங்குவதற்கு முன்பே, அனைத்து தொகையையும் கட்டுமான நிறுவனத்திற்கு வழங்குவதில், அதிகாரிகள் ஏன் அவ்வளவு ஆர்வமாக இருந்தனர்? இதுபோன்ற கேள்வி களுக்கு விடை தெரிந்தால், வணிக வளாகம் கட்டப்பட்டதில் நடந்த முறைகேடுகள் வெளிவரும் என, சமூக ஆர்வலர்கள் தெரிவித்தனர். தினமலர் நாளிதழ், சென்னை பதிப்பு, 29.10.2012 அன்று வெளிவந்த செய்தி.

இதேபோன்று திருவரங்கத்தில் அமைந்துள்ள மதுரகவி நந்தவனத்தில் தங்கும் விடுதி ஒன்று கட்டப்பட்டு பல ஆண்டுகளாக உபயோகத்தில் இல்லை. அந்த இடத்திற்கு உரிய விலையைத் தரவேண்டுமென்று, மதுரகவி நந்தவன டிரஸ்ட் இந்துசமய அறநிலையத்துறைக்கு கோரிக்கை வைத் துள்ளனர். மதுரகவி நந்தவன டிரஸ்ட் போர்டில் அரங்க நாதர்கோயில் செயல்அலுவலரும் ஒரு அங்கத்தினர் ஆவார். மதுரகவி நந்தவனம் கோயிலுக்கே சொந்தமானது என்று தற்போது இந்துசமய அறநிலையத்துறை ஒரு அறமற்ற கோரிக்கையை முன்வைத்து, அந்த இடத்திற்கு எந்தக் கிரயத் தொகையையும் செலுத்த வேண்டிய அவசியமில்லை யென்றும் கூறி வருகிறது. இதில் வேடிக்கை என்ன வென்றால், முழுமைபெற்ற இந்த விடுதி பல ஆண்டுகளாக பூட்டிக் கிடக்கின்றது. இதில் விளங்காத பல புதிர்கள் உண்டு. அரங்கன் ஒருவனே அதை அறிவான். இதுபோன்று எந்தெந்த ஊர்களில் ஆண்டவன் சொத்தை யார் யார் விழுங்கி கொண்டிருக்கிறார்கள் என்று இந்துசமய ஆர்வலர்கள் ஆராய்வதற்கு முன்வரவேண்டும். அப்படி ஆராய்வது மட்டும போதாது. வழக்குத் தொடர்ந்து ஊழல் பெருச்சாளிகளை இனங்கண்டுகொள்ளவேண்டும். இதற்கு இந்துசமயச் சார்ந்த மடாதிபதிகளும், வழக்கறிஞர்களும், முக்கியப்புள்ளிகளும் முன்வருவார்களா? இது ஒரு கேள்விக்குறியே!.

4. ''சைவமும், வைணவமும் கிறிஸ்தவ சமையத்தின் பிரிவுகளே. கர்த்தரின் சமயம் மட்டுமே அன்பினால் ஆனது'' என்று இடைவிடாது செய்யப்படும் பொய்ப் பிரச்சாரத்திற்கான ஓர் மறுப்பு. (மறுப்புத் தெரிவிப்பவர். சா.காசிவேலு B.Sc(Ag), 1/60. அருணாசலசாமிகோயில் தெரு, உமரிக்காடு - 628 151, தூத்துக்குடி மாவட்டம்.)

சாத்தூரில் பிறந்து, தற்போது சென்னை சேலையூரில் வசிக்கும் சகோதரர் தாயப்பன் என்பவர் தனது 58 வயதுவரை பக்தி வைராக்கியமுளள (மேல் மருவத்தூர் அன்னையை வழிபட்டு) சீரிய பொருளாதாரம் பெற்ற நிலையில் வாழ்ந்து வந்ததாகவும், அன்னார் மகனுக்கு அமெரிக்காவில் மாதம் இரண்டரை லட்சம் சம்பளத்திற்கு வேலை கிடைத்ததாகவும், அங்கு சென்ற மகனுக்கு பெரும் வியாதி பற்றியதால் பலமாதமாக அவன் மயக்க நிலையில் இருந்ததாகவும், கர்த்தராகிய தேவன் இவரை அடையாளம் கண்டு தன் கருணையினால் காப்பாற்றியதாகவும், அதன் காரணமாக உண்மையான சமயத்திற்கு (கிறிஸ்தவ சமயத்திற்கு) மதம் மாறிவிட்டதாகவும் கூறிவருகின்றார். தான் மதம் மாறிய இந்நிகழ்ச்சியை வெளிப்படுத்திடும் வண்ணம் பல புத்தகங் களையும் VCDகளையும் ஆயிரக்கணக்கில் பிரதிகள் செய்து வெளியிட்டதோடு பல நற்செய்தி கூட்டங்களையும் நடத்தி வருகின்றார்.

இவர் மதம் மாறியதுபற்றி நமக்கு பெரிதும் ஆதங்கம் இல்லை. அது அவர் விருப்பம். ஆனால் அவர் கர்த்தரின் போதனைகளை மக்களுக்கு புகட்டுவதற்கு பதிலாக இந்து சமயத்தின் மீது சேற்றை வாரி இறைக்கும் பல புரட்டு வாதங்களை பேசியும் எழுதியும் வருகின்றார். அவற்றில் சில பின்வருமாறு:-

1. சித்தகர்கள் இந்து சமயத்தை எதிர்த்தனர். அவர்கள் பாடல்களில் கிறிஸ்த்துவ மதக்கொள்கை வெளிப்படுத்தப் பட்டுள்ளது. 2. சைவமும், வைணவமும் கிறிஸ்த்துவ சமயத்தின் பிரிவுகளே. 3. வேதங்கள், உபநிஷத்துக்கள் ஆகியவை, நமக்காக உயிரைவிட்ட அந்த தியாகேச்வரனை (இயேசு கிறிஸ்துவை), பரமேச்வரனை, அகிலாண்டேச்வ



ரனைச் சுட்டிக் காட்டுபவையே! 4. கர்த்தரின் சமயம் மட்டுமே அன்பினால் ஆனது! 5. திருக்குறள் ஓர் கிறிஸ்த்துவ சமயநூல்.

சகோதரர் தாயப்பன் அவர்களின் இத்தகைய திரிபு வாத புரட்டுவாத கருத்துக்களுக்கு நல்லெண்ணம் கொண்ட வர்கள் எதிர்வாதம் முன்வைப்பது இயற்கையானதொன்றே. அதன் அடிப்படையில் சகோதரர் தாயப்பன் அவர்களுக்கு நான் 12.9.2012இல் எழுதிய மறுப்பு கடிதத்தின் நகல் ஒன்றினை இத்துடன் அனுப்பியுள்ளேன்.

அன்புடையீர்!

''புதிதாக இரட்சிக்கப்பட்ட பின்னர் தாங்கள் வெளியிட்டுள்ள ''என் அழுகையும் ஆனந்தப் புதுவாழ்வும்'' எனும் குறுந்தட்டும் (VCD) ''சித்தர்கள் கண்ட மெய்ப் பொருள்'' எனும் புத்தகத்தையும் பார்த்து படித்து புரிந்து கொண்டேன். இப்பிரசுரங்களில் இழையோடியிருக்கும் ஓர் ''உத்வேகம்'' புதிதாக மதம் மாறிய அனைத்து நபர்களிடமும் எதிர்பார்க்கக் கூடியதே. இந்த உத்வேகம் கடந்த கால உண்மைகளை மறைத்து, புதிதாகச் சேர்ந்துள்ள மதத்தைப் பரப்ப குறுக்கு வழிகளை தேடத் தூண்டுகிறது.

இந்து சமயத்தில் பற்றுக் கொண்டவன் என்ற முறையில் தங்களது VCDக்கும், புத்தகத்திற்கும் பதிலளிக்க நான் கடமைப்பட்டுள்ளேன்.

1. இந்து சமயத்தில் அக சமயவாதிகள், புற சமயவாதிகள் என இருபெறும் பிரிவுகள் உண்டு. இதில் சித்தர்கள் அகசமய வாதிகள். ''இறைவனை வெளியில் (சிலையிலோ, கோயி லிலோ, மேகத்திலோ) தேடாதே, அவனை உன் இதய குகையில் தேடு'' என்பதே அவர்களின் சித்தாந்தம். இக்கொள்கை அனைவருக்காவும் கூறப்பட்டது. இந்துக் களுக்கு எதிரானது அல்ல.

2. தங்களை 58 வயது வரை, அதாவது மதம் மாறும் வரை சிறப்பாக வாழ வைத்தது இந்து சமயமும், இந்து கலாச் சாரமும், இந்து வழிபாட்டு முறையுமே என்பதை இப்போதா வது அறிந்து கொள்ளுங்கள். கடந்த காலத்தின் மீது சேற்றை

வாரி இரைப்பதை தவிர்க்கவும், புதிதாக இரட்சிக்கப் படுவதற்கு முன்பு உங்கள் மகனுக்கு சிங்கப்பூரிலும், பின்னர் அமெரிக்காவிலும் மாதம் இரண்டரை லட்சம் சம்பளம் வழங்க வைத்தது யார், மேல்மருவத்தூர் அன்னையா? அல்லது சாத்தானா? அல்லது கர்த்தரா?. உங்களை தடுத்தாட்கொள்ள முயன்ற இறைவனின் செயலை அறியாமல் நிலை தடுமாறிவிட்டீர்களே! நோய்வாய்ப்பட்டிருந்த பையனை மூன்று மாத காலத்தில் காப்பாற்றியது கர்த்தர் என்றால், அதற்கு முந்தைய பல வருட கால கட்டத்தில் நோயிலிருந்தும், விபத்துகளிலிருந்தும், உங்களையும் மகனையும் காப்பாற்றியது எம்பெருமான் தானே!. கடந்த கால மகிழ்ச்சியையும், ஆனந்த பழைய வாழ்வையும் இவ்வளவு சீக்கிரம் மறந்துவிட்டீர்களே!. வாழ்க்கை என்பது மகிழ்ச்சியும், ஆங்காங்கே துயரமும் நிறைந்ததே. இதன் அடிப்படையில் மீண்டும் துயர சம்பவங்கள் எதனையும் நீங்கள் இனி உங்கள் வாழ்வில் எதிர்கொள்ள நேர்ந்தால் கர்த்தரை கைகழுவி விட்டு, சாத்தான் பக்கம் சாய்ந்து விடுவீர்களா? அல்லது சாத்தான் மற்றும் அவனின் சேனைகளாகிய பிசாசுவின் வேலை இது என வழியை போட்டுவிட்டு கர்த்தரின் பக்கத்திலே இருந்து விடுவீர்களா? என அறிந்து கொள்ள ஆவலுடையவனாய் இருக்கிறேன். கர்த்தரை ஏற்றுக் கொண்டவர்கள் தானே அதிகமாக சுனாமி யினாலும், விபத்தினாலும், இதய நோய் மற்றும் புற்று நோயாலும் இறந்து விடுகின்றனர் என்பதை தாங்கள் அறிய வில்லையா? இந்துக்களைவிட உங்களது சமயத்தவருக்கு சராசரி வயது கூடியுள்ளதா? சற்று சிந்திக்கவும்.

3. இந்து சமயம் மனிதன் மோட்ச கதி அடைய கர்மம், ஞானம், யோகம், பக்தி ஆகிய மார்க்கங்களை போதித்து அவனுக்கு சாத்வீக வாழ்க்கை வழங்கிட கடந்த 10,000 வருட காலத்திற்கு மேலாகி ஸேவை புரிந்துள்ளது. ஆனால் கிறிஸ்த்துவம் கடந்த 2,000 ஆண்டில் உலகிற்கு வழங்கியவை யாது என்பதை இனி பார்க்கலாம்.

4. அ) பதின்மூன்றாம் நூற்றாண்டில் தொடங்கி 400 ஆண்டுகளாக கிறிஸ்த்துவர்கள் நடத்திய திருச்சிலுவை



யுத்தத்தில் 30 லட்சம் யூதர்களும், இஸ்லாமியர்களும் கொல்லப்பட்டனர்.

ஆ) சாத்தானையும் பிசாசினையும் வேட்டை யாடுவதாக அறிவித்து 16ஆம் நூற்றாண்டு தொடங்கி 20ஆம் நூற் றாண்டு வரை 3,00,000 அறிவும் அழகுமுள்ள பெண்களை சூனியகாரிகள், மந்திரவாதிகள் Witch Hunting என்று பழி சுமத்தி ஐரோப்பாவில் தீயிலிட்டு கொன்றனர். இதனை நடத்தியது உங்கள் புதிய சமயத்தினரே.

இ) கிறிஸ்த்துவத்தை பரப்ப 1549ஆம் ஆண்டில் டிகோ- டி-லண்டா எனும் ஸ்பெயின் நாட்டு கத்தோலிக்க பாதிரியார் தலைமையில் தென் மற்றும் மத்திய அமெரிக்காவில் இன்கா மற்றும் மாயன் இன மக்கள் ஒரு கோடி பேர்கள் கொல்லப்பட்டனர். இந்தக் கொலையைச் செய்தது உங்கள் மதம் தானே.

ஈ) தேவகுமாரனின் நீதி விசாரணை (Inquistion) எனும் நீதிமன்றங்கள் மூலம் உலகெங்கும் (கோவா உட்பட) மாற்று மதத்தினர் சுமார் 5 லட்சம் பேரை கொன்று குவித்தது உங்கள் புதிய சமயத்தினர் தானே!.

உ) வட அமெரிக்காவில் ஒரு கோடி சிவப்பு இந்தியர் களையும், ஆஸ்திரேலியாவில் இரண்டு கோடி பூர்வ குடிமக்களையும் கொன்றது உங்கள் புதிய சமயத்தவர் தானே! (இந்த கொலைக்கு சமீபத்தில் போப் ஆண்டவர் மன்னிப்பு கேட்டதை நினைவுபடுத்த விரும்புகிறேன்.)

ஊ) ஆதிப் பெண் ஏவாள் தடை செய்யப்பட்ட ஞானப் பழத்தை சாப்பிட்டதற்காக பெண் குலம் முழுமைக்கும் பிரசவ வேதனை எனும் சாபத்தையும், மனித குலம் முழுமைக்கும் ''மரணம்'' எனும் நியதியையும் நீக்க முடியாத திருக்குமாரனின் மனிதப் பிறவியும், வாழ்வும், தகன பலியும் யாருக்காக?)

எ) பெண் ஓர் பாவப் பிறவி. ஆதி சாபம் மனித குலத்திற்கு வழங்கப்பட்டதற்கு அவளே காரணம். எனவே அவள் இறைவன் ஸன்னிதியில் வெட்கத்துடன் முக்காடிட்டு

இருக்க வேண்டும், எனும் முக்காடு போட்டுக் கொள்ளும் பழக்கத்தை இன்றுவரை வேதக்கோயில்களில் கடைப்பிடிக் கின்றீர்களே. இது மூட நம்பிக்கை என தெரியவில்லையா? பெண்களுக்கு மதிப்பும் மரியாதையும் வழங்க உங்கள் கூட்டத்தவர்களுக்குத் தெரியவில்லையே! (பார்க்கவும்: கொரிந்தியர் 11:3-9, 14:34-35, திமோதி 2:11-14)

ஏ. பழைய ஏற்பாட்டில் ''லோத்'' என்பவரை சுற்றி நடந்ததாகக் கூறப்படும் காம களியாட்டம் மனத்தை நெருடவில்லையா? (ஆதி:19-30-38)

ஐ) தற்கால கிறிஸ்த்தவர்கள் இப்போது நல்லவர்கள் என நீங்கள் நினைக்கலாம். அதுவும் தவறானதே. நம் நாட்டில் நாகாலந்து, மீசோரம் ஆகிய மாநிலங்கள் முழுமையாக கிறிஸ்த்துவ மயமாக்கப்பட்டுவிட்டது. இம் மாநிலங்களில் அன்பு, ஒற்றுமை, சகோதரத்தன்மை ஆகியவை ஆட்சி புரிவதற்கு பதிலாக வெறுப்பு, பிரிவினைவாதம், பயங்கர வாதம், துப்பாக்கி மற்றும் போதைப்பொருள்கள் உபயோகம் ஆகியவையே ஆட்சி செய்கின்றன.

ஒ) இந்தியாவை ஆரியர்கள் நாடு எனவும் அதனை உடைத்து யேசு ராஜ்யம் அமைக்க தனிநாடு வேண்டும் என அங்குள்ள மதமாறிகளை துப்பாக்கி ஏந்திப் போரிட தூண்டி விட்டவர்கள் உங்கள் பாதிரிகள்தானே. இப்பிரிவினை வாதத்தைதானே நீங்கள் உங்கள் புத்தகத்திலும் (பக்கம் 24, ''சித்தர்கள் கண்ட மெய்ப்பொருள்'') மகிமைப்படுத்தி கூறியுள்ளீர்கள். பிரிவினை வாத தத்துவம் நம் நாட்டிற்கு நன்மை பயக்க கூடியதா கூறுங்கள். ஒரு பக்கத்தில் நாட்டிற் காக ஜெபம் செய்கின்றீர்கள். மற்றொரு பக்கத்தில் நாட்டுப் பிரிவினையை தூண்டுகிறீர்கள். இது ஏற்புடையதா? இத்த கைய அவலங்களை ஊக்கப்படுத்தும் உங்கள் புதிய சமயம் இந்தியாவிற்கும், உலகிற்கும் தேவையா? தேவையில்லை!

ஏன்?

5. உண்மையான கடவுளை நீங்கள் உணர முடியாதபடி உங்களின் கண்ணை சாத்தானும் அவனுடைய சேனை களாகிய பிசாசுவும் மூடியுள்ளது. ''அவன் ஆதிமுதற்கொண்டு மனித கொலை பாதகனாய் இருக்கிறான். உங்களது



பிதாவாகிய பிசாசினால் நீங்கள் உண்டாக்கப்பட்டவர்கள்'' (யோவான் 8:44) எனவே உலகம் முழுமையிலும் கடந்த 2,000 வருட காலமாக மதத்தின் பெயரால் கொலை, கொள்ளை, கற்பழிப்பு, ஆகிய பாதகங்களைச் செய்தவர்கள் உங்கள் சமயத்தினரே.

சரி. இனி உங்களின் இறைகொள்கைக்கு வருவோம்.

1. இஸ்ரவேல் இனத்தில் 12 ஜாதிகள் உள்ளனர். அவர்களை பாதுகாக்கவே கர்த்தர் இப்பூவுலகிற்கு வந்தார் (மத்தேயு 10:5,6) என உங்கள் பரிசுத்த வேதாகமம் கூறுகின்றது. மேற்படி ஜாதிகளுக்கு தலா 12,000 வீதம் பன்னிரண்டு ஜாதிக்கும் பொருத்தமாக 1,44,000 பேருக்கு மட்டுமே பரலோக ராஜ்யம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது (திரு வெளிப்பாடு 7:4) ஏசு யூதர்கள் எனும் செம்மறி ஆடுகளுக் காக செத்தாரே அன்றி (கறுப்பு நிற கிடாக்களுக்காக அல்ல) மற்றவைக்காக அல்ல. (மத்தேயு 25:32,33). என்னுடைய உயிரை ஆடுகளுக்காகவே விட்டேன் (யோவான் 10:11-12). கருத்த கிடாக்கள் செம்மறி ஆடு போன்று நித்திய ஜீவன் அடைய முடியாது. ''மதம் மாறினாலும் ஜாதி மாறாது'' (ஜெர்மியா 31:31-33). எனவே ஆதி கிறிஸ்த்துவ கொள்கைப்படி மதம் மாறிய உங்களை போன்றோருக்கு நித்திய ஜீவன் கிடையாது, இதை அறிந்து கொள்ளவும்.

2. நான் அற்புதங்கள் செய்ய வந்தேன் என தேவகுமாரன் அடிக்கடி கூறினார். ஆம். பிரபல இந்து கோயில்கள் இருக்கும் கன்னியாகுமாரியிலோ, உவரியிலோ, திருச்செந்தூரிலோ, இராமேச்ரத்திலோ கடந்த சுனாமியால் உயிர் சேதம் ஏற்பட வில்லை. ஆனால் கொடுமை யாதெனில், உங்களை போன்ற இரட்சிக்கப்பட்டவர்கள் அதிகம் சுற்றுலா வரும் வேளாங் கன்னி கிராமத்திலுள்ள வேத கோயிலிலேயே அதிக உயிரிழப்பு ஏற்பட்டுள்ளது. இந்த அதிசய நிகழ்ச்சி உங்களை போன்றோர்க்கு மனதை எட்டவில்லையா?

3. ஆதி கிறிஸ்த்தவர்களின் கடவுளின் பெயர் யெகோவா (சிவா) என பழைய ஏற்பாட்டில் சுமார் 5,500 தடவை சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. அதனில் பிதா, குமாரன், பரிசுத்த ஆவி பற்றி எதுவும் கூறப்படவில்லை. நிலைமை அவ்வாறிருக்க

பிதா, குமாரன், பரிசுத்த ஆவி ஆகியவற்றை கடவுள் என பிற்காலத்தில் வணங்குதல் எங்கிருந்து வந்தது?. பவுல் பரப்பிய குருட்டு நம்பிக்கையிலிருந்தே வந்தது.

உங்களது ஒலி, ஒளி நாடாவில் ''ஓம்'' எனும் பிரணவ மந்திரத்தை ஏசுவுடன் சேர்த்து ஜெபம் செய்கின்றீர்கள். இத்தருணத்தில் உங்களுக்கு ஜெர்மியா 10:2-5இல் உள்ள எச்சரிக்கையை முன்வைக்க கடமைப்பட்டுள்ளேன். ''வேறு மதத்தினரின் வழியைப் பின்பற்றாதீர்கள்'' என்னும் எச்சரிக்கையே அதுவாகும். எரிச்சலுள்ள தேவன்(?) உங்கள் இதற்காகத் தண்டிக்கக்கூடும். விரைவில் வெளியேறுவது நல்லது. (Deuteronomy 6:14,15)

சிலுவையில் அவர் உயிர்விடும்போது ''ஏலி ஏலி லாமா சபக்தானி'' என அலறி உயிர்விட்டார் (மார்க் 16:33,34). அதன் பொருளாவது- ''என் தேவனே, என் தேவனே ஏன் என்னைக் கைவிட்டீர்'' என்பதாகும். தன்னையே காப்பாற்றிக்கொள்ள முடியாத ஒருவர் உங்களை துன்பத்திலிருந்தும், பாவத்திலிருந்தும் காப்பாற்ற முடியாது. இரட்சிக்கப்பட வேண்டுமென்றால் விஷ்ணுவையே அடைக்கலமாகக் கொள்ள வேண்டும். தாய் மதத்திற்கு நீங்களும், சபையினரும் திரும்ப வர வேண்டும். இருகரம் நீட்டி வரவேற்கிறேன்.

***

**5. 31.10.2012 அன்று திருவரங்கத்தில் நடைபெற்ற அகில இந்திய கிராம கோயில் பூஜாரிகள் பேரவையினரின், திருச்சி மாவட்ட மகாநாடு.**

இந்த மகாநாடு எஸ்.ஆர்.திருமண மண்டபத்தில் பேரவை தலைவர் திரு.வி.மயில்சாமி பி.ஏ.பிஎல். அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இறைவணக்கத்தினை சுவாமி விவேகானந்தர் அறக்கட்டளை அறங்காவலர் திருமதி. பரிமளா மோகன்குமார் பாடினார்கள். ஆன்மீக சேவகர் திருமதி. ஆர்.ஜெயஸ்ரீ ராஜாமணி குத்துவிளக்கேற்றி தொடங்கி வைத்தார்கள். மவட்ட அமைப்பாளர் திரு.என்.பால்ராஜ் வரவேற்புரை நிகழ்த்தினார். பேரவைத் தலைவர். திரு.வி. மயில்சாமி



பி.ஏ.பிஎல். தலைமையுரையாற்றினார்கள். காவிப்புலி தலைவர் திரு. ராஜேஷ், பிராமணர் சங்கச் செயலாளர் திரு.ஆர்.சி. கோபி - அகில பாரத இந்து மகா சபை மாநிலப் பொருளாளர் திரு. ஆர். ராகவன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். நிர்வாக அறங்காவலர் திரு.ஏ.கே.சௌந்தர ராஜன் சிறப்புரையாற்றினார். பாஞ்சஜன்யம் இதழ் ஆசிரியர் திரு. ஸ்ரீவைஷ்ணவஸ்ரீ அ. கிருஷ்ணமாசார்யர் சிறப்புரை யாற்றினார். ராமகிருஷ்ண விவேகானந்தர் ஆசிரம தலைவர் திரு. கிருஷ்ணானந்த சுவாமிகள் ஆசியுரை வழங்கினார், மாநில இணை அமைப்பாளர் திரு.மு.வெங்கடேசன் எம்.ஏ.பி.எட்., தீர்மானம் விளக்கிப் பேசினார். திரு. கௌரி சங்கர் நன்றியுரை கூறினார். மாவட்ட ஒன்றிய மற்றும் பஞ்சாயத்து அமைப்பாளர்கள் உட்பட 300க்கும் மேற்பட்ட பூஜாரிகள் கலந்து கொண்டு மாநாட்டை சிறப்பித்தார்கள்.

**நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:**

1. ஒரு கால பூஜை திட்டத்தின் கீழ் அரசு வழங்கி வருகிற பூஜைக்கான தொகையை ஒரு இலட்சமாக உயர்த்தி வழங்கிய தமிழக அரசுக்கு அகில இந்திய கிராமக் கோயில் பூஜாரிகள் பேரவை மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.

2. வயதான பூஜாரிகளுக்கு அரசு வழங்குகிற ஓய்வு ஊதியத்தை முதியோர் உதவித்தொகை என மாற்றி ரூ.1000த்தை ரூ. 2,000 ஆக உயர்த்தி வழங்குமாறு தமிழக அரசுக்கு அகில இந்திய கிராமக் கோயில் பூஜாரிகள் பேரவை கேட்டுக் கொள்கிறது.

3. தமிழக அரசு கிராம கோயில் பூஜாரிகளுக்கான நலவாரியத்தை திருத்தியமைத்து தற்போதைய தமிழக அரசிற்கு ஏற்ப தகுதியான புதிய உறுப்பினர்கள் நியமித்து அனைத்து கோயில் பூஜாரிகளையும் நலவாரிய உறுப்பின ராக்கிட அரசாணை பிறப்பிக்க வேண்டுகிறோம்.

4. கிராம வளர்ச்சிக்கும் பக்தர்களின் ஆன்மீக மேம்பாட்டுக்காகவும், ஆலயத்தில் முறையான பூஜை நடைபெறுவதற்கும், வளர்ச்சிக்கும் கோயில் நிலங்களிலேயே ஆழ்குழாய் கிணறு

அமைத்து தண்ணீர் வசதி செய்துதரும்படி அரசை கேட்டுக்கொள்கிறது.

5. வருமானமில்லாத அனைத்து கிராம கோயில்களுக்கும் இலவச மின்சாரம் வழங்க வேண்டுமாய் அரசை மாநாடு கோருகிறது.

6. பாரத தேசத்தில் மாற்று மத இறைபணி புரிவோர்க்கு வழங்குவதுபோல் அரசு சார்பில்லாத, அரசு உதவி பெறாத அகில இந்திய கிராமக் கோயில் பூஜாரிகளுக்கு பூஜையை ஊக்குவிக்கும் வகையில் மாத ஊக்கத் ஊதியத்தொகை வழங்குமாறு அரசை கோருகிறது.

7. அரசு சார்பாக பரம்பரை அறங்காவலர் இல்லாத கோயில்களில் அமைக்கப்படும் அறங்காவலர் குழுவில் அந்தந்தக் கோயில் பூஜாரி ஒருவரையும் அறங்காவலராக நியமிக்க வேண்டுமென்று அரசை அகில இந்தியக் கிராம கோயில் பூஜாரிகள் பேரவை கேட்டுக்கொள்கிறது.

8. பூஜாரிகளுக்கு அரசு வழங்கி வருகிற உதவி தொகைகள் வங்கிக் கணக்கின் மூலம் பெறும் வகையில் வழிவகை செய்திட வேண்டும்.

9. மாநில அளவிலான இலவச ஆகம பூஜா பயிற்சி முகாம் மற்றும் மேல்நிலைப் பயிற்சி முகாம் 16 நாட்கள் 2013ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் நடத்துவதாக முடிவு செய்யப் படுகிறது.

10. அரசு வழங்கி வருகிற சலுகைகள் அனைத்தும் நாட்டுப்புற இசைக் கலைஞர்களுக்கும் வழங்கி உதவிடுமாறு அரசை கோருகிறது.

11. பன்னெடுங்காலமாகவே கோயிலுக்காக கொடுக்கப் பட்டுள்ள நிலங்கள் யாவுமே தரிசாக உள்ளன. கோயில் நிலங்களை மேம்பாடு செய்வதற்கும், விவசாயத்தை பெருக் குவதற்கும் பயிர்கடன், விவசாய கடன்கள் ஆகியவற்றை பூஜாரிகள் பெறும் வகையில் கூட்டுறவு சங்கம் மூலமாக அரசு உதவவேண்டுமென்று அகில இந்திய கிராமக் கோயில் பூஜாரிகள் பேரவை அரசை கேட்டுக்கொள்கிறது.



12. 2013 ஏப்ரல் மாதம் ஒரு லட்சம் பூஜாரிகள் பங்கேற்கும் அகில இந்திய கிராமக் கோயில் பூஜாரிகள் பேரவையின் முதல் மாநில மாநாடு கோவையில் நடைபெறவுள்ளது.

13. அனைத்துக்கோயில் பூஜாரிகளும் அவரவர்கள் சார்ந்துள்ள ஆகமத்தில் பயிற்சிப் பெற்றிட ஸ்ரீரங்கத்தில் பயிற்சிக் கல்லூரி அமைத்து அரசே இலவசப் பயிற்சியளிக்க வேண்டும், என்று அகிய இந்திய கிராமக் கோயில் பூஜாரிகள் பேரவை கேட்டுக் கொள்கிறது.

14. பூஜை செய்யும் கோயில் நிலங்களிலேயே இலவசமாக வீடு கட்டித்தருமாறு தமிழக அரசை இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

15. தமிழக அரசு கும்பாபிஷேகம் செய்கின்ற ஒவ்வொரு கோயில்களுக்கும் ரூ.50,000/- (ஐம்பதாயிரம்) உதவித் தொகை வழங்கப்படுமென்று அறிவிப்பு செய்திருக்கின்ற தமிழக முதல்வருக்கு அகில இந்திய கிராமக்கோயில் பூஜாரி கள் பேரவை நன்றியையும் மகிழ்ச்சியையும் தெரிவித்துக் கொள்கிறது.

16. அனைத்து கோயில் பூஜாரிகளுக்கும் அரசு இலவச சைக்கிள் வழங்க வேண்டும்.

17. அரசு வழங்கிவரும் பசுமை வீடு திட்டத்தில் பூஜாரி களுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும்.

18. பூஜாரிகளின் மகன் அல்லது மகளின் கல்வி தகுதிக்கேற்ப அரசுத் துறையில் வேலைவாய்ப்பு தரவேண்டும். ✱✱✱

**6. ஆண்டாள் சாரிடபுள் டிரஸ்டினரின் வேண்டுகோள்:**

ஸ்ரீவைஷ்ணவக்ஷேத்ரங்களில் சிறந்த தொன்றாகக் கருதக் கூடிய ஸ்ரீவில்லிபுத்தூரில் நித்ய கைங்கர்யத்துக்காக ''ஸ்ரீஆண்டாள் சாரிடபுள் ட்ரஸ்ட்'' என்ற அறக்கட்டளையை நிறுவி அதன் மூலம் திருமஞ்சனம், திவ்யப் பிரபந்த பராயணம், தளிகை ஆகியவை வடபத்ரசாயி, ஆண்டாள், பெரியாழ்வான் ஸன்னிதிகளில் கடந்த 14 ஆண்டுகளாக இடையறாது நடைபெற்று வருகின்றன. பிரஸாதம் கோஷ்டி

யாருக்கும், தேசாந்தரிகளுக்கும் விநியோகிக்கப்பட்டு வரு கின்றது. கடும்விலைவாசி ஏற்றத்தாலும், மூலதனத்தி லிருந்து கிடைக்கும் வட்டி குறைந்து விட்ட காரணத்தாலும் இந்தக் கைங்கர்யங் களைத் தொடர்ந்து நடத்துவதில் இடர்ப்பாடுகள் பல ஏற்பட் டுள்ளன. எனவே பக்தர்கள் அனைவரும் நன்கொடையாக தலா ரூ.ஐயாயிரத்தினை வழங்கிக் கைங்கர்யம் இடையீடு இன்றி நடைபெற உதவுமாறு வேண்டிக்கொள்கிறோம். நன்கொடையை ரொக்கமாகவோ, செக்காகவோ, D.D. ஆகவோ அனுப்பலாம். அனுப்ப வேண்டிய முகவரி.

Sri. Andal Charitable Trust, State Bank of India, Srirangam Branch, S.B. A/C.No. 10465350383இல் செலுத்தலாம். கைங்கர்யம் நடத்த வேண்டிய தேதி, மாதம், நக்ஷத்திரம் அல்லது திதி ஆகியவற்றை கீழ்க்கண்ட முகவரிக்கு தெரிவிக்க வேண்டுகிறோம். பின்கண்ட விலாசத்திற்கு தெரிவிக்கவும். R. Kannan Swamy, B.106. Vighnesh Keerthana. 3. East Adayavalanjan St., Srirangam. 620 006. Phone: 0431-2430631. Cell: 86087 70669.

**7. வாணியம்பாடி, பாஞ்சஜன்யம் வாசகர் திருமதி. ஸ்வதந்த்ரா ராமானுஜதாஸியின் 13.11.2012. தேதியிட்ட கடிதம்.**

பூர்வர்கள் காலத்தில் பிறமதக் கொள்கைகளை எவ் வாறு மறுத்து வந்தனர் என்பதை இரும்பாநாடு ஸ்வாமியின் ப்ரமாணபூர்வமான பதில்கள் மூலம் அறிந்து கொள்ள முடிகிறது. Hats off to him!! திரு. ஸுலைமான் மனோகரன் டேனியல் அவர்கள் எழுப்பிய வினாக்களுக்கு பதில் அளித்திருக்கும் முறை பாராட்டுதற்குரியது! ஆணித்தரமாக, அசைக்க முடியாதபடி, அதே சமயம் மிகவும் எளிமையாக அனைவரும் புரிந்து கொள்ளும்படி, பல கோணங்களிலி ருந்து பல ப்ரமாணங்களை எடுத்துக்காட்டி, பதில் சொல்ல முடியாதபடி, கேட்டவர்கள் வாயடைத்துப் போகும்படி அவர் அளித்திருக்கும் பதில்களும், விளக்கங்களும் கைதட்டலைப் பெறும்படி அமைந்துள்ளன. ''பிறமதக் கொள்கைகளை நிரஸனம் செய்வது'' என்பது எப்படி இருக்கும் என்பதற்கு ஓர் உதாரணமாக, கேள்வி-பதில் கட்டுரையில், இந்த ஸ்வாமி

வடிவமைத்திருக்கிறார். இவரைப் பாராட்டும் வாய்ப்பு கிடைத் ததைப் பெரும் பாக்கியமாகக் கருதுகிறேன்.

திருமழிசையாழ்வார் தம்முடைய சொல்லாற்றல் என்னும் வாள்கொண்டு, ஓயாமல், பிறமதக் கொள்கைகளைக் களையெடுத்து வந்ததால், அவர் 'உறையிலிடாதவர்' என்ற பெயர் பெற்றார். இரும்பாநாடு ஸ்ரீ.உ.வே. பத்மநாபனும் அதைத் தான் செய்கிறார். அவர் இதற்கு முன்பு எழுதிய 'சார்ங்க வர்ஷம்', 'இராமபாணம்' ஆகிய கட்டுரைகள் அதற்கு உதாரணம். தற்சமயம் இவர் 'பாஞ்சஜன்யம் இதழில் தொடர் கட்டுரையாக எழுதிவரும் ''வேதநாயகன் விஷ்ணுவே'' என்பது ஈடு இணையில்லாத படைப்பு. இந்தக் கட்டுரை நிச்சயம் புத்தக வடிவில் வரவேண்டும் என்று ஆவலுடன் எதிர்பார்க்கிறேன். ✱✱✱

**8. புதிய பால்வெளி மண்டலம்:**

நாம் வசிக்கும் இந்த பூமி சூரியகுடும்பத்தைச் சார்ந்தது. சூரியன் ஒரு நக்ஷத்திரம். நம் சூரியனைப்போன்று கோடிக்கணக்கான நக்ஷத்திரங்கள் கொண்டது பால்வெளி மண்டலம் (Milky Way Galaxy) என்று அழைக்கப்படு கின்றது. நாம் வசிக்கும் பூமியைப்போல ''பல பூமிகள்'' அண்டத்தில் ஆங்காங்கே அமைந்துள்ள நக்ஷத்திர மண்டலங் களில் காணப்படலாம் என்பதை விஞ்ஞானிகள் ஏற்றுக் கொண்டுள்ளனர். இது பற்றிய செய்திகள் அவ்வப்போது வெளிவந்து கொண்டிருக்கின்றன. நாம் வசிக்கும் பூமியில் கர்ம வினையால் சூழப்பட்ட ஆத்மா, இந்த உடலை விட்டு நீங்கிய பிறகு அதன் கர்மங்களுக்கேற்ப ''ஏதோ ஒரு பூமியில்'' தன் பயணத்தைத் தொடர்கிறது. நாம் வசிக்கும் பூமியைப்போன்ற கிரகங்கள் இல்லையென்று யாரும் அறுதி யிட்டுக் கூறமுடியாது. இதன் பின்னணியில் தினமணி 18.11.2012 தேதியிட்ட நாளிதழில் வெளிவந்துள்ள செய்தி வான்வெளியைப்பற்றிய ஒரு புதுமையான தகவலைத் தருகின்றது.

''பிரபஞ்சத்தில் மிகத் தொலைவில் உள்ள பால்வெளி மண்டலத்தை நாசாவிஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

அதற்கு ''MACSO647-JD'' என்று விஞ்ஞானிகள் பெயரிட்டுள்ளனர்.

நமது சூரியக் குடும்பம் (சூரியன் மற்றும் அதைச்சுற்றி வரும்கோள்கள்) அமைந்துள்ள பால்வெளி மண்டலத்தில் எண்ணற்ற நட்சத்திரங்கள் இருக்கின்றன. பால்வெளி மண்டலத்தின் மையப்பகுதியிலிருந்து 26,000 ஒளி ஆண்டுகள் (ஒளியின் வேகம் ஒரு வினாடிக்கு மூன்று லட்சம் கி.மீ. ஆகும். 60 வினாடிகள் கொண்டது ஒரு நிமிடம். 60 நிமிடங்கள் கொண்டது ஒரு மணி. 24 மணி நேரம் கொண்டது ஒரு நாள். 365 நாட்கள் கொண்டது ஒரு ஆண்டு. ஆகவே ஒளி ஆண்டு எனப்படுவது, 3,00,000X60X60X24X365 கி.மீ. ஆகும்.) தொலைவில் சூரியன் அமைந்துள்ளது. இதைப் போன்று பிரபஞ்சத்தில் சிறிதும், பெரியதுமாக எண்ணற்ற பால்வெளி மண்டலங்கள் காணப்படுகின்றன. அதை வான் வெளியில் அமைக்கப்பட்டுள்ள சக்திவாய்ந்த தொலை நோக்கிகள் மூலம் விஞ்ஞானிகள் ஆராய்ந்து வருகின்றனர்.

அமெரிக்க விண்வெளி ஆய்வு நிறுவனமான நாசாவின் 'ஹப்பிள்' மற்றும் 'ஸ்பிட்ஸர்' தொலைநோக்கிகள் மற்றும் அறிவியல் இதழான 'நேச்சர்' அமைத்துள்ள தொலை நோக்கியை ஒருங்கிணைத்து மேற்கொண்ட ஆய்வில் புதிய பால்வெளி மண்டலத்தை விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர். (பெருவெடிப்புக்குப் பின்) பிரபஞ்சம் தோன்றி 42 கோடி ஆண்டுகளுக்குப் பின் இந்தப் புதிய பால்வெளி மண்டலம் உருவாகியிருக்கலாம் எனத் தெரிகிறது. பூமியில் இருந்து 1,330 கோடி ஒளி ஆண்டுகள் தொலைவில் இந்தப் புதிய பால்வெளி மண்டலம் அமைந்துள்ளது. இதற்கு ''MACSO647-JD''என்று விஞ்ஞானிகள் பெரிட்டுள்ளனர்.

''MACSO647-JD''மண்டலம் மிகவும் சிறியதாக இருப்பதாக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். அதன் அகலம் 600 ஒளி ஆண்டுகள் தொலைவுக்கும் குறைவாக இருப்பதாகத் தெரிகிறது. நமது சூரியன், பூமி உள்ளிட்ட கோள்கள் அமைந்துள்ள பால்வெளி மண்டலம், 1,20,000 ஒளி ஆண்டுகள் தொலைவு அகலமானது. ✱✱✱



# இராமானுசர் ஆயிரம் - தேர்வில் தேர்ச்சி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு விழா

இதழ் எண் 162இன் தொடர்ச்சி.

**10. Sri. R. Parthasarathy, Chennai.**

**பெற்ற அனுபவம்:** நான் வேலை பார்த்து ரிடையர் ஆன பிறகே, நமது ஸம்பிரதாயங்கள் விஷயங்களில் ஈடுபாடு கொண்டேன். பெருமாள் கிருபையினால் அருளிச் செயலை முழுமையாகக் கற்க முடிந்தது. மெள்ள மெள்ள நமது ஸம்பிரதாயம், ஆசார்ய வைபவம் ஆகியவற்றில் ஈடுபாடு ஏற்பட்டது.

அந்த முயற்சியில் இராமானுசரைப் பற்றி ''காரேய் கருணை இராமானுசா'' புத்தகம் படித்துப் பல விஷயங்களைத் தெரிந்து கொண்டேன்''. இதேபோல் 2007ஆம் ஆண்டு இராமானுசர் பற்றிய கேள்விப் போட்டியில் கலந்து கொண்டு ''நாலாயிர திவ்யப்பிரபந்தம் புத்தகத்தினைப் பரிசாகப் பெற்றேன்.

மேற்கூறிய அனுபவத்தால் இம்முறை விடையளிக்க முற்பட்டபோது மகிழ்ச்சிகரமாக இருந்தது. முதல் பாகம், இரண்டாம் பாகம் கொஞ்சம் ஈடுபாடு இருந்ததினால் பதிலளிக்க அதிக சிரமமில்லாமல் இருந்தது.

மூன்றாம் பாகம் ''வேதாந்தஸாரம்'' முதன் முதலில் படித்ததால் சிரமமாக இருந்தது. இதற்கு சிறிது விளக்கம் அவசியம் தேவைப்பட்டது.

**அறிந்து கொண்ட விஷயங்கள்:** 1. இராமானுசரைப் பற்றிய வரலாறு, நிர்வாகத்திறமை, சமுதாயச் சிந்தனைகள். 2. வேதாந்தஸாரம்: இராமானுசரைப் பற்றி முழு அளவில்

தெரிந்துக்கொள்ள இம்மூன்று புத்தகங்களும் உதவியாக இருந்தன.

**11. திரு. ஆதிஜகன்னாதராமாநுஜதாஸன், சென்னை.**

**பெற்ற அனுபவம்:** தேவரீரை ஸம்ப்ரதாயத்தில் ஊற்றம் மிக்க ஒரு தமிழாசிரியராக அடியேன் உணர்ந்திருக்கிறேன். பத்துப் பதினைந்து ஆண்டுகட்கு முன்பிருந்தே ஸ்ரீவைஷ்ணவஸ்ரீயின் பால் ஈர்க்கப்பட்டு தங்களது சொற்பொழிவுகளை அவ்வப் போது கேட்டும் பாஞ்சஜன்யம் இதழின் வாசகராகவும் இருந்து வந்துள்ளேன். தாங்கள் நடத்தும் வைணவக்கல்வி தொலை தூர முறையில் முதல்நிலைத் தேர்வு எழுதி இரண்டாம் நிலைக்கான புத்தகங்களைப் பெற்றுப் பயில முயன்று கொண்டிருக்கிறேன். ஏற்கெனவே நாலாயிரதிவ்யப்பிரபந்த வினாவிடைப் போட்டியில் பங்குகொண்டுள்ளேன்.

தற்போது இந்த இராமானுசர்-1000 திட்டத்தில் மூன்று பாகங்களை வாங்கி,விடையளிக்கும் முன்பு ஒருமுறை படித்துக் கொண்டேன். மூன்றாவது பகுதி வேதாந்தஸாரம் என்ற இராமானுசரின் கிரந்தத்தை மிக எளிய தமிழில், வடமொழியையும் விடாது (உபய வேதாந்தம்) முக்கிமான பகுதிகளை அடியேனைப்போன்ற பாமரனும் படித்துப் பாது காத்து மனதில் தேக்கிக் கொண்டு செயல்பட முயற்சிக்கும் உந்துகோலாகவே அமைந்திருப்பதை உணர்கிறேன்.

இதைப்போல் வேதாந்த தீபம் என்ற நூலையும் அடியோங்கள் புரிந்து கொள்ளும் வண்ணம் தமிழ் - ஸம்ஸ்க்ருதம் மொழியில் ஆக்கித்தர வேணுமாய் ப்ரார்த்தித்துக் கொள்கிறேன்.

**அறிந்து கொண்ட விஷயங்கள்:**

1. வேதாந்தஸாரத்தில் சொல்லப்பட்ட மேற்கோள்களும் கருத்துகளும் நன்கு புரிந்து மேலும் கற்று அதன்படியே நடக்கத்தூண்டும் அவாவை எழுப்பியது.

2. இராமானுசர் திருவரங்கத்தில் அமைத்த பத்து கொத்துக் களைப் பற்றிய விபரங்கள்.



3. இராமாநுசர் தாமே இரவில் திருமடைப்பள்ளியைச் சுத்தம் செய்து, மற்ற கைங்கர்யபரர்களை உத்வேகத்துடன் கைங்கர் யத்தில் ஈடுபட பிரார்த்தித்தது.

4. ஸ்ரீரங்கம் அத்யயனோத்ஸவம், மற்றும் சில குறிப்பிட்ட தினங்களில் மட்டும், நம்பெருமாள் இராமானுசர் ஸந்நிதிக்கே எழுந்தருளுவது. வேறு எந்த ஆழ்வாரும்/ஆசார்யரும் அவரவர் அவதார நட்சத்திரத்தின்போது அவரவர் பெரிய பெருமாள் / நம்பெருமாள் முன்பு தாம் எழுந்தருளி மங்களா சாஸனம் செய்வது வழக்கிலிருக்க இராமானுசர் ஸந்நிதிக்கு நம்பெருமாளே எழுந்தருளுவது.

**12. திருமதி.M.R. விஜயலக்ஷ்மி, சென்னை.**

**பெற்ற அனுபவம்:**

1. சொல்வதற்கு வார்த்தைகள் இல்லை. ஒவ்வொரு திவ்யதேசத்தின் கோயிலொழுகை வாங்கி படிக்க வேண்டும் என்ற ஆவலைத் தூண்டியது. 2. கிருமி கண்ட சோழன் ஆராய்ச்சி சிந்திக்க வைத்தது. 3. ஞானப் பள்ளப்பெண் வார்த்தை. 4. திருநாராயணபுரம் கோயில் நிர்வாகம்.

**அறிந்து கொண்ட விஷயங்கள்:**

எம்பெருமானாரைப் பற்றி அறிந்து கொள்ள ஒரு ஆயுள் போறாது. ஆயினும் தங்களுடைய முயற்சி பாராட்டுக் குரியது. உடையவரின் பல முகங்களைப் பற்றி அறிந்து கொள்ள ஒரு வாய்ப்பு கொடுத்ததற்கு நன்றி. ஆங்காங்கு துண்டு துண்டாக இருந்த செய்திகளைத் தொகுத்து இப்போது ஒரு புத்தகமாக வெளிவந்தது மிகவும் பயனுள்ளதாய் இருந்தது. எந்த சந்தேகம் வந்தாலும் உடனே ‘‘இராமானுசர் ஆயிரம்’’ எடுத்துப் பார்க்கிறேன்.

**13. திருமதி. N. விஜயலக்ஷ்மி, சென்னை.**

**பெற்ற அனுபவம்:**

ஆளவந்தாரின் ஆசைகளை பூர்த்தி செய்தது,

ஆழ்வானுக்குக் கண்களை தேவப்பெருமாளிடமிருந்து பெற்று கொடுத்தது. தான் ஒருவன் நரகத்திற்கு சென்றாலும் ஏனைய எல்லோரும் மோக்ஷம் அடைய நினைத்தது, ஆழ்வானின் சம்பந்தத்தால் தனக்கு நிச்சயம் மோக்ஷம் உண்டு என்று நினைத்தது; ப்ரஹ்மஸூத்திரத்திற்கு ஸ்ரீபாஷ்யம் எழுதிய நிகழ்வுகள் இன்னும் பலபல. இந்த மஹானின் உயரிய எண்ணங்கள் பரவசமடையச் செய்கிறது. வேதாந்த ஸாரத்தில் நாராயணன் ஒருவனே ஜகத்காரணன்.

**அறிந்து கொண்ட விஷயங்கள்:**

'நாராயணாய' என்னும் ஐந்தெழுத்தை விட 'ராமானுஜா' என்னும் நான்கெழுத்து மந்திரமே உய்யும் வழி என்பதை அறிந்து கொண்டேன். எனக்கு இந்த 'இராமானுசர் ஆயிரம் போட்டி' கடைசி தேதிக்கு ஒரு வாரம் முன்புதான் தெரியவந்தது. பின் புத்தகம் வாங்கி விட்டேன். கேள்வி களுக்கு எப்படி விடையளிப்போமோ என்ற மலைப்பு வேறு ஒரு பக்கம். எப்படியும் எழுதிவிட ஆவல் வேறு. எழுத தொடங்கி மறுநாள் ஜுரம் வந்து இரண்டு நாட்கள் எழுத முடியாமல் போனது. பின் ஆசார்யர்களை நினைத்து எழுத தொடங்கினேன். கேள்விகளுக்கும் பதில்கள் ஆங்காங்கு உடனே கிடைத்ததால் எப்படியும் முடியும் என்று நம்பிக்கையை ஏற்படுத்தினார் இராமானுசர். நேரமின்மை காரணமாக ரொம்பவும் அனுபவித்து எழுத முடியமில்லை. இருப்பினும் இந்தப் போட்டியில் கலந்து கொள்ள சக்தியை கொடுத்தார் இராமானுசர். அதுவே நான் பெற்ற பேறாகக் கருதுகிறேன்.

**14. திருமதி. R. ஸ்யமந்தகமணி, ஒட்டப்பட்டி, தருமபுரி.**

**பெற்ற அனுபவம்:**

விடைகளை அறிந்திட இராமானுசர் ஆயிரம் புத்தகங் களை படிக்க படிக்க நாம் அந்த காலத்திலேயே வசித்த அனுபவம் போல் இருந்தது. பாகவதோத்தமர்களாக மாறி விட்டோம். முந்நூறு கேள்வி எழுதி முடித்ததும் நமக்கும்



அர்சராதி மார்க்கம் கிடைக்க வழியுண்டு எனத் தோன்றியது. இவ்வளவுநாள் நம்வாழ்நாளை சம்சாரம் என்னும் துன்ப கடலிலேயே செலவழித்து விட்டோம். இப்பொழுது தாங்கள் இராமாநுசர் ஆயிரம் படித்தபிறகு ஏதோ சிறிது புண்ணியம் செய்திருப்பதால் இப்பொழுதாவது எம்பெருமானாரைப் பற்றி அறியும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இத்துணை காலமும் வாழ்ந்தது வீண் என்ற எண்ணம் தோன்றுகிறது. அடியேனுக்கு 70 வயது ஆகிவிட்டதால் இந்த மூன்று பாகங்களையாவது படித்து தெரிந்து கொள்ளக் கூடிய வாய்ப்பு ஏற்பட்டது. ஒரு பக்கம் மகிழ்ச்சி. ஏனென்றால் வேதாந்தஸாரம் அர்ச்சிராதி மார்க்கம் படித்த பின்பு அது நமக்கு மிகவும் விரைவாக கிடைத்தால் நன்றாக இருக்குமே என்று பேராசை தோன்றுகிறது. எம்பெருமானாரை ஒரு வேதாந்தியாக மட்டு மல்லாது சமூகநலனில் அக்கரை கொண்ட ஒரு மாமனிதராக வும் அறிந்து கொண்டோம். அவர் அன்றாட பணிகளையும், வேதாந்த உபந்யாசங்களையும் அவர் அன்றாடம் எடுத் துரைத்த விதமும் தன்னுடன் உள்ள பாகவதோத்தமர் களையும், பக்தர்களையும், மற்ற எல்லா கொத்து அடியார் களையும் அரவணைத்துச் செல்லும் பாங்கும் படிக்க படிக்க வியப்பும் இன்பமும் ஏற்படுகிறது.

**அறிந்து கொண்ட விஷயங்கள்:**

எம்பெருமானார் காலத்தில் இருந்த அவர்கள் எல்லோ ரும் எவ்வளவு கொடுத்து வைத்தவர்கள். எம்பெருமானாருக் கும் நம்பெருமாளுக்கும் எவ்வளவு கைங்கர்யம் செய்தவர்கள் என்று அறிய முடிகிறது. தாங்கள் முகவுரையில் எழுதியதைப் போல் இராமானுசரின் குணக் கடலில் திளைத்து அமிர்தத்தை பருகியதைப் போலவே இருந்தோம். ஏதோ இந்த காலத்தில் தாங்கள் செய்த இந்த கைங்கர்யத்தினால் அடியோங்க ளெல்லாம் இதைப்படித்து உய்வு பெற்றோம். மனதில் துன்பச் சுமை கூடும்போதெல்லாம் இந்நூலை எடுத்து படித்தால் எந்த பாகம் ஆகட்டும் எந்த தலைப்பாகட்டும் மனத்துயர் நீங்கி விடுகிறது.

அடியோங்களுக்கெல்லாம் இத்தனை கிருபை செய்த தங்களுக்கு அடியேனுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். முதன் முதலில் புத்தகத்தை வாசித்தபோது இதில் எப்படி பதில் தேடுவோம் என்றிருந்தது. எம்பெருமானாரை தியானித்து, வாசித்தபொழுது மனதில் தானாகவே விடைகள் தோன்ற ஆரம்பித்தன.

**15. திருமதி. சந்திரா நரசிம்மன் (USA)**

**பெற்ற அனுபவம்:**

பல்வேறு பதிப்புகளிலிருந்து தொகுத்து அளிக்கப்பட்ட இந்த இராமானுசர் ஆயிரம் என்ற நூல் ஆசிரியரின் பரந்த ஞானத்தை தெளிவாக பிரதிபலிக்கிறது. இதனை ஒருமுறை படித்து வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும் என்று முறபட்டபோது அடியேனுக்கு மிகவும் கலக்கமாய் இருந்தது. இருந்தும் ஏதோ ஒரு சாகஸ செயலாய் நினைத்துக் கொண்டு அடியேன் சிறிய ஞானத்தவளாய் எழுதி அனுப்ப அதனையும் ஆசிரியர், தன் கண் அறுவை சிகிச்சை பண்ணிய நிலையிலும் சரிபார்த்துத் தந்தமைக்கு தலையல்லால் கைம்மாறு இலனே. மேலும் இந்த நூலை திரும்ப, திரும்ப படிக்கும்போது ஆசிரியரின் அவாவைப் புரிந்து கொள்ள முடிகிறது. முதலில் படிக்க தூண்டுவதற்கே இந்த வினாவிடை முயற்சி. மேலும் மேலும் படிக்க முற்படும்போது தான் ஆசிரியர் விளக்கும் அரிய விஷயங்களைப் புரிந்து கொள்ள முடிகிறது.

**அறிந்து கொண்ட விஷயங்கள்:**

இராமானுசரின் ஆயிரம் ஆண்டு கொண்டாடத்திற்கான இந்த முதல் வெளியீட்டால் அடியேன் பெற்றபேறு விலை மதிப்பற்றது. ஆசிரியர் பல்வேறு நூல்களில் இராமானுசரைப் பற்றிய குறிப்புக்களை தொகுத்து வெளியிட்ட விதம் மிகவும் அழகாக அமைந்துள்ளது. மேலும் இதனை ஆங்கில மொழியிலும் வெளியிட முயற்சிப்பது பாராட்டுதற்குரியது. ✱✱✱



# வேதநாயகன் விஷ்ணுவே

இதழ் 162இன்தொடர்ச்சி. ஆசிரியர்: இரும்பாநாடு ஸ்ரீ.உ.வே.சே.பத்மநாபன்.

சொல்லிலக்கண அடிப்படையில் ஒரு சொல்லுக்கோ ஒரு மந்திரத்துக்கோ வெவ்வேறு வகையில் எப்படிப் பொருள் கொள்ளலாம் என்பதை விளக்குவதுதான் நிருக்தத்தின் நோக்கமேயொழிய ''சூரியன்தான் விஷ்ணு'' என்று சொல்வது அதன் நோக்கமன்று. நிருக்தம் அவ்வாறு எந்த இடத்திலும் கூறவும் இல்லை. அப்படி அதனால் கூறவும் இயலாது. ஏனெனில் ஒரு மந்திரத்திற்கு தேவதை இதுதான் என்று தெளிவாக வேதத்திலேயே குறிப்பிடப்பட்டிருக்கும் போது, அந்த மந்திரத்துக்கு வேறு தேவதை விஷயமான விளக்கத்தைச் சொன்னால் அது தவறான விளக்கம்தான் என்பது நிருக்தர்காரர்களுக்கே தெரிந்த விஷயம்தான். அதனால் தான் தங்களுடைய விஷம விளக்கங்களுக்கு அநுகூலமானவைபோலத் தோன்றும் மந்திரங்களை மட்டும் எடுத்து விளக்கம் கூறிவிட்டு மற்றவைகளையும் இப்படியே கண்டு கொள்க என்று கூறி நழுவி விடுவார்கள் நிருக்தக்காரர்கள். நிருக்தர்காரர்களைப் பற்றியும், நிருக்தத்தின் சில தெளிவற்ற விளக்கங்கள் பற்றியும் ஏற்கெனவே விரிவாகக் கூறப்பட்டுள்ளது. வேதத்தைப் புரிந்து கொள்ளும் விஷயத்தில் நிருக்தம் நமக்கு ஓரளவுக்கு உதவி செய்யுமேயொழிய, முழுமையாக அது நமக்குப் பயன்படாது.

வேதத்தின் பொருளறியும் விஷயத்தில் நிருக்தத்தை நாம் முழுமையாக ஏற்றுக் கொள்ளவும் முடியாது! முழுமையாகப் புறக்கணிக்கவும் முடியாது என்ற நிலைதான். அதற்குக் காரணம் நிருக்த சாஸ்த்ரத்தில் உள்ள குறைபாடுதான். ''இதம் விஷ்ணு விசக்ரமே'' என்ற மந்திரத்திற்கு சாகபூணி, ஔர்ணவாபர் என்ற இரு நிருக்தக்காரர்கள் கூறிய விளக்கங்கள் எவ்வளவு பொருத்தமற்றவை என்பதை முன்னமேயே விளக்க

மாகத் தெரிவித்துள்ளோம்.அதனடிப்படையில் மற்ற விஷயங்களையும் நிருக்தம் எப்படி விளக்கும் என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டியதுதான். அதனால் தான் சிலர் நிருக்த சாஸ்த்ரத்தை அவ்வளவு பெரிதாக எடுத்துக் கொள்வதில்லை. ஏனெனில் வேதத்தை விளக்க நிருக்தம் மட்டும் போதாது. வேதத்தை விளக்குவதில் மற்ற ஐந்து அங்கங்களும் பிராஹ்மண பாகங்களும் முக்கியப் பங்கு வகிக்கின்றன. ஆகவே எல்லாவற்றையும் ஆராய்ந்து தான் ஒரு முடிவுக்கு வரமுடியும். ஒருவனுடைய குடும்ப வரலாற்றை அவனது குடும்பத்திற்கு சம்மந்தப்பட்டவனோ அல்லது அவனது குடும்பத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டவனோ தான் முறையாக எழுத முடியும். அந்தக் குடும்பத்துக்கே சம்பந்தமில்லாத ஒருவன் ஏதோ கேள்விப் பட்ட சில விஷயங்களை வைத்து அக்குடும்ப வரலாற்றை எழுதினால் அதில் உண்மை இருக்குமா? அதைப் போலத் தான் நம் நாட்டில் தோன்றிய வேத இலக்கியங்களை ஆராய்ச்சி என்ற பெயரில் அயல் நாட்டுக்காரன் எழுதுவதும். யாருடைய நூல்களுக்கு யார் விளக்கம் எழுதுவது? மேலும் அவர்கள் எழுதியுள்ள அபத்த விளக்கங்களை தலைமேல் வைத்துக்கொண்டாடும் சில மூடர்கள் நம் நாட்டிலும் இருக்கத் தான் செய்கிறார்கள்.

'சூரியனே விஷ்ணு' என்ற மேற்கத்தியர்களின் கொள்கையை அப்படியே ஏற்றுக் கொள்ளும் சிலர் வேதத்திலே கரைகண்டவர்கள் என்ற போர்வையில் நம் நாட்டிலும் இருக்கத்தான் செய்கிறார்கள். ஆகவே, நிருக்தக்காரர்கள் ''இதம் விஷ்ணு விசக்ரமே'' என்ற மந்திரத் துக்கு கூறியுள்ள விளக்கம் பரம அபத்தமானது என்பதை தெளிவாக்கியதோடு நிருக்தத்தின் நோக்கத்தைப் புரிந்து கொள்ளாமல் ''சூரியனே விஷ்ணு'' என்று நிருக்தம் கூறுவதாகத் தவறாகப் புரிந்து கொண்டு அதன் அடிப்படையில் விளக்கம் அளிக்கின்ற மேற்கத்தியவர்களின் அடிமுட்டாள்தனத்தையும், அந்த முட்டாள்களின் விளக்கத் தையே உண்மை விளக்கம் என்று ஏற்று ரசிக்கும் சில அயோக்யர்கள் ''வேதவாசஸ்பதி'', ''வேத பூஷணம்''



முதலிய போலிப்பட்டங்களைத் தாங்கிக் கொண்டு நம் நாட்டில் திரிகிறார்கள் என்பதையும் இதுவரை பார்த்தோம். இனித் தொடர்ந்து மற்ற விஷயங்களைப் பார்ப்போம்.

ஒரு சொல் அது பயன்படுத்தப்படும் இடத்தைவைத்து பல்வேறு பொருளைத்தரும் என்பதும், இடத்துக்குத் தக்கவாறு ஒரு சொல்லுக்கு பொருளைக் காண வேண்டும் என்பதும் சொல்லுருவை வைத்து ஒரு சொல்லுக்கு பல்வேறு பொருள்களை நாம் அமைக்க முடியும் என்பதும் சொல்லிலக் கணம் நமக்குக் கூறுகின்ற செய்தி. இது நியாயமான கருத்துத்தான். அதே நேரத்தில் ஒரு சொல் இன்ன பொருளில்தான் சம்பந்தப்பட்ட இடத்தில் பயன்படுத்தப் பட்டுள்ளது என்பதை வெளிப்படையாகவும், தெளிவாகவும் தெரிந்துகொள்ளக் கூடிய சூழ்நிலையிலும் அச்சொல்லைக் கூறுபோட்டு, சிதைத்து மனம்போனபடி பொருள்கொள்வது எவ்விதத்தில் நியாயமாகும்? அப்படிச் செய்தால் அந்தச் சொல்லைப் பயன்படுத்திக் கருத்துச் சொல்லவந்தவரின் உண்மையான உள்ளக்கருத்து வெளிப்படாமல் போய்விடும்.

வேதத்தில் சூரியனும் விஷ்ணு என்ற பெயரால் சில இடங்களில் அழைக்கப்படுகிறான் என்று சிலர் சொல்கி றார்கள். ஆனால் ரிக்வேதத்தில் இடம்பெற்றுள்ள சூரியனுக் குரிய ஸூக்தங்களில் ''விஷ்ணு'' என்ற பெயர் இடம் பெறவேயில்லை. மூவுலகையும் காலால் அளந்தது முதலான விஷ்ணுவுக்கே உரிய அசாதாரண அடையாளங்கள் எதுவும் சூரிய ஸூக்தங்களில் காணப்படவில்லை. அக்னியும் கூட 'விஷ்ணு' என்ற பெயரால் (ரிக் - 10-1-3) அழைக்கப் படுகிறான். இந்திரனும் விஷ்ணு என்ற பெயரால் (ரிக் - 1.61.7) அழைக்கப்படுகிறான். ஒரு தேவதை மற்றொரு தேவதையின் பெயரால் சில நேரங்களில் அழைக்கப்படு வதற்குக் காரணம் என்ன என்பது குறித்து ஏற்கெனவே விளக்கப்பட்டுள்ளது. இருந்தாலும் மறுபடி ஒருமுறை அதை நினைவு கூர்வோம். ஒரு தேவதைக்குரிய தனித்தன்மைகளில் ஏதாவதொன்று இன்னொரு தேவதையிடம் காணப்பட்டால் அந்த இன்னொரு தேவதை அந்த தேவதையின் பெயரால்

பெருமைப்படுத்தல் காரணமாக அழைக்கப்படும். அதனால் அந்த இரண்டு தேவதையும் ஒன்றுதான் என்று ஆகிவிடாது. ஒரு நல்ல பாடகரைப் பார்த்து ''அவர் ஒரு கந்தர்வன்'' என்று சொன்னால் ''அவருக்கு இறக்கைகள் இருக்கின்றனவா? அவர் வானத்தில் பறப்பாரா? அவர் தேவலோகத்தில் இருக்கி றாரா?'' என்று ஒருவர் கேட்டால் அவருக்கு அறிவில்லை என்று தானே சொல்ல முடியும்? கந்தர்வர்களுக்குரிய கலையான இசைக்கலையை அவர் நன்றாகப் பயின்று அதை நல்ல முறையில் வெளிப்படுத்துகிறார் என்ற காரணத்தால் அவரைப் பெருமைப்படுத்தவேண்டும் என்பதற்காக அவரை கந்தர்வன் என்று அழைக்கிறார்கள். அதற்காக கந்தர்வர்களுக் குரிய அனைத்துத் தன்மைகளும் அவரிடம் இருப்பதாக நாம் எடுத்துக்கொள்ள முடியாதன்றோ! அதைப்போலவேதான் ஒரு தேவதை இன்னொரு தேவதையின் பெயரால் அழைக்கப் படும்போதும் பொருள் கொள்ள வேண்டும். விஷ்ணு என்றால் ''வியாபிப்பவர்'' என்ற பொருள் உள்ளதைக்கொண்டு இந்திரன், அக்நி ஆகியோரும் வியாபிக்கும் தன்மையுள்ளவர் கள் ஆகையால் அவர்களும் அப்பெயரால் அழைக்கப்படுகி றார்கள். அவ்வளவுதான். மற்றவேத பாகங்களில் எங்காவது சூரியனும் விஷ்ணு என்ற பெயரால் சொல்லப்பட்டிருந்தால் அவ்விடத்திலும் இப்படித்தான் பொருள் கொள்ள வேண்டும். மற்றபடி சூரியனுக்கும் விஷ்ணுவுக்கும் ஸ்வரூப ஐக்யம் சொல்ல இடமில்லை.

''விஷ்ணு'' என்ற சொல்லுக்கு வியாபித்திருப்பது எங்கும் பரவியிருப்பது என்று நிருக்த சாஸ்த்ரம் விளக்கம் தருகிறது. ஒரு தனிப்பட்ட தேவதையின் பெயராகக் குறிப் பிடப்படாமல் வெறும் காரணப் பெயராக (வியாபிக்கின்ற காரணத்தால் விஷ்ணு) மட்டும் வேதத்தில் இந்த சொல் வந்திருந்தால் வியாபகத் தன்மையுள்ள அனைத்து வஸ்துக் களையும் இச்சொல் குறிப்பதாகக் கொண்டு விடலாம். மற்ற தேவதைகள் விஷயத்தில் இச்சொல் பயன்படுத்தப்படும் பொழுது அந்த மற்ற தேவதைகளின் தன்மைகளை விளக்கும் பல பெயர்களில் இதுவும் ஒன்று என்று சொல்லிவிடலாம். ஆனால் விஷ்ணு என்ற பெயரில் ஒரு தனிப்பட்ட



தேவதையையே நமக்குக் காட்டுகிறது வேதம். அந்த தனிப்பட்ட தேவதைக்கென்று மந்திரங்களையும், அம்மந்தி ரங்களைக் கண்ட ரிஷிகளின் பெயர்களையும் நமக்குத் தெளிவாகக் காட்டுகிறது வேதம். வியாபித்தல் பரவுதல் என்ற பொருளைக்கொண்ட ஒரு காரணப்பெயரான விஷ்ணு என்ற சொல் ஒரு தனிப்பட்ட தேவதையின் பெயராகவும் அந்தப் பெயரோடு ஒரு தேவதை இருப்பதாகவும் வேதம் தெளிவாகக் காட்டுவதால் அந்த தேவதையின் வியாபகத்தன்மை மிகவும் முக்யத்வம் வாய்ந்த வியாபகத்தன்மையாக ஆகிவிடுகிறது. விஷ்ணு என்பதற்கு 'வியாபிப்பவர்' என்ற பொருள் இருப்பதால் அந்தப் பெயரையுடைய தேவதை 'வியாபித்தல்' என்ற தன்மையே மிக முக்கியத் தன்மையாகி விடுகிறது. தேவன் என்றாலே 'ஒளியுள்ளவன்'' என்று பொருளாகையால் விஷ்ணுவுக்கும் ஒளி உண்டு என்று தெளிவாகிறது. அவர் வியாபிக்கும் தன்மையுடையவர் என்பதால் விஷ்ணுவின் ஒளியே ஸர்வ லோகங்களிலும் பரவியிருக்கிறது என்பது தெளிவாகிறது. மற்ற எல்லா தேவதைகளுக்கும் அவரது ஒளி பரவியிருப்பதால் அவர்களும் ஒளியுள்ளவர்கள் ஆகிறார்கள்.

சூரியன் முதலிய ஒளிமண்டலங்களில் உள்ள ஒளியும் அந்த விஷ்ணுவின் ஒளியே. அவருடைய மற்ற சக்திகளும் உலகம் முழுக்கப் பரவி, வியாபித்திருப்பதால்தான் மற்ற தேவர்களும் சக்தியுடன் இருக்கிறார்கள். பகவான் விஷ்ணு வின் சக்தியும் ஒளியும் உலகம் முழுவதும் பரவியிருப்பதால் உலகம் இயங்கிக் கொண்டிருக்கிறது. அதனால் இந்திரன் முதலிய தேவர்களைக் கொண்ட இந்த அண்டசராசரம் முழுவதும் விஷ்ணுவுக்கு சரீரமாகி விடுகிறது. இந்திரனிடம் உள்ள இந்திர சக்தியும், அக்னியிடம் உள்ள அக்நிசக்தியும், அதைப்போல மற்ற தேவர்களில் உள்ள அவரவர்களுடைய சக்திகளும் விஷ்ணுவின் சக்திகளே. தனது பல்வேறு சக்திகளை பரவச் செய்து அவற்றுக்குத் தனித்தனி நாம ரூபங்களைக் கொடுத்து இந்த பிரபஞ்சத்தை இயங்கச் செய்கிறான் பகவான். அந்தத் தனித்தனி நாமரூபங்களோடு உள்ள தேவர்களின் செயல்பாடுகளின் சிறப்புத்தன்மைக் கேற்ப அந்தந்த தனித்தனி தேவதைகளுக்கும் தனித்தனி

யாகத் துதிகள் ஏற்பட்டுள்ளன. ஆனால் உண்மையில் அந்த தேவதைகளுக்கு ஏற்பட்டுள்ள துதிகளும் பகவான் விஷ்ணு வையே சேரும். ஏனெனில் அந்த தேவதைக்குரிய சக்திகளும் பெருமையும் உண்மையில் பகவான் விஷ்ணுவைச் சேர்ந்தது தானே! ஒரு அரசன் தனது செயல்களை தனது சில அதிகாரிகளைக் கொண்டு செய்ய வைப்பது போல. மக்களுக்குச் சில நன்மைகளைச் செய்ய சில அதிகாரிகளை நியமிக்கிறான். அந்த அதிகாரிகளும் அரசனுடைய ஆணைக் குப் பணிந்து தங்களுக்கு விதிக்கப்பட்ட கடமைகளை செய்கிறார்கள். அதனால் நன்மை அடைந்த மக்கள் அந்த அரசு அதிகாரிகளை மகிழ்ச்சியோடு ஏத்துகிறார்கள். அப்போது அந்த மக்கள் அந்த அதிகாரிகளுக்குச் செய்யும் மரியாதைகளும், ஏத்துதலும் உண்மையில் அந்த அரசனுக்குத் தானே சேரும். அதைப் போலத்தான், மற்ற தேவர்களின் சக்தியும் பகவான் விஷ்ணுவினுடையதே என்பதால் மற்ற தேவர்களின் பெயர்களாலும் பகவான் விஷ்ணுவை அழைக் கலாம். ஏனெனில் உலகில் வியாபித்துள்ள அனைத்து சக்தி களும் அவனுடையதே என்பதால் எல்லாப் பெயர்களும் அவனுடையதே. தேவதைகளுக்கு உருவம் உண்டு என்பதை ஏற்கனவே பார்த்திருக்கிறோம்.

இந்திரன் முதலிய ஒவ்வொரு தேவதைக்கும் ஆபரணம், வாஹநம், ஆயுதம் இவற்றோடு கூடிய உருவம் உண்டு. அந்த வகையில் பிரபஞ்சம் முழுவதும் வியாபித் திருக்கும் பகவான் விஷ்ணுவுக்கும் ஓர் உருவம் இருக்க வேண்டுமல்லவா? அது எப்படியிருக்கும் எனில் இந்திராதி தேவர்கள் அடங்கிய இந்த அண்டசராசரம் முழுவதையும் தன் சரீரத்தில் கொண்ட ஒரு புருஷரூபமாக அது இருக்கும். அப்படித்தான் இருக்க முடியும். இந்திராதி தேவர்களையும் எல்லா உலகங்களையும் அந்த விஷ்ணுவின் திருமேனியிலே காண முடியும். அதுதான் பகவான் விஷ்ணுவின் உண்மை யான உருவம். ஸர்வ வ்யாபகரூபமான தன் உண்மை உருவத்தை மறைத்துக் கொண்டு சாதாரண புருஷரூபத்தில் தேவர்களுக்கிடையில் இருந்து வருகிறான். ஸ்ரீமந்நாராயண னுடைய அருளால் எல்லா தேவர் களுமே வெற்றியையும்,



சிறப்பையும் பெறுகிறார்கள். ஆனால் ப்ரக்ருத குணங்களுக்கு வசப்பட்ட அந்த தேவர்கள் தங்களுக்குள் ஒருவனாக உள்ள அவனது உண்மையான ஸ்வரூபத்தை அறிவதில்லை. தங்களை இயக்குபவன் அவனே என்பதை அவர்கள் அறிவதில்லை. ஏனெனில் பகவான் தன்னை அறியும்படியான தகுதியுள்ளவர்களுக்கே தன் உண்மை ஸ்வரூபத்தைக் காட்டுகிறான். ப்ரக்ருத உலகிற்கு அப்பாற்பட்டு அப்ராக்ருத உலகில் இருந்துகொண்டு தனது அருட்பார்வையால் இவ்வுலகம் அனைத்தையும் நடத்தும் அந்தப் பரமனான விஷ்ணுவின் பரமாத்ம ஸ்வரூபத்தை தங்களின் ஞானக்கண் களால் கண்ட ரிஷிகள் அவனைக் குறித்த மந்திரங்களையும் உள்ளபடி கண்டு நமக்குக் கொடுத்து உலகிற்குப் பேருபகாரம் செய்திருக்கிறார்கள்.

வேதத்தில் உள்ள அந்த பகவான் விஷ்ணுவுக்குரிய மந்திரங்களில் சொல்லப்பட்டுள்ள விஷயங்களை இனி விளக்கமாகப் பார்ப்போம். ரிக்வேதம் முதல் மண்டல 22 ஆவது ஸூக்தத்தில் 17ஆவது மந்திரம் முதல் 21 ஆவது மந்திரம் வரையுள்ள 5 மந்திரங்கள் விஷ்ணுவைப் பற்றி யவை. அவற்றை விளக்கமாகப் பார்ப்போம்.

*இத$_3$ம் விஷ்ணுர் விசக்ரமே த்ரேத$_4$ா நித$_3$தே$_4$ பத$_3$ம் |*
*ஸமூட$_4$மஸ்ய பாம்ஸுரே ||*

இதன் பொருள்: ''இவ்வுலகனைத்தையும் விஷ்ணு விசேஷமாக அடிவைத்து அளந்தான். மூன்று விதத்தில் அடிவைத்தான். அவனது பாதப் புழுதியிலே ஸகல லோகங் களும் அடங்கி இருந்தன.'' இந்த மந்திரத்தின் மூலம் பகவா னது ஸர்வேஶ் வரத்வம் வெளிப்படுகின்றது. உலகனைத் தையும் தனது திருவடியால் அளந்த தன் மூலம் உலகெல்லாம் தனது செல்வம் என்பதை வெளிப்படுத்தியிருக்கிறான் பகவான். அவனே ஸர்வலோகச் சக்ரவர்த்தி என்பதும் இதனால் வெளிப்படுகிறது. மூவுலகங்களிலும் உள்ள அனைத்து தேவர்களுள் பகவான் விஷ்ணு உலகங்களை அளந்தபோது அவனது காலடிச் சுவட்டில் கிடந்தார்கள் என்றால் மற்ற தேவர்களின் சக்திகள் எவ்வளவு அற்பமா

**னவை என்பதை இதனால் உணர முடிகிறது. பகவானின் திருவடியில் ஒட்டியுள்ள தூசிதான் இந்த உலகங்கள் என்று வேதம் முழங்குகிறது. ஓங்கி உலகளந்த உத்தமனின் பரத்வத்தை கோஷிக்கிறது இம்மந்திரம்.**

**இந்த மந்திரத்திற்கே அவர்கள் பாணியில் விளக்க மளித்துள்ளார்கள் நிருக்தக்காரர்கள். அவர்கள் விளக்கத்தில் உள்ள குறைபாடுகளை ஏற்கெனவே எடுத்துக் காட்டியுள் ளோம். தங்களின் குதர்க்க விளக்கத்திற்கு இம்மந்திரத்தை எடுத்துக் கொண்டார்கள் அவர்கள். ஆனால் இம்மந்திரத்தில் சொல்லப்பட்ட விஷயத்தோடு தொடர்புடைய இன்னொரு மந்திரம் இதற்கு முன்னால் இருந்தும் (இதற்கு முன்மந்திரம் - 22 ஆம் ஸூக்தத்தின் 16-ஆவது மந்திரம்) அதை அவர்கள் கண்டு கொள்ளவில்லை. ஏனெனில் இவர்களது குதர்க்க விளக்கத்திற்கு அம்மந்திரம் இடம்கொடுக்காது. அந்த மந்திரம் பின்வருமாறு.**

***அதோ தே₃வா அவந்து நோ யதோ விஷ்ணுர் விசக்ரமே |
ப்ருதி₂வ்யா: ஸப்தத₃ாமபி₄: ||***

**இதன் பொருள்: ''எந்த பூமியிலிருந்து விஷ்ணு ஏழு சந்தஸ்ஸுகளால் உலகை அளந்தருளினாரோ அந்த பூமியிலிருந்து தேவர்கள் எங்களைக் காப்பாற்றட்டும்.''**

**இதனால் பூமியிலிருந்துதான் பகவான் அடிவைப்பை நிகழ்த்தியிருக்கிறான் என்பது தெரிகிறது. பூமி முழுவதும் அவனுடைய ஒரு திருவடிக்குள் அடங்கிவிட்டதால் பூமியில் உள்ள மனிதர் உள்ளிட்ட அனைத்து ஜீவராசிகளின் தலைக ளிலும் அவனது திருவடித் துகள் பட்டுவிட்டது என்பது தெரிகிறது. அதனால் ஞானமடைந்த பூவுலகத்தார் பூவுலக ஆசைகளிலிருந்து விடுதலையை வேண்டுகிறார்கள் என்பது இம்மந்திரத்திலிருந்து தெரிய வருகிறது. அதாவது இந்தக் கர்ம பூமியில் உள்ள வாழ்க்கை என்பது இன்பம் துன்பம் இரண்டும் கலந்தது. மேலும் மேலும் பிறவியை ஏற்படுத்தக் கூடியது. இந்தப் புவி வாழ்க்கையில் ஆசை இருக்கும்வரை பிறவியற்ற பெருவாழ்வை அடைய முடியாது. (தொடரும்)**

# திருவேங்கடவன் உலா

ஆசிரியர்: தி.பொ. பழனியப்ப பிள்ளை.(பதிப்பாசிரியர்-1950ஆம் ஆண்டு திருவேங்கடவன் கீழ்க்கலை ஆராய்ச்சிக்கழகம் பதிப்பித்த நூலில் அமைந்துள்ள குறிப்புகள்.)

**இதழ்162. 47ஆவது கண்ணியின் தொடர்ச்சி.**

(கார்த்திகை என்றே-கையிற் கொண்டு காப்பாற்று வாய் என்று. குந்தி-குந்திதேவி. கட்டுரைப்பான் - உறுதி யுரைக்கப் பெற்றவன். இவ்வடியில் 3ஆவது கார்த்திகை நட்சத்திரப் பெயர் தொனித்தல் காண்க. காத்தி என்ற இலக்கணச் சொல் 'கார்த்தி' என ரகர ஒற்று விரித்தல் விகாரம் பெற்றதாய்க் கொள்ளுக. இது பாரத வரலாறு. வேகா - பிரமன். உரோகிணியின் வர்க்கத்தான் - வசுதேவர் மனைவியாய உரோகிணி தேவியின் இனத்தான். இதில் 4ஆவது உரோகிணி நட்சத்திரப் பெயர் தொனித்தல் காண்க. இது பாகவத வரலாறு. சிலை - வில்லு.

*48.* *வேழக்கா னோடி மிருகசிரத் தேயெய்தா*
*னாழக் கனதரங்க வாதிரையான்-வாழியமண்*

வேழம் - யானை. கான் - காடு. மிருகசிரத்தே - மான் தலையில். எய்தான் - அம்பு செலுத்தியவன். இது இராமாயண வரலாறு. இதில் 5ஆவது மிருகசீர்ஷம் என்ற நட்சத்திரப் பெயர் தொனித்தல் காண்க. ஆழம், பெருமையுடைய அலைகளையுடைய பெருங்கடல். இருப்பு உடையான் - இதில் 6-ஆவது ஆதிரை நட்சத்திரப் பெயர் தொனித்தல் காண்க. மண் - திருமண்.

*49.* *பூனிபுணர் பூசத்தான் பூசத்தா னுண்மகிழ்வா*
*னீனரெல்லா மாயி லியம்பரியான் - வானவர்கள்*

பூநிபுணர் - உலகில் உள்ள அறிஞர். னகரநகர வெழுத்துக்கள் ஒலிவடிவாலொத்தன. பூச - அணிய. தான்

பூச - தானும் அணிய. உலகின் அறிஞர் திருமண் அணிந்து தொண்டராகத்தான் திருமண் அணிந்து உள் மகிழ்வோன் என்க. இவ்வடியில் 7, 8ஆவது புனர்பூசம், பூசம் என்ற நட்சத் திரங்களின் பெயர் தொனித்தல் காண்க. ஈனர் - கீழோர். ஆயில் - ஆராய்ந்தாலும். இயம்பரியான் - சொல்லுதற்கு அரியவன். இயம்ப வரியான் என்பது மரூஉ முடிபு கொண்டு இயம்பரியான் என நின்றது. இவ்வடியில் - ஆயிலியம் என்ற 9ஆவது நட்சத்திரப் பெயர் தொனித்தல் காண்க.

*50. பூரிமகத் தானணிகற் பூரத்தா னுத்தரத்தான்*
*சீரியவத் தன்மணிரா சித்திரையான் - வேரிமழை*

பூரி - மிகுதி. மகத்தான் - யாகபதி. அணி கற்பூரத் தான் நெற்றியில் அணியும் பச்சைக் கற்பூரத்தையுடையவன். உத்தரத்தான் - பெரியான். இவ்வடியில் 10,11,12ஆவது நட்சத்திரங்கள் ஆகிய மகம், பூரம், உத்தரம் என்பவற்றின் பெயர் தொனித்தல் காண்க. சீரிய - சிறந்த, அத்தன் - தந்தை. மணி ராசித்திரையான் - மணிக் கூட்டங்கள் உள்ள கடலை யுடையவன். வேரி - தேன். இவ்வடியில் 13,14ஆவது நட்சத்திரங்கள் ஆகிய அத்தம் (ஹஸ்தம்), சித்திரை என்பவற்றின் பெயர்கள் தொனித்தல் காண்க.

*51. யன்னவெழிற் சோதியா னாவிசா காப்பதத்தான்*
*மன்னனுடன் வந்தாண் மணவாள - னுன்னி*

எழில் - அழகு. சோதி - ஒளி. ஆவி சாகாப் பதத்தான், உயிர்கள் சாவு இன்றி இருக்கும் வைகுண்டத்தையுடையவன். இவ்வடியில் 15, 16ஆவது நட்சத்திரங்கள் ஆகிய சோதி (ஸ்வாதி), விசாகம் என்பவற்றின் பெயர் தொனித்தல் காண்க. மன்னன் - அரசன் இராமாயண பாரத பாகவத வரலாற்று அரசர்களுள் ஒருவர் உடன் வந்து ஆண்ட மணவாளன் என்க. இவ்வடியில் 17ஆவது நட்சத்திரம் ஆகிய அனுடத்தின் பெயர் தொனித்தல் காண்க. பி-ம். 'ஆவிசாகற்பத்தான்'.

*52. யலையத்தி கேட்டை யடுமுல மானேன்*
*பலபொற்பூ ராடம் பரத்தான் - நிலவாய்*



அலை யத்தி - அலைகளையுடைய கடல் அல்லது அலையும் யானை. கேட்டை - கேட்டினை. மூலம் - வாயில். இவ்வடியில் 18,19ஆவது நட்சத்திரங்கள் ஆகிய கேட்டை, மூலம் இவற்றின் பெயர் தொனித்தல் காண்க. பொற்பு - அழகு. ஊர் - பொருந்தும். ஆளு அம்பரத்தான் - சிறந்த ஆடையை உடையான்: பீதாம்பரம் உடையான் என்றபடி. இவ்வடியில் 20ஆவது பூராடம் என்ற நட்சத்திரப் பெயர் தொனிப்பது காண்க. நிலவு ஆய் - திங்கள் ஒளி போலாகி.

*53. நகைக்குமுத்த ராடவெழி னற்குரவை யானான்*
*மிகைத்ததிரு வோணத்தின் மீதா - னிகைத்தா*

நகைக்கு முத்தராட - சிரிக்கும் பற்களையுடைய இடையர் மகளிர் உடன் ஆடும்படி. குரவை - கைகோத்தாடுங் கூத்து. 'குரவை யென்பது கைகோத் தாடல்'. இவ்வடியில் உத்தராடம் என்ற 21ஆவது நட்சத்திரப் பெயர் தொனிப்பது காண்க. மிகைத்த - சிறப்புற்ற. திருவோணத்தான் மீதான் - திருவோண நாளில் பிறந்தான். ''ஓணப்பிரான்'' என்றபடி. இதனில் 22ஆவது திருவோண நட்சத்தித்தின் பெயர் வந்துளது. இகைத்தாய் - இதல் உடைய துர்க்கை. பி-ம். 'இகத்தர்'.

*54. யிதையவிட்ட மானா னெனதுபகை வெற்பைச்*
*சதையவிட்ட பூங்கமலத் தாளான் - குதையம்பா*

இதைய இட்டம் - மன விருப்பம். வெற்பு - மலை. இவ்வடியில் 23ஆவது அவிட்ட நட்சத்திரத்தின் பெயர் தொனித்தல் அறிக. சதைய - சிதையும்படி. கமலத்தாளான் - தாமரை மலர் போன்ற திருவடியுடையான். குதை - வில்லின் துனிக்கட்டு அல்லது அம்பின் அடி. இவ்வடியில் 24ஆவது சதைய நட்சத்திரத்தின் பெயர் தொனித்தல் காண்க.

*55. லப்பூரட்டாதி யமரர்க்கா யுத்திரட்டா*
*திப்பூத னெந்தை யிரேவதிக்கோ - னெப்போது*

அப்பு ஊர் அட்டு - நீரால் சூழ்ந்த பேரூர் ஆகிய இலங்கையை வென்று. ஆதி அமரர்க்கு - முதிய தேவர்

பொருட்டு. உத்து இரட்டாது - போர் இரண்டாகாது. இவ்வடியில் பூரட்டாதி உத்திரட்டாதி என்ற 25,26ஆவது நட்சத்திரங்களின் பெயர் வந்துள்ளது காண்க. இரேவதிக் கோன் - பலராமன். இவ்வடியில் 27ஆவது இரேவதி என்ற நட்சத்திரப் பெயர் வந்துள்ளது அறிக.

*56. மேட விளைதாளான் வித்துநூற் றோர்தந்தை*
*மேடமே யென்ன விரித்தான்வி-சேட*

இக்கண்ணி முதலாக 81ஆவது கண்ணிவரை 26 கண்ணிகளிலும் மேடம் முதலிய பன்னிரண்டு ராசிகளின் பெயர்களும், சூரியன் முதலிய ஒன்பது கிரகங்களின் பெயர் களும், சித்திரை முதலிய பன்னிரண்டு திங்களின் பெயர் களும் மேல் 27 நட்சத்திரப் பெயர்கள் தொனிவகையால் வந்தவாறு வந்துள்ளன. இக்கண்ணிகள் யாவும் ஏட்டுப் பிரதியிற் காணப்பெறாது ஒரு கடிதப் பிரதியிற் காணப் பட்டன. இக்கண்ணிகளுள் சில வெண்பாவடிகள் தளை சிதைய அமைந்துள்ளன. அன்றியும் பொருள் இடர்ப்பட்டுக் கொள்ளும் நிலைமையிலுள்ளது. இவை இந்நூலைக் கற்ற ஒரு புலவர் மேல் கண்ணிகளின் தொனிவகையோடு தாமும் சில உடனமைக்க விரும்பிச் சோதிடப் பொருட்டாக உள்ள இராசிப் பெயர் முதலியவற்றைத் தாமே கூட்டிக் கூறியவை போலக் காணப்படுகின்றன. இந்நூலுட் பிற பகுதிகளெல் லாம் செவ்வி குலையா தியல இப்பகுதி மட்டும் யாப்புவிதி வழுக்களுடைமையால் இங்ஙனம் ஐயப்பாடு ஏற்படுதலா யிற்று. ஆதலின் நல்லறிவாளர் இங்குள்ள பாடத்தின் பெற்றி தெரிந்து கொள்ளுமாறு இச்செய்தி தெரிவிக்கலாயிற்று. தாள் - அடி, முயற்சி. நூற்றோர் - நூற்றுவர் ஆகிய துரியோதனா தியர். தந்தை - திருதராட்டிரன். மேடம் - ஆடு.

*57. மிடபமென வீட்டினா னிடபமே றீச*
*னிடபணிமு னோனிடபற் கிறைவ-னிடப*

இடபம் - காளை மாடு. இடபம் ஏறு ஈசன் - சிவன். தளைவமு உள்ளது. இறைவன் - தலைவன். இவ்வடியும் தளைவமுவுள்ளது. (தொடரும்)



# திருவிருத்தத்தில் அகஇலக்கியக் கோட்பாடுகள்

இதழ் 162இன் தொடர்ச்சி. ஆசிரியர்: ஸ்ரீவைஷ்ணவஸ்ரீ அ. கிருஷ்ணமாசார்யார்.

**274. ஆற்று வித்திருந்த அருமை சாற்றல் 162இன் தொடர்ச்சி:**

'பாங்கி நின்பொருட் பிரிவுரை நீ யவட் கென்றல்' என்பது பிரிவுடன் படாமைக்கு உரித்து;

'தலைமகள் நீடேனென்றல்' என்பது பிரிவுடன் படுத்தற்கு உரித்து; 'பாங்கி தலைவிக்கு அவன் செலவு ணர்த்தல்' என்பது பிரிவுடன்படுதற்கு உரித்து;

'தலைமகளிரங்க'லும், 'கொடுஞ்சொற் சொல்ல'லும், 'பருவங்கண்டு பெருமகள் புலம்ப'லும், 'மறுத்த'லும் 'அவனவட் புலம்ப'லும் ஆகிய ஐந்தும், பிரிவுழிக் கலங்கற்கு உரிய;

'பாங்கி கடுஞ்சொற் சொல்ல'லும், 'வருகுவர் மீண்டெனப் பாங்கி வலித்த'லும், 'பருவமன்று வம்பென் ற'லும், 'அவர் தூதாகி வந்தடைந் திப்பொழு தென்ற'லும், ஆகிய நான்கும் வன்புறைக்கு உரிய;

'தலைமகளாற்றல்' என்பது வன்பொறைக்கு உரித்து;

'தலைமகள் மீண்டு வருங்காலைப் பாகனொடு சொல்ல'லும்' மேகத்தொடு சொல்ல'லும் ஆகிய இரண்டும் வருவழிக் கலங்கற்கு உரிய; 'பாங்கி வலம்புரிகேட்டு அவன் வரவறிவுறுத்தல்' முதலிய ஐந்தும் வந்துழி மகிழ்ச்சிக்கு உரிய.

**வரைவிடைவைத்துப் பொருள்வயிற்பிரிதல் முற்றிற்று.**
**முதலாவது களவியல் முற்றிற்று.**

### வரைவியல்

**வரைவு:** தலைமகளைத் தாய், தந்தையர், சுற்றத்தார் முதலியோர் மணஞ்செய்து கொடுப்பினும், கொடாவிடினும், தலைமகன் அவளை விதியின் படி பலரறிய மணஞ்செய்து கொள்ளல். இதுவும் கற்றியலைச் சேர்ந்த ஒரு பகுதியே யாகும். புணர்தல் நிமித்தமும், புணர்தலும் குறிஞ்சி யெனக் கூறிதுபோன்று இல்வாழ்க்கையின் பொருட்டு நடைபெறும் முயற்சிகளும், இல்வாழ்க்கையும் கற்பியல் எனக் கூறப் பட்டது.

**வரைவியல்:** இல்வாழ்க்கையில் நுழைதற்காக மேற்கொள் ளும் முயற்சிகள்.

**கற்பியல்:** இல்வாழ்க்கையிலிருந்து ஒழுகும் கற்பொழுக்கம்,

**1. வரைவுமலிதல்.**

**வரைவு மலிவு:** மணத்தைக் குறித்த முயற்சிகள் நடை பெறுதல்.

பொருள் செய்தற்குக் காரணமாகத் தலைவியை விட்டுப் பதினாறாம் நாள் பிரிந்த தலைமகன் முப்பத்து நான்கு நாட்களில் பொருள் திரட்டி ஐம்பத்தொன்றாம் நாள் திரும்பி வந்தான். அங்ஙனம் திரும்பிய தலைமகனின் மனம் மணத்திற்காக விரைந்தது. தலைவன் தலைவியின் பெற் றோர்க்கு முதியோர் மூலமாகச் சில பரிசுகளை அனுப்பினான். அவ்விஷயம் தோழிக்குத் தெரிந்தது. தோழி ஓடோடியும் வந்து 'நின் காதலர்' பெரும் பொருளை நினைக்குப் பரிசாக அனுப்பியுள்ளார். ஆதலின் உன் மணம் விரைவில் நிறை வேறும். உன் வருத்தத்தை ஒழிப்பாயாக'', என்னும் மகிழ்ச்சி தரக்கூடிய செய்தியைத் தலைவிக்கு அறிவித்தனள். அது தலைவிக்குப் பெருமகிழ்வை ஈந்தது.

தலைவன் தமர் (சுற்றத்தார்), கொணர்ந்த பரிசைத் தலைவியின் தமர் முழு மனதுடன் ஏற்றுக் கொண்டு அத்தலைவனுக்குத் தம் மகளை மணஞ்செய்து தர ஒப்புக் கொண்டனர். இதைத் தோழியால் அறிந்த தலைவியின்



மகிழ்வு கடலினும் பரந்து நின்றது. அவ்வாநந்தத்தை அவளால் அடக்க முடியவில்லை. ஆதலால் அவள் ''மனமே நீ இருளாகிய கடலைக் கடந்து ஒளியாகிய கரையையடையும் காலம் நெருங்கிற்று. இனி துன்பத்தால் வருந்தற்க'' எனத், தன் நெஞ்சிற்குக் கூறித் தேத்தினள். தோழி மனத்திற்கும் ஆறுதலுண்டாயிற்று. அவள் தலைவியிடம் சென்று ''உலகத்தார் தூற்றும் பழி நீங்க நீ அவளுக்கு அன்று சூட்டிய மாலையையும் பலரறிய இன்றும் சூட்டி நெடுங்காலம் வாழ்வாயாக'' என அவளை வாழ்த்தினள்.

தலைவி தன் மணம் அன்றே நடைபெறுதற் பொருட்டுத் தெய்வதத்தைப் பரவி நின்றாள். அவள் தெய்வதத்தை வரம் வேண்டி நிற்கும் நிலையைத் தொலைவி லிருந்து கண்ட தலைவனின் மனம் வியப்பினால் மகிழ்வினும் நிரம்பப்பெற்றது.

*ஐம்பத்தொன்றாம் நாள் செய்கை முடிந்தது.*

### இரண்டாவது - வரைவியல்

வரைவு என்பது, தலைமகன் தலைமகளைக் குரவர் முதலாயினோர் கொடுப்பவும் கொடாதொழியவும் வதுவைச் சடங்கொடு பொருந்தி மணஞ்செய்து கோடல்.

ஆதியில் எடுத்துக் கோடற்கண்ணே களவு என்றும், கற்பு என்றும் கைகோள் இரண்டென வைத்து, அவ்விரண்டுக் கும் நடுவே வரைவியல் என்று கூறியதனால் முன்னதனோடு மாறு கொள்ளுமெனின் மாறுகொள்ளாது; என்னை, கற்பிற்கு நிமித்தமாய வரைவு கூறுதலான் இதுவும் கற்பின்பாற்படும். ஆயின், இதனைக் கற்பின் பாற்படுத்துக் கூறாது, வரைவியல் என வேறாகக் கூறியது என்னையெனின், வரைவு மலிவு முதலாக உடன்போக்கிடையீடு ஈறாகப் பலவகைப்பட்டு, ஒவ்வோர் வகைக்குக் கிளவிகளும் பலவாக அதிகாரப்பட்டு நடத்தலின், விளங்குதற்கு, வரைவியல் என வேறு கூறப்படும். என்னை, புணர்தலும் புணர்தல் நிமித்தமும் குறிஞ்சி யாயினவாறுபோல, இல்வாழ்க்கையும் இல்வாழ்க்கை நிமித்தமும் ஆய வரைவும் கற்பெனப்படுமென்று உணர்க.

''வரைவு மலிவே யறத்தொடு நிலையென்
றுரையமை யிரண்டும் வரைவிற் குரிய
கிளவித் தொகையெனக் கிளந்தனர் புலவர்.'
*(அகப்பொருள் விளக்கம் வரைவியல் நூற்பா. 2)*

என்னுஞ் சூத்திரவிதியால், வரைவுமலிவும் அறத்தொடு நிலையும் என வரைவு இரண்டு வகைப்படும். அவற்றுள்,

வரைவுமலிவு

வரைவுமலிவு என்பது, வரைவு தொடங்கி நடக்கும் முயற்சி மிகுதல்.

''வரைவுமுயல் வுணர்த்தல் வரைவெதிர் வுணர்த்தல்
வரைவறிந்து மகிழ்தல் பராவல்கண் டுவத்தலென்
றொருநால் வகைத்தே வரைவு மலிதல்.'
*(அகப்பொருள் விளக்கம் வரைவியல் நூற்பா - 3)*

என்னுஞ் சூத்திரவிதியால், வரைவுமலிதல் நால்வகைப்படும்.

துறை:

275. காதலன் முலைவிலைவிடுத்தமை பாங்கி காதலிக் குரைத்தல்.

ஒள்ளிய நுதலை யுடையாய்! காதலர் எடுக்க எடுக்கத் தொலையாத பலவாகிய பொருள்களைச் சூதுபோற் பொருந் தும் நின் முலைவிலையாக வம்பண அளவையான் முகந்த ளித்தார்; நீ வருத்தமில்லையாகுக, பசலை நிறத்தை யொழிப் பாயாக என்றவாறு. முலைவிலை - கோடற்குரியார் கொடுத்தற்குரி யார்க்குக் கொடுக்கும் பொருள்.

276. காதலி நற்றாயுள்ள மகிழ்ச்சியுள்ளல்.

காதலி நற்றாய் உள்ளமகிழ்ச்சி உள்ளல் என்பது, தலைவன் விடுத்த முலைவிலைப் பொருள்களைக் கண்டு, மகட்கு, மணக்காலம் என்று, நற்றாய்மகிழும் உள்ளத்து மகிழ்ச்சியை தலைவி நினைத்தல். (தொடரும்)



## ஹரிதாஸரின் இருசமய விளக்கம்

*இதழ் 162இன் தொடர்ச்சி. விளக்கவுரை:புதுச்சேரி-பெருமாள் ராமாநுஜதாஸர்.*

**1ஆவது விஷ்ணு பூசை வைபவப் பரிச்சேதம் தொடர்ச்சி.**

*16.* ஓங்குசீர் வசிட்டன்வீட் டுமன்றான்பண்
உயர்சுகன் வீடணன் உருக்கு
மாங்கதன் முதலாம் பரம பாக
வதர்தாம்மன் டுங்கார ணசன்ம
பாங்கினர் தம்மால்தே வரால்ஞானம்
படைத்துவாழ்ந் திடுதபோ தனரால்
பூங்கடல் சூழவிளங் கியஇந்தப்
புவனமேற் பூசனை கொள்ளும்.

(ஓங்கிய பெருமையுடைய வசிஷ்டர், பீஷ்மர், சுகமுனிவர், விபீஷணன், ருக்மாங்கதன் முதலாகத் தம்மால் தேவர் முதலானார்க்கு ஞானமளித்து வாழ்ந்திடும் தபோதன ரால் அழகிய கடல் சூழ்ந்து விளங்கும் இந்தப் புவியின் மேல் பரம பாகவதர்கள் செய்யும் பூசனைகளை உகந்தருளுவான் ஸ்ரீமந்நாராயணன்)

*17.* தகுமது நிற்கவவன் பிரமாதி
தங்கியபி பிலிகாந் தமதாம்
அகணிதசீ வகோடி கட்கெல்லாம்
அந்தரி யாமியாய் இருந்து
மகிமைசேர் சுகரால்வா மதேவர்க
ளான்மற்று ஞானாதி கராகித்
திகழ்வுறும் பரமயோகி களாலும்
திருந்தவா ராதனை விரும்பும்

(நெடுமால் பிரமன் முதல் எறும்பு வரையிலான கணக்கற்ற ஜீவகோடிகட்கெல்லாம் அந்தர்யாமியாயிருந்து,

மகிமை பொருந்திய சுகபிரம்ம ரிஷி, வாமதேவர் மற்றுமுள்ள ஞானாதிகர்களான பரமயோகியர் செய்யும் ஆராதனைகளை எல்லாம் எம்பெருமான் நாரணன் ஏற்றுக் கொண்டி ருக்கிறான்.)

*18.* *செப்பிய அந்தச்சீ தரனுலகில்*
*சேதனா சேதன மெல்லாம்*
*மெய்ப்புவி யதிலீடே றவேசுயம்பு*
*வியத்தவிக் கிரகமும் விண்ணோர்*
*அப்பெரு முனிவர் நரர்களாற்*
*பதிட்டையருச் சனாவிம்ப முமேவி*
*ஒப்பறும் திருவாரா தனையொன்று*
*பத்துநூ றாயுகந் தருளும்.*

(திருமாலின் உலகமாகச் சொல்லப்பட்ட இந்த வுலகில் வாழும் ஜீவர்களெல்லாம் ஈடேற சுயம்பு விக்கிரஹத் தையும், தேவர்கள், முனிவர்கள், மனிதர்கள் ஆகியோரால் பிரதிஷ்டிக்கப்பெற்ற விக்ரஹத்தையும் திருமால் விரும்பி எவரும் அன்புடன் செய்கிற ஆராதனை யொன்றினைப் பத்து நூறாகக் கொண்டு எம்பெருமான் உகந்தருள்வான்.)

*19.* *உற்றிடும் இந்தமூர்த்தி பஞ்சகத்தை*
*உரைத்ததும் பாஞ்சராத் திரநூல்*
*மற்றதன் றிக்கேநால் வகையான*
*வாசுதே வாதிமூர்த் திகளே*
*சொற்றரு மிந்தவியூ கமேமுதலாச்*
*சொல்லிய நாலுபா சனைக்கும்*
*கற்றையங்கு ழலாகம மடப்பாவாய்!*
*காரண மகையி னாலே.*

(செங்கண்மாலின் பரத்துவம் முதலான ஐந்து வகையான நிலைகளையும் பாஞ்சராத்திரம் என்னும் நூல் செவ்வனே உரைத்தது. நான்கு வகையான வாசுதேவர் முதலான மூர்த்திகளே, வியூக முதலான நான்கு உபா சனைக்குக் காரணமாவர், அழகிய கற்றைக் குழலையுடைய ஆகம மடப் பாவாய்! இதனை நன்கு உணர்ந்து கொள்.)



*20.* *எழில்பெறும் இந்தமூர்த் திகடமையே*
*இலங்குவை கானசத் தினிலும்*
*பழுதறு பரியாயப் பெயராலே*
*பஞ்சமூர்த் திகளெனப் பகரும்*
*அழகுசேர் அகண்டமா கியபிரம*
*அமைவகை யாயள விட்டு*
*மொழிவதற்கெ ளிதாயிருக்கு மோவென்னின்*
*முருகலர் செறிந்தமொய் குழலாய்.*

(அழகு வாய்ந்த இந்த மூர்த்திகளையே வைகாநச சாஸ்திரம், முன்னுரைக்கப்பெற்ற குற்றமற்ற பரியாயப் பெயரால் பஞ்சமூர்த்திகள் என்று உரைக்கப் பெற்றது. எங்கும் நிறைந்த அகண்ட பரிபூர்ணமாயிருக்கின்ற இறைவனான ஸர்வேச்வரன் பரத்வம் முதலாக ஐந்து வகையால் அளவிட்டுச் சொல்வதற்கு எளிதாயிருப்பானோ? என்ற ஐயம் உண்டாகலாம். அழகிய மலரணிந்த குழலினையுடைய ஆகம மடந்தாய்! இதனை உற்று நன்றாகக் கேள்.

*21.* *ஏரமர் பிரமம்பஞ் சமூர்த்தியுமா*
*யிருக்குமென் றியாவரும் மதித்த*
*நாரணோப நிடம்பகரும் அப்படியே*
*நலம்புனை உலககா ரணனாம்*
*சீரியதே சோராசி யாய்விபுவாய்ச்*
*சிறந்தநா ராயண மூர்த்தி*
*பூரணமாந் தன்சுபாவ லீலையினால்*
*புவிக்கனுக் கிரக முமாக;*

(அங்ஙனம் பிர்ம்மமானது ஐந்துவகை நிலையில் உள்ளதா? என்ற சந்தேகத்தை யொழிப்பதற்காகவே யாவராலும் கொண்டாடப்படுகின்ற நாராயண உபநிஷத் தானது அன்பர்கள் கொண்டாடி வழிபடுவதற்காகவே ஸர்வேச்வரன் பஞ்சமூர்த்தியாயும் இருப்பானென்றுரைத்தது. உலககாரணனாய், தேஜோமயனாய், விபுவாய், பரிபூர்ணனா

யிருக்கின்ற நாராயணன் தன் இயற்கை விளையாட்டினால் உலக மக்களை அனுக்கிரஹம் செய்வதற்காக;)

*22.* காசினிமே நெய்கடின மாவதுபோல்
காட்சிசேர் வடிவமுந் தரிக்கும்
பேசுமங் கவனாரா தனைசெய்யப்
பெறுவதும் எவர்க்கு மெய்தாது
பூசல்வண் டலம்பும்பு ரிகுழல்மா
னே! புலப்படப் புகன்றிடும் இந்த
வாசகந் தனக்குமொரு பிரமாணம்
வகுத்துரை செயமனங் கொள்ளாய்.

(புவிமீது நெகிழ்ச்சியாயுள்ள நெய்யானது கடினமாய் உரைந்துவிடுவதுபோன்ற வடிவை உடையவனுமாயிருப்பான் இறைவன். இத்தகைய ஸர்வேச்வரனை ஆராதனம் செய்யும் பாக்கியம் எவருக்கும் உண்டாக மாட்டாது. வண்டுகள் ரீங்காரம் செய்யப்பெற்ற மலர்களை அணிந்த ஆகமப் பெண்ணே! இதற்குத்தக்க காரணம் எடுத்துரைப்பேன் கேள்.)

*23.* பருதியை மூவேழ்சன னமர்ச்சித்தால்
பசுபதி பத்திசம் பவிக்கும்
கருதும வனையேழ ரெழுசன்மக்
காட்சியாம் பூசனை செய்தால்
சுருதிசாத் திரசம்பன் னாமந்தத்
துறையில்முச் சனனமா சரித்தால்
திருவளர்மார் பன்பத்தி யெய்துமெனச்
செப்புமா தித்திய புராணம்.

(சூரியனை இருபத்தொரு ஜன்மம்வரை அர்ச்சித்தால் சிவன் விஷயமான பக்தியுண்டாகும். இந்தச் சிவபக்தியுடன் ஏழுஜன்மம் கழிந்தவுடன் வேதசாஸ்திர ஸம்பந்நனாய் விளங்குவான். இங்ஙனம் வேத சாஸ்திரத்தில் பற்றுடையவனாயிருந்து மூன்று ஜன்மம் கழிந்தவுடன் திருவளமார்பனாகிய விஷ்ணுவிடத்தில் பக்தியுண்டாகும் என்று ஆதித்திய புராணம் இனிது எடுத்தியம்பியது.

(தொடரும்)



# மாறன் பாப்பாவினம்

இதழ் 162இன் தொடர்ச்சி. டாக்டர். அருட்கவி அரங்க சீனிவாசன்.

**அஃதான்று**

உருவிலா உருவிற்றாம்
உருளிலா மசரதத்தைப்
பருகுவான் புனலெனச்செல்
பாலைசார்ந்து உளம்கொதிநோய்
திருமகளோடுஉறும்இன்பத்(திருமகளால் பெறுமின்பத்)
திரையாடத் துறந்தனவே

அஃதான்று

வரையிரு மருங்கினும் மரீஇய வெவ்விடம்
புரைசுரத்து ஆரதர்(ஆரதர்ப்) புக்குயிர்க்கு உறுநோய்
அம்மென் சாயல் அணிமயில் பைம்பூண்
கொம்மை வெம்முலைக் குன்றிடை முயங்கலின்
நனவு கனவா நயந்துழி
நினைக லாநீ ளிடைநீத் தனவே. *102*

(இது, தரவு தாழிசை தனிச்சொல் சுரிதகம் என்னும் நான்கு உறுப்பினோடும் தாழிசைதோறும் தனிச்சொல் பெற்று நேரிசை ஒத்தாழிசையில் சிறிது யாப்பின் வேறுபடுதலால், ஒருசார் ஆசிரிய சிஃறாழிசைக் கொச்சகக் கலிப்பா என்ப. இதுவும் எண்ணிடையிட்டுச் சின்னம் குன்றிய கொச்சக ஒரு போகு. பகுதி - பொருள்வயிற் பிரிதல். துறை - உள்மகிழ்ந்துரைத்தல்.)

பொருள்தேடச் சென்ற தலைவன் திரும்பி வந்து தலைவியுடன் இன்பம் திளைத்துக் கூறுவதாக அமைந்தமையால் உள்மகிழ்ந்துரைத்தல் துறையானது.

புத்தேளிர் - தேவர்கள். நிரப்பு இகப்பான் - வறுமை தீரும் பொருட்டு. பெருமான் ஆம் - தலைவன் ஆகிய. நல் மருந்து - அமுதம். இறுத்த புலம்துவர - தங்கியுள்ள பொன்னு லகம் வெறுக்க, துறந்து - அமுதினைத் துறந்து. இழைத்த வரம் - செய்ததவம். தோள்துறந்து - இன்பம் வெறுத்து. செம்பொருள் - செல்வம். ஒருதலை -உறுதிப்பாடு. உருப்பு அவிர் - வெப்பம் பொருந்திய. வேங்கடம் - பாலைவழி. வறம் - வறட்சி. நாவின்நோய் - தாகம். இலவி இதழ் இலவ மலர் போன்ற இதழ்.

வேல் நுதி வன் பரல்கடம்-வேலின் நுனிபோன்ற வலிய பரற் கற்களையுடைய பாலைவழி. உமையாள் கோன்-சிவன். தழல் - நெருப்பு. மதன்என - மன்மதன்போல. மெய்கூர்ந்த - உடலில் மிக்க. பானல் - கருங்குவளை மலர். கிளிமொழி - தலைவி. பரிசம் - கலவி.

உருவிலா உருவிற்று - உருவமில்லாது இருந்தும் உருவம்போல் தோன்றுகின்ற. உருளிலா மசரதம் - சக்கர மில்லாத பேய்த்தேர்.

பருகுவான் புனல் - அருந்துகின்ற சிறந்த நீர். கொதி நோய் - கொதிக்கின்ற துன்பம். இன்பத்திரை - இன்பக் கடல். ஆட - மூழ்குவதால்.

வரை இருமருங்கினும் மரீய - மலையின் இருபாலும் பொருந்திய. புரை - போன்ற. சுரத்து ஆரதர் - பாலையின் அரியவழி. மயில் - தலைவி. நயந்துழி - விரும்பியவிடத்து. நீளிடை - நெடுந்தொலைவு.

தேவர்களின் வறுமைதீரக் கடல் கடைந்து கண்ண பிரான் அருளிய அமுதினை வெறுத்து, தேவர்கள் புரிந்த தவத்தால் வந்த பெண் அமுது ஆகிய தலைவியின் கலவி துறந்து, இல்லறத்தார்க்கு இன்பமும், வறியவர்க்குத் தருகின்ற நல்லறத்தின் தொடர்பும் தருவது கைப்பொருள் என்று கருதி, பாலைவழியில் வரும்பொழுது வறட்சிமிக்க நாவின்தாகம் இம்மடந்தையின் இதழ் அமுது அருந்துவதால் தீர்ந்தது.



சிவன் நெற்றிக்கண் நெருப்பில் மூழ்கித் துன்புற்ற மன்மதன்போல், பரற்காட்டிலே உடல்வருந்திய துன்ப மானது, இந்தக் கிளி மொழியாளின் கலவியால் தீர்ந்தது. பேய்த்தேரை நீர் என்று கருதிச் செல்கின்ற பாலையைச் சேர்ந்து, உள்ளம் கொதித்த துன்பம் இவளோடு சேரும் இன்பக் கடலில் மூழ்கியதால் தீர்ந்தது.

பாலையில் புகுந்து உயிர்க்கு உற்ற துன்பம் இவளின் முலைக் குன்றுகளில் முயங்குவதால் நெடுந்தூரம் சென்று ஒழிந்தது என்பது பாடலின் சாரம்.

*மாதர்வாண் முகத்துஇருள்தீர்*
*மதிப்பிளவொத்து இமிழ்இசைய*
*ஓதநீர்ப் படுவிடம்துற்று*
*உரவிடையார்க்கு இடர்இழைத்த*
*மேதையான் இடம்தழீஇ*
*மேம்படுவிற் றுணைசெகுத்த*
*திலகவா ணுதல்புருவத்*
*திருமகள்கா முறும்பெருமான்*
*அலகிலாக் குணங்களின்ஆழ்ந்து*
*அருமறைவண் தமிழ்கூர்ந்த*
*தெண்திரைத்தண் துறைப்பொருநைத்*
*திருநாடன் திமிரவரி*
*வண்டுஇரைக்கும் மகிழ்மாலை*
*மணிமார்பன் துடரிவாய்.*

*(இதுதரவு)*

*குறுந்துளைப்பற் பணிஉமிழ்ந்த*
*குருமணிகள் இருள்துரீ இ*
*உறும்பகல்போன்று அழலினும்மான்*
*ஒளிவிடும்நீள் நிலையவால்*

*புறக்காழ்வன் பணைஉகுத்த*
*புதுமணிமா தவன்புகழ்போல்*
*நிறக்கார்வெண் மதியினும்நீடு*
*இருள் துரத்தும் நிலையவால்.*

கொண்டலினுங்கு இடிஎனவே
        கோதையில்பே துறக்குளிறும்
தொண்டகத்தின் ஒலியடங்காத்
        துயர்இயற்றும் நிலையவால்
ஆளிஎனப் பொறிவரிய
        அடுபுலியில் தெறும்திறங்கூர்
ஞாளியின்வாய்க் குரைப்புஉயிர்க்கு
        நடுக்குஉதவும் நிலையவால்

நற்றாயர் முகத்துஉபய
        நமன்பொருவும் உருவிற்றாய்
வெற்றாலத் தினும் கொடிதாம்
        விழிதுஞ்சா நிலையவால்

ஊர்துஞ்சா துஞ்சினுமோ
        ஒருசிறைவாழ்ந் திருந்தஅய
லார்துஞ்சார் நீளிடைவாழ்
        பவர்துஞ்சி எவன்மன்னோ
            *(இவைஆறும் ஈரடிச் தாழிசை)*

எனவாங்கு *(இது தனிச்சொல்)*

கங்குல் இன்னணம் கழியா நின்றது
திங்களஞ் சுடரினிச் சேணுறல் உளதால்
இன்னுயிர்க் கேள்வர் எய்தார்என்
பொன்னிறப் பைம்பூண் புணர்முலைக் குவட்டே. *(103)*
            *(இது சுரிதகம்)*

(ஏழடித் தரவும் ஈரடித் தாழிசை ஆறும் தனிச் சொல்லும் நேரிசை ஆசிரியத்தால் இற்ற சுரிதகமும் பெற்று ஒத்தாழிசையிற் சிறிது வேறுபட்ட இதனையும் அவ்வாசிரியர் பஃறாழிசைக் கொச்சகக் கலிப்பா என்ப. இவற்றது பேதங் களும் கண்டு கொள்க.

பகுதி - இரவுக்குறி(யிடையீடு). துறை - காப்புச் சிறைமிக்க கையறுகிளவி. அலங்காரம் ஒத்தது வென்ற தென்னும் வாய்பாட்டால் ஒரு தொடர்பினுள் வந்த உவமை.)

(தொடரும்)

# எனது வாழ்க்கைப் பாதையின் கடந்த காலச் சுவடுகள்

*இதழ் 162இன் தொடர்ச்சி. கட்டுரையாசிரியர்: ஸ்ரீவைஷ்ணவஸ்ரீ. அ.கிருஷ்ணமாசார்யர்.*

**பறிபோன பத்திரிகை சுதந்திரம் (தொடர்ச்சி)**

**குறிப்பாக, அங்கதக் கிண்டல்கள் நிறைந்த நகைச் சுவைத் துணுக்குகள் தடை செய்யப்பட்டன. தமிழ்நாட்டு அரசியல் எழுத்தாளர். சோ. ராமசாமி 'அரசியல் சட்டத்திருத் தங்கள் பற்றிய ஒரு தேசிய விவாதம்' என்ற தலைப்பிலான ஒரு கேலிச்சித்திரத்தில் பிரதமரும் அவருடைய மகன் சஞ்சய் ஆகிய இருவரும் மட்டுமே இருப்பதாக வரைந்து, அதனைக் கொண்டு வர முயற்சி செய்தார். ஆனால் முடியவில்லை. வாசகர் ஒருவர், 'இந்திரா காந்தி யார்?' என்று கேள்வி கேட்டபோது சோவின் பதில், 'மோதிலால் நேருவின் பேத்தி, ஜவஹர்லால் நேருவின் மகள், சஞ்சய் காந்தியின் தாய்' என்று இருந்தது. இதுவும் நீக்கப்பட்டது. தணிக்கைக் குழுவினர் எச்சரிக்கையாக இருந்தனர். அப்படியும் ஒன்றிரண்டு துணுக்குகள் அவர்கள் பார்வையிலிருந்து தப்பி வெளிவந்தன. வீ. பாலசுப்ரமணியம், 'ஈஸ்டர்ன் எகானமிஸ்ட்' என்ற பத்திரி கையில் 'இந்தியாவில் கால்நடைகள் பிரச்சினை' என்ற ஒரு கட்டுரையை எழுதியிருந்தார். அது, 'நாட்டில் இப்போது 58 கோடி ஆடுகள் உள்ளன' என்று தொடங்கியது. பெயரற்ற ஒரு ஜனநாயகவாதி 'டைம்ஸ் ஆப் இந்தியா' பத்திரிகையில் மரண அறிவித்தல் விளம்பரம் ஒன்றை வெளியிட்டார். 'டி.இ.எம். ஓ' கிரேஸி மரணம் வருத்தமுடன் அஞ்சலி செய்வோர், அவர் மனைவி ட்.ரூத் (Truth), மகன் எல்.ஐ.பெர்ட்டி (Liberty), மகள்கள் ஃபெய்த் (Faith), ஹோப் (Hope) மற்றும் ஜஸ்டிஸ் (Justice.' (மக்களாட்சி மரித்துவிட்டது. வருத்தத்துடன் உண்மை, சுதந்தரம், நம்பிக்கை மற்றும் நீதி.)**

**தமிழ்நாட்டில் எமர்ஜென்ஸி செயல்பட்டவிதம்:**

எமர்ஜென்ஸியைப் பொருத்தவரையில் தமிழ்நாட்டில் பரவலான அத்துமீறல்கள் நடைபெறவில்லை. MISAவின்கீழ் திராவிடமுன்னேற்றக்கழகத்தைச்சார்ந்த பலர் கைது செய்யப் பட்டனர். அவர்களுக்குச் சிறைச்சாலைகளில் 'பலத்த கவனிப்பு' அதாவது லாடங்கட்டுதல் போன்றவை மேற் கொள்ளப்பட்டன. இதற்கு மாறாக எங்கும் ஒழுங்குமுறை காணப்பட்டது. நாட்டு மக்கள் அனைவரும் சட்டத்திற்குக் கட்டுப்பட்டுப் பணிகளை மேற்கொண்டனர். கையூடு வாங்குவதற்கு அஞ்சினர். வணிகர்கள் அதிகவிலை வைத்து விற்காமல் நேர்மையாக நடந்து கொண்டனர். வீட்டுக் கட்டுமானப் பொருள்களான ஸ்டீல், சிமெண்ட் அவரவர் இடங்களுக்கு கேட்ட மாத்திரத்திலேயே கொண்டுவந்து சேர்க்கப்பட்டன. வட்டாட்சியர் அலுவலகம், பதிவுத்துறை அலுவலகம் மற்றும் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் ஆகியவற்றில் பணி புரிந்தோர் எந்தவிதக் கையூட்டையும் எதிர்பாராமல் குறித்த நேரத்தில் கோப்புகளை பார்த்து உரிய நடவடிக்கைகளை எடுத்து வந்தனர். பேருந்துகள் அதிகப்பயணிகளை ஏற்றாமல் குறித்த நேரத்தில் சென்று வந்தன. தொடர்வண்டிகள் எவ்வித தாமதமும் இன்றி குறித்த நேரத்தில் சென்று சேர வேண்டிய இடங்களுக்கு சென்று வந்தன. தமிழ்நாட்டைப் பொருத்தவரை அவசர நிலை மக்களுக்கு அதிக நன்மைகளையே ஏற்படுத்தின.

**இராமநாதபுரம், சிவகங்கை மாவட்டங்களில் நிலவியிருந்த கொடுமையான பஞ்சம்:**

1974ஆம் ஆண்டின் இறுதியில் இராமநாதபுரம் மற்றும் சிவகங்கை மாவட்டங்களில் மிகக் கொடுமையான பஞ்சம் ஏற்பட்டது. 'வானம் (மானம்) பார்த்த சீமை' என்று இந்தப் பகுதிகளை அழைப்பர். இங்கு முறையான ஆற்றுப் பாசன வசதி கிடையாது. மழைநீரைக் கண்மாய்கள் என்று அழைக் கப்படும் பெரியஏரிகளில் தேக்கி வைத்து வேளாண்மைக்குப் பயன்படுத்துவர். இரண்டு மூன்று ஆண்டுகள் வான் பொய்த்தால் பெரும் பஞ்சம் ஏற்படும். இயற்கையின்



சீற்றத்தை யாரும் எதிர்கொள்ள முடியாது. கடலும், காற்றும் ஒரு கட்டுப்பாட்டுக்குள் இயங்கி வருகின்றன. மாதம் மும்மாரி பொழிந்தால் தான் வாழ்வு. இருபது நாள் வெய்யிலும், பத்து நாள் மழையும் பொழிந்திட வேண்டும். நாட்டில் பாபங்கள் பெருகப்பெருக இயற்கையின் சீற்றம் பலவகைகளில் வெளிப்படும்.

மிருகங்கள் சீற்றம் கொண்டால் முட்டிக் கொள்ளும் மோதிக் கொள்ளும், இரத்தம் சிந்தும், முடிவில் செத்தொ ழியும். மனிதர்கள் சீற்றம் கொண்டால் நேரடி மோதல், கோஷ்டி மோதல், கலவரம் போன்றவற்றில் முடியலாம். அதில் உயிரிழப்புகள் ஏற்படலாம். ஆனால் இயற்கையே சீற்றம் கொண்டால் அந்த அழிவு எதிர் கொள்ள முடியாத அல்லது தடுத்து நிறுத்த முடியாத பேரழிவாகத்தான் இருக்கும்.

1974ஆம் ஆண்டு இறுதியில் இராமநாதபுரம் மாவட்டம் இயற்கையின் இதயத்தில் ஈரமின்றி மழையில்லா மல் வறண்டு போனது. அங்கும் கடுமையான பஞ்சம் ஏற்பட்டு, மக்கள் தாங்கள் பிறந்த ஊர்களைவிட்டுப் பஞ்சம் பிழைப்பதற்காக வெளியூர்களுக்குச் சென்றார்கள்.

வயல் வரப்புகளில் உள்ள எறும்புப் புற்றுக்களில் எறும்பு சேர்த்து வைத்த புல்லரிசியைத் தோண்டி எடுத்து வந்து கஞ்சி காய்ச்சி அருந்தும் நிலை, மூட்டை முடிச்சுகளுடன் ரயிலுக்காகக் காத்துக் கிடக்கும் மக்களிடம் ''எங்கே போகிறீர்கள்?'' என்று கேட்டால், ''எங்கே போவது? பசுமை கண்ட இடங்களில் இறங்கிப் பஞ்சம் பிழைக்கப் போகி றோம்'' என்று கண்ணீர் மல்கப் பதில் சொல்லும் வறுமை நிலை காணப்பட்டது.

**தாது வருஷப் பஞ்சம்**

தாது வருஷம் என்பது தமிழ் ஆண்டிற்குச் சரியான ஆங்கில ஆண்டு 1876 ஆகும். இந்தப் பஞ்சமே தமிழ்நாட்டை தாக்கிய மிகப் பெரும் பஞ்சமாகும். இப்பஞ்சம் பாதித்ததே

மதுரை, ராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்களைத் தான்.

**சாணக்குட்டி கிழங்கை உண்டு வாழ்ந்த மக்கள்.**

மரவள்ளிக் கிழங்கு, பனங்கிழங்கு, சீனிக்கிழங்கு இவை கிராமங்களில் காணப்படும் கிழங்கு வகைகளாகும். இப்படி எத்தனையோ கிழங்குகளைப் பற்றிக் கேள்விப்பட்ட நாம் சாணக்குட்டி கிழங்கு பற்றி கேள்விப்பட்டுள்ளோமா? இது 1975ஆம் ஆண்டு ராமாநாதபுரம் பஞ்சம், அறிமுகம் செய்து வைத்த அதிசயக் கிழங்கு.

இந்தக் கிழங்கு பச்சை மஞ்சள் கிழங்குகள், மாங்காய் இஞ்சிபோலக் காணப்படும். இது பூமிக்கடியில் மூன்றடி ஆழத்தில் தோண்டினால் கிடைக்கும். பார்க்க அழகான இக்கிழங்கு விஷத்தன்மை கொண்டது. லோசாகத் தோல் உரித்த கிழங்கு கை, கால்களில் பட்டுவிட்டாலே பயங்கர அரிப்பு ஏற்படும். இந்தக் கிழங்கை ராமநாதபுரம் மாவட்ட மக்கள் பூமியைத் தோண்டி எடுத்து உணவாகப் பயன்படுத்தி வந்தனர். ஒருநாள் முழுவதும் தோண்டினால் 1படி அல்லது 2படி கிழங்குகள் கிடைக்கும். கிடைத்த கிழங்கை ஆட்டுரலில் போட்டு அரைத்து, அதை அப்படியே எடுத்து ஓலை நார்பெட்டியில் வைத்து விடுவார்கள். ஒருநாள் அப்படி வைத்து விட்டால் பாதிக்கு மேற்பட்ட விஷத் தண்ணீர் வடிந்து விடும். மீண்டும் உரலில் போட்டு அரைத்து காய்ச்ச வேண்டும். இதில் சர்க்கரை போட்டு காய்ச்சினால் இந்த மாவு வேகாது. வெந்தபின் இதில் உப்பை பொடி செய்து போட்டு விழுங்கி உணவாகக் கொண்டார்கள்.

**சிவகங்கைச் சீமையில் நிலவியிருந்த பஞ்சம்.**

எறும்பு எவ்வளவு சிறியது. அது வருடக் கணக்கில் ஊர்ந்து, ஏதேதோ தானியங்களைத் தங்கள் சக்தியை முழுதும் செலவு செய்து தூக்கி வந்து வயல் பரப்புகளில் தனது ‘பங்களாக்களில்’ பதுக்கி வைத்திருந்தன. உலகிற்கு உணவளிக்கும் இந்த விவசாய மக்களுக்கு இந்த சேமிப்பு பழக்கம் அதுவரை புத்தியில்படவில்லை. இப்படி கடத்தல்



கோட்டைகள் இருக்கின்றன என்பதை ராமநாதபுரம், சிவகங்கை மாவட்ட மக்கள் கண்டுபிடித்தனர். அதன் விளைவாக எறும்புப் புற்றுக்கள் தகர்த்தப்பட்டன.

வயல்காடுகளில் வரப்புகளில் மாடுகள் கூடத் தின்னாத புற்கள் காணப்படும். இவற்றில் பூப்போல் ஏதோ சிறிது சிறிதாகத் தென்படும். இவற்றை மைக்ராஸ் கோப் மூலம் தான் பார்க்க முடியும். காற்றடித்தால் பறந்து போகும். இதைப் புல்லரிசி என்பார்கள். இவற்றை எறும்புகள் தூக்கிக் கொண்டு போய் வரப்புகளில் மழைக்கால உணவாகச் சேமித்து வைக்கின்றன.

இந்தப்பஞ்சத்தின்போது, வரப்புகள் தகர்க்கப்பட்டு விட்டன. எறும்புகளுடன் சேர்ந்து மண்ணுடன் இவற்றை அள்ளி வந்தனர். இதில் கலந்துள்ள மண்ணை நீக்க வெள்ளை யடிப்பு மட்டைப்போல சிறு மட்டைகள் உபயோகப் படுத்தப்பட்டன. முறம் கொண்டு புடைத்தால் இந்த அரிசி பறந்து விடும். மண்ணில் இருந்து பிரிக்க சிறுசிறு துணி கொண்டு ஒத்தி ஒத்தி எடுத்து அந்தப் புல்லரிசியை சேகரித்து வந்தனர்.

நாள் முழுவதும் இந்த முறையில் பிரித்தால், அதாவது காலை 4 மணி முதல் மாலை 5 மணி வரை பாடுபட்டால், மூணு வீசம்படிதான் கிடைக்கும். அதைக் குத்திப் புடைத்து ஏதோ தானியத்தைக் கண்ணால் பார்த்து விட்ட மகிழ்ச்சியில் இரவு கூழாக்கப்படும். இந்த மூணு வீசம்படியை ஐந்துபேர் கூழாகக் குடித்து வந்தனர்.

**‘‘செந்நெலார் வயல் சூழ் திருக்கோட்டியூர்’’**

பெரியாழ்வார் தமது பெரியாழ்வார் திருமொழி தொடக்கத்தில் ‘‘கருந்தட முகில் வண்ணனைக் கடைக் கொண்டு கைதொழும் பக்தர்கள் இருந்த ஊரிலிருக்கும் மானிடர்கள் எத்தவங்கள் செய்தார்கொலோ’’ (பெரியாழ்வார் திருமொழி 4-4-7) என இவ்வூரில் உள்ளவர்களை மானிடர் கள் என உச்சிமேல் வைத்துப் போற்றுகிறார்.

இந்த ஊரைப் பாடவந்த போதெல்லாம் இதன் வளப்பமே பெரியாழ்வாரை திகைக்க வைக்கிறது. ''செந்நெலார் வயல்சூழ் திருக்கோட்டியூர்'' (பெரியாழ்வார் திருமொழி 1-1-10). ''மடஅன்னங்கள் நிரைகணம்பரந் தேறும் செங்கமலவயல் திருக்கோட்டியூர்'' (பெரியாழ்வார் திருமொழி 4-4-4). சீதநீர் புடைசூழ் செழுங்கழனியுடைத் திருக்கோட்டியூர்'' (பெரியாழ்வார் திருமொழி 4-4-11) என்பதாகப் பாடுகிறார்.

ஸ்ரீவைஷ்ணவர்கள் - பெருமையுடன் போற்றிடும் பெரியாழ்வார், திருமங்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ் வார், திருமழிசையாழ்வார் எல்லோரும் இப்புனித மண்ணில் வந்து நின்று மாதவனை மட்டுமல்ல இம்மண்ணின் வளத்தை யும் கண்டு பெருமையுடன் ''செந்நெலார் வயல் சூழ் திருக் கோட்டியூர்'' என்று புகழ்ந்துள்ளனர்.

ஆனால் 1975ஆம் ஆண்டு வயல்கள் எல்லாம் வெடிப்பேறிக் கிடந்தன. வயல்களில் எருக்கஞ் செடிகள் மண்டிக் கிடந்தன.

பெரியாழ்வார் காலத்திலும் பெரும்பஞ்சம் ஏற்பட்டி ருக்க வேண்டும். அதன் விளைவாக விலைவாசி ஏற்றத் தையும் அவர் கருத்தில் கொண்டிருக்க வேண்டும். விலைவாசி ஏற்றத்தின் விளைவாக பணம்வீக்கம் (Inflation) ஏற்படும். இதைத் தமது பெரியாழ்வார் திருமொழி 4-4-10ஆம் பாடலில் விவரிக்கிறார்.

*காசின்வாய்க்கரம்விற்கிலும் கரவாதுமாற்றிலிசோறிட்டு **
*தேசவார்த்தைபடைக்கும் வண்கையினார்கள்வாழ்திருக்கோட்டியூர்*
*கேசவா! புருடோத்தமா! கிளர்சோதியாய்! குறளா! என்று **
*பேசுவார் அடியார்கள் எந்தம்மைவிற்கவும் பெறுவார்களே.*

''இடது கையில் நிறைந்த பொற்காசுகளுக்கு வலது கை கொண்டு ஒரு பிடி நெல் விற்கும் கொடிய பஞ்ச காலத்திலும் தம்மிடத்துள்ள தான்யங்களை மறைத்து வைக்காது எந்தவிதப் பிரதிபிரயோஜனத்தையும் எதிர்பாராது பசித்து வந்தவர்களுக்குச் சோறு வழங்கிப் புகழ் நிறைந்த



வார்த்தைகளை தேடிக் கொள்ளும் உதார குணமுடையவர்கள் வாழ்கின்ற திருக்கோட்டியூரில் எழுந்தருளியுள்ள எம்பெரு மானை கேசவா! புருஷோத்தமா! பெருகி வரும் சோதியை உடையவனே! வாமனா! என்று அவனுடைய குணங்களை நினைத்துப் பேசுபவர்களுடைய அடியார்களுக்கு நாங்கள் அடிமையாயிருக்கக் கடவோம். அவர்கள் எங்களை விலைக்கு விற்கவும் உரியவர்கள்''.

இங்குப் பெருமாளுக்கு மாதவன் என்று திருநாமம். இது கேசவன் பிறந்த ஊர். செந்நெல்லூரான இவ்வூர் மாதவனுக்கு ஆடம்பர வயல் என்று ஒரு செழிப்பான வயல். எத்தனை பஞ்சம் வந்தாலும் இந்த வயல் மட்டும் விளையாமல் போகாதாம். இந்த மாதவன் வயலிலும் அந்த ஆண்டு விளைச்சல் இல்லை. அப்படிப்பட்டதோர் கொடிய பஞ்சம் நிலவியிருந்தது.

இதில் பெருங்கொடுமை 1975ஆம் ஆண்டு ஆங்குள்ள வயல்களில் வரப்பே கிடையாது எல்லாம் புல்லரிசிக்காக வெட்டி ஏகக் காடாக்கி விட்டார்கள். இனி அடுத்த ஆண்டு வயலுக்கு வரப்பு கட்ட வேண்டும். அது ஒரு பெரிய செலவு.

மலையும் மலையைச் சார்ந்த இப்பகுதியில் இந்த ஆண்டு இரண்டே இரண்டு மழைதான் பெய்தது. 160 அடிக்கு போரிங் போட்டும் தண்ணீர் இல்லை. இங்குள்ள இளைஞர் கள் பாம்பு வேட்டைக்குப் போய்விட்டார்கள்.பஞ்சத்தின் உச்ச கட்டத்தில் பசிக்கொடுமையினால் இங்கு வாழ்ந்து வந்த மனிதர்கள் எதைச் செய்யலாம். எதைச் செய்யக் கூடாது என்ற சிந்தனையை தாண்டி ஆபத்தான அச்சமூட்டும் காரியங்களில் ஈடுபட்டனர்.

பாம்பு என்றால் படையும் நடுங்கும். ஏதாவது சிக்கலான பிரச்சினையில் ஒருவன் அகப்பட்டுக் கொண்டால் ''பாம்பு புற்றுக்குள் கையை விட்டாச்சு'' என்று கிராமத்தார்கள் கூறுவார்கள். புற்றுக்குள் கிடக்கும் பாம்புகள் வெளியே வந்து கோபத்தில் சீறும். சீற்றத்தில் பலர் மயங்கியும் உள்ளனர்.

இந்தக் கொடிய நாகங்கள் சிவங்கைச் சீமையில் பசியின் கொடுமையில் மனிதனைக் கண்டு நடுக்கம் கொண்டன. பல இளைஞர்கள் குடும்பத்தை விட்டு கேரளாவிற்குச் சென்று விட்டார்கள்.

விஞ்சி இருந்த இளைஞர்கள் ஒரு புதுத் தொழிலைக் கற்றுக் கொண்டனர். அதாவது பாம்புப் புற்றுக்குள் கையை விட்டு அவற்றை வெளியிலே இழுத்து தோலை உரித்து பாம்புத்தோல் வியாபாரம் செய்வது தான். கேரளா, மைசூர் பகுதி மலைப்பிரதேசங்களில் பாம்புத்தோல் வியாபாரம் சிறப்பாக நடைபெற்று வந்தது. இளைஞர்கள் பாம்புத் தோலை அந்த இடங்களுக்கு அனுப்பி வியாபாரம் செய்து வந்தனர். இது பயங்கரமல்லவா? என்று வினவினால் ''விவசாயம் செய்து சாவதைக் காட்டிலும் இது ஒன்றும் பயங்கரம் இல்லை'' என்று சமாதானம் கூறி வந்தனர்.

**கொட்டிக் கிழங்கு**

பஞ்சம் அறிமுகம் செய்து வைத்த வகைகளில் கொட்டிக் கிழங்கும் ஒன்று. தமராத்திப் பகுதியில் இது ஆட்சி செய்து வந்தது. இது ஒரு வகையான கிழங்கு. பூமியில் 2 அல்லது 3அடி ஆழத்தில் கிடைக்கும். பூமியில் கடப்பாரை கொண்டு கெல்லி இதை எடுக்க வேண்டும். இதைத் தனியாக வேகவைக்க முடியாது. புளிச்சாறுடன் சேர்த்து வேக வைத்தால் அந்தப் புளிப்பில் இது ஒரு மாதிரியாக உண்ப தற்குத் தயாராகி விடும். பஞ்சத்தின்போது இதுதான் இப்பகுதி யில் உணவு.

**கண்மாய்கள் விளையாட்டு மைதானங்களாக மாறிய காட்சி.**

ஒரு ஆறு உற்பத்தியாகும் நிலைகளை நாம் பாடப் புத்தகங்களில் படித்திருக்கிறோம். மானாவாரிக்குளம் மழை காலத்தில் மட்டுமே நிரம்பும். ஆனால் வடக்குத் தமராக்கியில் ஒரு குளத்திலிருந்து ஆறு ஒன்று உற்பத்தியாகிறது. இது பெருகி இருக்கும்போது கடல் போலக் காணப்படும். இந்த குளத்திலிருந்து உப்பாறு என்று ஒரு ஆறு உற்பத்தியாகிறது.



இதன் மறுகரையில் மதுரை மாவட்டம் தெரியும். அங்கு வைகை பாய்கிறது.

இந்தக் குளம் இதில் உற்பத்தியாகும் ஆறு இவற்றின் பயனாக ஏரிசைக்குளம் 400 ஏக்கர், முப்பைக் கண்மாய் 370 ஏக்கர், நற்குளம் 400 ஏக்கர், முடிகண்டம் 600 ஏக்கர், கரம்பாவூர் 153 ஏக்கர், கலாகுளம் 100 ஏக்கர், உலைகப்பட்டி 500 ஏக்கர், படமாத்தூர் 700 ஏக்கர், பில்ரார் கோவனூர் தலா 800 ஏக்கர், தனையூர் 400 ஏக்கர், அலுப்பிள்ளைதாங்கி 200 ஏக்கர். இப்படியாகப் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நீர்ப்பாசன வசதிகள் கொண்ட இந்தக் கண்மாய்கள் விளையாட்டு மைதானங்களாக மாற்றம் பெற்றன.

**''காராளன் கேணியும்'' வற்றி விட்டது.**

திருப்பத்தூர் பகுதியில் நஞ்சைகளில் ஏராளமான நெல் விளையும். மருது பாண்டியர்கள் தூக்கிலிடப்பட்ட பின்னர் அம்மாவீரர்கள் உடல்கள் புதைக்கப்பட்ட வீரமும் விளைந்த நிலம் இங்குள்ள நிலம். மருது சகோதரர்கள் விவசாயப் பெருங்குடி மக்களுக்காக ஏராளமான கேணிகளை வெட்டி வைத்துள்ளனர். இவற்றுக்கு ''காராளன் கேணி'' என்று பெயர். காராளன் என்றால் உழவன் என்று பொருள். அந்தக் கேணியும் வறண்டு விட்டது.

**கல்லல் பகுதியில் கலக்கம்**

சேதம் கணக்கிட முடியாது. ஒரு கிராமம் நொறுங்கு வது நாட்டிற்கு எவ்வளவு பெரிய நஷ்டம்? சுதந்திரத்திற் காகப் போராடியாச்சு. இப்போ சோத்துக்கும், குடி தண்ணீருக்குமாகப் போராட்டம். போராட்டங்களுக்கு ஒரு பஞ்சம் வராதா?

தற்போது உணவுப் பண்டங்களுக்கு எந்தத் தட்டுப் பாடும் இல்லை. உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெற்றுள் ளோம். ஆதனால் பஞ்சத்தின் கொடுமையை ஏட்டளவிலேயே தற்போதைய தலைமுறையினர் அறிவர். ஆனால் பஞ்சத்தால் வாடிய மக்கள் உணவின் அருமையை அறிவர். தற்போது

பணப்புழக்கம் அதிக அளவில் உள்ளது. அதற்கேற்ப கையூட்டு பெறுதலும் பெருமளவில் காணப்படுகிறது. ஊழல்! ஊழல்!! ஊழல்!!! எங்கும் எதிலும் ஊழல். பிறப்பு முதல் இறப்பு வரை கையூட்டு கொடுத்தால் தான் காரியம் நடைபெறும். பிறப்புச் சான்றிதழ் வாங்குவதற்கும் லஞ்சம் கொடுக்க வேண்டும். இறப்புச் சான்றிதழ் வாங்குவதற்கும் லஞ்சம் கொடுக்க வேண்டும். உயர் பதவியில் இருப்பவர்கள் லஞ்சம் வாங்கினால் அதற்குப்பெயர் அன்பளிப்பு. இந்த நாட்டில் உயர் பதவி வகிக்கும் பிரதம மந்திரி முதல் கடைநிலை ஊழியர் வரை அவரவர் தகுதிக்கேற்ப லஞ்சத்தைப் பெற்று வருகின்றனர். ஆகவே அரிசிப் பஞ்சமோ, மற்ற உணவுப் பண்டங்களுக்கு பஞ்சமோ ஏற்பட்டால் சேர்த்து வைத்திருக்கும் லஞ்சப் பணத்தில் அவற்றை இறக்குமதி செய்து விடலாம். மழை பொழிந்தால் என்ன? பொழியாவிட்டால் என்ன? வறட்சியிலும் நிவாரணம். அதிக மழை பொழிந்து பயிர்கள் நாசமடைந் தாலும் நிவாரணம். இந்த நிவாரணத்தில் ஆங்காங்கே அதிகாரிகளும், வட்டங்களும், மாவட்டங்களும் கூறுபோட்டு கொள்ளையடிக்கின்றனர். (வாழ்க ஜனநாயகம்!).

**ஸ்ரீ.உ.வே. வேளுக்குடி வரதாசார்யர் ஸ்வாமியின் சொற்பொழிவுகளைக் கேட்ட அனுபவம்.**

ஸ்ரீ.உ.வே. சதாபிஷேகம் ஸ்வாமியின் பெரும் முயற்சி யால் 1974ஆம் ஆண்டு தொடங்கி ஐந்து ஆண்டுகளுக்கு ஸ்ரீரங்கம் செல்வமணவாளமாமுனிகள் ஸந்நிதியில் ஸ்ரீ.உ. வே. வரதாசார்யர் ஸ்வாமியின் சொற்பொழிவுகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டன. ஒவ்வொரு ஆண்டும் ஜூன் மாதத்தில் அதாவது கோடை விடுமுறையின்போது முப்பது நாட்களுக்கு விடுப்பு எடுத்துக் கொண்டு அதில் பதினைந்து நாட்கள் திருவரங்கப் பெருநகரில் தங்கியிருந்து ஒவ்வொரு நாளும் காலை இரண்டு மணி நேரம் மாலை இரண்டு மணி நேரம் ஸ்ரீ.உ.வே. வேளுக்குடி வரதாசார்யர் ஸ்வாமி ஸ்ரீமணவாள மாமுனிகள் ஸந்நிதியில் நடைபெறும் சொற்பொழிவைக் கேட்டுப் பயன்பெற்றேன். டேப்ரிக்கார்டர் அறிமுகம் செய்யப்பட்ட காலகட்டம் அது. 1974ஆம் ஆண்டு ஸ்ரீ.உ.வே.



வேளுக்குடி ஸ்வாமி ‘பகவத்விஷயம்’ முப்பது நாட்களுக்கு காலக்ஷேபம் ஸாதித்து வந்தார்.

திருவரங்கம் மற்றும் அதன் சுற்றுப் புறங்களிலிருந்து பலர் வருகை தந்து சொற்பொழிவுகளைக் கேட்டு மகிழ்ந்த தோடு மட்டுமல்லாமல் பொருளுதவியும் செய்தனர். அவ்வாறு கேட்டு மகிழ்ந்தவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் ஸ்ரீ.உ.வே. புத்தூர் கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார், அவர் திருத்தம்பியார் ஸ்ரீ.உ.வே. ராமய்யங்கார், ஸ்ரீ.உ.வே. பூவராகவாசார்யர், அப்போதைய பலஹாரி ஜீயர் மடத்து ஜீயர் ஸ்வாமி, திருவெள்ளறை கீழைத்திருமாளிகை ஸ்வாமி, ஆத்தான் விஜயராகவன், பண்டாரி சௌரிராஜன், ஸ்ரீ.உ.வே. சதாபிஷேகம் கோவிந்த நரஸிம்ஹாசார்யர் ஸ்வாமி ஆகியோர். இந்த உபந்யாஸங்களை டேப்ரிக்கார்டரில் பதிவு செய்து கொண்டதால், ஈரோட்டிலும், மற்றைய ஊர்களிலும் நான் பணிபுரிந்து வந்தபோது தினந்தோறும் அவற்றை கேட்டுக் குறிப்புகளை எடுத்துக் கொண்டேன். பொருள் புலப்படாத இடங்களில் அடியேனுடைய ஞானாசார்யனான ஸ்ரீ.உ.வே. சதாபிஷேகம் ஸ்வாமியிடம் தெளிவு பெற்று வந்தேன். ஸம்ப்ரதாய ஞானத்தைப் பெருக்கிக் கொள்வதற்கு இந்த முறையைக் கையாண்டு வந்தேன். திருவரங்கம் செல்வ மணவாளமாமுனிகள் ஸந்நிதி ஆதீனகர்த்தர்களான கோமடம் ஸ்ரீ.உ.வே. ஸம்பத்குமாராசார்யர், ஸ்ரீ.உ.வே. அழகிய மண வாளன், ஸ்ரீ.உ.வே. சடகோபாசார்யர், ஸ்ரீ.உ.வே. ராமானுஜம், ஸ்ரீமதி பட்டம்மாள் அம்மங்கார் ஆகியோர் தங்குவதற்கு இடமும், ஆகார வசதிகளைச் செய்து கொடுத்தும் பேருதவி புரிந்தனர். இவ்வாறு ஆண்டுதோறும் ஜூன் மாதத்தில் பதினைந்து நாட்களுக்கு ஸ்ரீ.உ.வே. வேளுக்குடி ஸ்வாமியின் உபந்யாஸங்களுக்கு 1979ஆம் ஆண்டு வரை ஏற்பாடு செய்யப்பட்டது. (தற்போது அந்த உபந்யாஸ கேசட்டுகள் அடியேனிடம் இல்லை. பல ஊர்களில் வாசம் செய்திட்ட போது கேட்பதற்காக வாங்கிச் சென்ற பலர் அவற்றை திருப்பித்தரவே இல்லை. சில ஒலி நாடாக்கள் பாழ்பட்டன. மொத்தத்தில் ஓர் நல்ல ஒலி நாடாவின் இழப்பை நான் எதிர்கொள்ள நேரிட்டது.)

என்னுடைய காரில் ஸ்ரீரங்கம் காலக்ஷேபம் முடிந்த பிறகு பல திவ்யதேசங்களுக்கு குடும்பத்தினருடன் திவ்ய தேச யாத்திரையாகச் சென்று வந்தேன். மலையாள திவ்ய தேசங்களுக்கு இரண்டு முறை என்னுடைய காரை நானே ஓட்டிச் சென்றுள்ளேன். (இருபத்தைந்து ஆண்டுகள் Self Driving செய்து வந்த நான் இப்போது கார் ஓட்டுவதற்கு அஞ்சுகிறேன். யார் மீதாவது மோதி விடுவோமோ என்ற அச்சத்தினால் நான் கார் ஓட்டுவது இல்லை. ஸ்கூட்டரிலோ அல்லது சைக்கிளிலோ செல்வதில்லை. இதனால் என்னுடைய பேரக்குழந்தைகள் தாத்தாவுக்கு சைக்கிள்கூட ஓட்டத் தெரியாது என்று கூறி வருகின்றனர். அந்த கூற்றைக் பொய்யாக்குவதற்குக்கூட என்னிடம் தைரியம் இல்லை. அதேபோல தாத்தா ஸ்கூலுக்குப் போனதில்லை என்றும் கூறி வருகின்றனர். இதைப்பொய்பிப்பதற்காவது ஏதாவது ஒரு பகுதி நேரக் கல்லூரியில் சேர்ந்து பாடம் படிக்கலாமா என்ற எண்ணம் கூடத் தோன்றுகிறது. ஆனால் அதை நடைமுறைப் படுத்த முடியாது.)

**குடும்பச் சூழலும் எதிர்கொண்ட துன்பங்களும்.**

என்னுடைய தம்பியான ராமானுஜம் S.S.L.C.யில் தேர்ச்சிபெற்ற பிறகு ஈரோட்டில் அமைந்துள்ள கலைக் கல்லூரியில் புகுமுக வகுப்பில் (Pre - University) நன்கொடை ஏதும் தாராமல் சேர்த்து விட்டேன். சிறுவயது முதலே பெற்றோர்களின் அறிவுரையையோ அல்லது வழி காட்டுதலையோ அவன் கேட்பதில்லை. முதலில் ஈரோட்டில் அவன் தங்கிப் படிப்பதை நான் விரும்பவில்லை. என் தாயாரின் வற்புறுத்தலால், ஈரோட்டில் தங்கி படிப்பைத் தொடர அனுமதித்தேன். மூன்று மாதங்களுக்குப் பிறகு யாருடைய சிபாரிசு மூலம் ராமானுஜதத்தை கல்லூரியில் சேர்த்தேனோ, அவர் என்னிடம் வந்து ஐயா உங்கள் தம்பி கல்லூரிக்கு ஒழுங்காக வருவதில்லையென்று முதல்வர் அவரிடம் கூறியதாகத் தெரிவித்தார்.

(தொடரும்)



# கண்டோம் கண்டோம் கண்ணுக்கினியன கண்டோம்

தற்போதைய சூழலில் விவாஹ சடங்குகள் முறையாக மேற்கொள்ளப்படுவதில்லை. பெரும்பாலான மந்திரங்களை விவாஹம் செய்து வைக்கும் ப்ரஹஸ்பதியே சொல்லிட மணமகன் மௌனம் காத்திடுவார். அவ்வப்போது ப்ரஹஸ் பதி ''மம'' என்று சொல்லுங்கள் என்பார். மணமகனும் ஏன் அவ்வாறு இந்தச் சொல்லை மட்டும் நான் சொல்ல வேண்டும். அதற்குப் பொருள் என்ன? என்று அறிந்து கொள்ளாமலேயே இயந்திரம்போல உச்சரித்திடுவார். ஒரு விவாஹத்திற்கு முன்பு என்னென்ன வகை உணவுப் பண்டங்கள் பரிமாறலாம்? யார்யாரை நேரில் சென்று அழைக் கலாம்? மண்டபத்தில் வசதிகள் உள்ளனவா? முதலிரவு எப்போது நடைபெறும்? என்ன நகை வாங்கலாம்? என்ன துணிமணிகள் வாங்கலாம்? எவ்விதமான அழைப்பிதழை அச்சிடலாம்? யாரை வீடியோ எடுக்க அமர்த்திடலாம்? போன்றவற்றில் நாம் செலவிடும் நேரத்தில் ஒரு சதவிகித நேரத்தைக்கூட விவாஹமந்திரங்களின் பொருள் என்ன? எந்தச்செயலுக்குப்பின் எந்தச் செயல் மேற்கொள்ளப்பட வேண்டும்? செய்யும் செயல்களுக்கு கருத்து என்ன? ஏன் அவற்றைச் செய்ய வேண்டும்? என்றெல்லாம் சிந்திப்ப தில்லை.

மந்திரபலமும் பெரியோர்கள், மற்றும் வேதம் வல்ல அந்தணர்களுடைய ஆசியுமே அந்த விவாஹத்திற்குரிய பல னைத் தந்திடும். அதேபோல தானதர்மங்கள் அதிக அளவில் கொடுக்கப்பட வேண்டும். குறிப்பாக நாந்தி எனப்படும் பித்ருக்களின் ஆராதனம் மேற்கொள்ளப்பட வேண்டும். பலதானம் செய்யப்பட வேண்டும். *(பெரும்பாலான திரு மணங்களில் நாந்திக்கு 50ரூபாய் பணத்தைக் கொடுத்து முடித்து*

*விடுவார்கள். அவ்வாறு செய்வதும் பிரஹஸ்பதி மனது வைத்தால் தான். ப்ரஹஸ்பதி தரும் குறிப்பேட்டில் பலதானம் 1000ரூபாய் என்று காணப்படும். ஆனால் அந்தப் பணத்தை பலதானம் செய்ய மாட்டார். ஏதோ ஓரிருவர்க்கு 5ரூபாய் பலதானம் என்று சொல்லிக் கொடுத்து விடுவார். மீதமுள்ள பணத்தை அவரே எடுத்துக் கொண்டு விடுவார். கர்த்தாவிற்கு பலதானத்தின் பெருமையோ, நாந்தியின் முக்கியத்துவமோ அறவே தெரியாது. எல்லாம் ப்ரஹஸ்பதி ஸ்வாமி பார்த்துக் கொள்வார் என்று மணமகனின் தந்தை கூறிடுவார். ஆனால் ப்ரஹஸ்பதி ஸ்வாமியோ அனைத்தையும் தம்மிடமே வைத்துக் கொள்வார். சில இடங்களில் அவரே ப்ரஹ்மா, அவரே பிரஹஸ்பதி.)* அநுஜ்ஞை எனப்படும் வேதவித்துக்களின் அனுமதி வேண்டப்படும்போது நிறைந்த அளவில் அது அளிக்கப்பட வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக அவருடைய இல்லத்தில் சாளக்ராம வடிவில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமானை, கல்யாண தினத்தன்றும் அதற்கு முதல் நாளும் அடுத்த நாளும் பட்டினி போடக்கூடாது.

ஆனால் இன்று விவாஹசடங்குகள் போலித்தனம் கொண்டவையாய் விளங்குகின்றன. செய்பவர்க்கும் ஈடுபாடு இல்லை. செய்து வைப்பவர்க்கும் ஈடுபாடு இல்லை. விவாஹ மந்திரங்களின் பயன் முழுமையாக வந்தடையாததால் இல்லற வாழ்க்கை சிறப்பாக அமைவதில்லை. மனஅமைதி காணப்படுவதில்லை. விவாஹமான சில மாதங்களிலேயே மணமுறிவு ஏற்படுகிறது. இதற்கெல்லாம் அடிப்படைக் காரணம் மந்திரங்களிலும் அவற்றின் பொருளிலும் ஈடுபாடு இன்மையே.

இத்தகையதொரு சூழலில் ''கண்டோம் கண்டோம் கண்ணுக்கினியன கண்டோம்'' என்று ஆழ்வார் கொண்டாடியதுபோல 23.11.2012 வெள்ளிக்கிழமையன்று நடைபெற்ற சிரஞ்சீவி.K.J.சுகந்த்குமார் சௌபாக்யவதி. சங்கீதா திருமணத்திற்கு முன்னோடியாக நடைபெற்ற நிகழ்ச்சிகள் அமைந்திருந்தன. பணம் குவிந்திருப்பதால் மட்டும் ஒருவரைச் செல்வந்தர் என்று அழைக்க முடியாது. சொட்டை நம்பிகள் அருளிச்செய்த திருவாய்மொழித் தனியனில் ''மனத்தாலும் வாயாலும் வண்குருகூர்பேணும் இனத்தாரையல்லாது இறைஞ்சேன்



தனத்தாலும் ஏதும்குறைவிலேன் எந்தை சடகோபன் பாதங்கள் யாமுடைய பற்று'' என்று அருளிச் செய்துள்ளார். செல்வத்தின் பயனாவது திருமால் அடியார்களைப் பூசிப்பதாகும். அவ்வாறு பூசிப்பதே பெருஞ்செல்வம் எனப்படும்.

இட்டுப் பிறந்தவர்களான ஸ்ரீவைஷ்ணவர்கள் திருமணவைபவங்களில் அருளிச்செயலுக்கு அத்துணை ஏற்றம் கொடுப்பதில்லை. விவாஹம் முடிந்தபிறகு ''வாரணமாயிரம் ஸேவித்தல்'' என்றதொரு நிகழ்ச்சியில்தான் அருளிச்செயலை நினைவு கூர்கிறோம். ஆனால் கோயம்புத்தூர் நகரவாசியும் தொழில் அதிபருமான கைங்கர்யஸ்ரீமான் K.S. ஜயராமன் திருமதி. பிருந்தா தம்பதியினர் தம்முடைய புத்திரனான கைங்கர்ய ஸ்ரீமான் K.J.சுகந்த்குமார் சௌபாக்யவதி. சங்கீதா திருமணத்தின்போது மூன்று நாட்களிலும் ஸ்ரீவைஷ்ணவ ஆராதனத்தையே பிரதானமாக மேற்கொண்டனர். பிறப்பால் ஸ்மார்த்தர்களாக இருக்கும் அவர்கள் ஸ்ரீவைஷ்ணவத்தின் பாலும், ஸ்ரீவைஷ்ணவ அடியார்கள் திறத்திலும் அளவு கடந்த மரியாதை கொண்டவர்களாக விளங்கிவருகின்றனர். திருநின்றவூர் மற்றும் பல திவ்ய தேசங்களில் திருப்பணி களுக்கு நிதியுதவி புரிந்துள்ளனர். அவர்கள் இல்லத்தில் தினந்தோறும் திருப்பல்லாண்டு, திருப்பாவை, நாச்சியார்திருமொழி ஸேவித்தப்பிறகு ஆராதனப்பெருமாளுக்கு ஸமர்ப்பிக்கப்பட்ட ப்ரஸாதத்தையே காலை உணவாகக் கொள்கின்றனர்.

ஸ்ரீவைஷ்ணவத்தின்பாலும், திருமால் அடியார்கள் பாலும் கொண்ட அளவுகடந்த ஆர்த்தியின் காரணமாக 21.11.2012 புதன்கிழமையன்று, பல திவ்யதேசங்களிலிருந்து 143 ஸ்ரீவைஷ்ணவர்களை எழுந்தருளப்பண்ணிவித்து, திருக் கோட்டியூரிலே கைங்கர்யஸ்ரீமான் ஸ்ரீ.உ.வே. மாதவன் ஸ்வாமி திருமாளிகையில் நித்ய ஆராதனத்தில் எழுந்தருளியிருக்கும் உபயநாச்சிமாரோடு கூடிய சௌம்யநாராயணப் பெருமாளுக்குத் திருக்கல்யாணம் செய்து வைத்தனர். திருக்கோட்டியூர் சௌம்யநாராயணப் பெருமாள் நித்யதிருவாராதனத்தில் ஈடுபட்டிருக்கும் வைகானஸ நம்பிமார்கள் இந்தத் திருக்கல்யாண உத்ஸவத்தை நடத்தி வைத்தனர். வானமாமலை மடம் ஆறாவது பட்டத்தில்

எழுந்தருளியிருந்த ஜீயர் ஸ்வாமி பூர்வாச்ரமத்தில் ஆராதித்து வந்த பெருமாள் இவர். க்ருஹ ஆராதனத்திற்கு ஏற்ப வடிவமைக்கப்பட்ட பெருமாள். அவருடைய திருவடிக்கீழ் நம்மாழ்வார், உடையவர், ஸ்ரீமணவாளமாமுனிகள் ஆகியோர் எழுந்தருளியுள்ளனர். லக்ஷ்மிவராஹப்பெருமாளும் அவர்களு டன் ஸேவை ஸாதிக்கிறார். *(தற்போது திவ்யதேச திருக்கோயில் களில் எழுந்தருளப்பண்ணப்பட்டிருக்கும் வடிவமைப்பை ஒத்த மாற்று விக்ரஹகங்களை (பொம்மைகளை) பல்வேறு இடங்களுக்கு எடுத்துச் சென்று திருக்கல்யாணம் நடத்துகிறோம் என்ற பெயரில் ஆகமவிரோதச் செயல்களில் பலர் ஈடுபட்டு வருகின்றனர். அத்தகைய பாபச்செயல் களைச் செய்பவர்களில் தலைமைப் பீடத்தில் இருப்பவர்கள் திருமலை திருப்பதி தேவஸ்தானத்தார். இவர்கள் மேற்கொண்டுள்ள செயல் பாட்டை முன்னுதாரணமாகக் கொண்டு ஆண்டாள்அரங்கமன்னார் விக்ரஹகங்கள், நம்பெருமாள்ஸ்ரீரங்கநாச்சியார் விக்ரஹங்கள் பல்வேறு இடங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டு பொம்மைக் கல்யாணம் பண்ணுவிக்கிறார்கள். இதை இன்றுவரை யாரும் கண்டிக்க முன்வரவில்லை, என்பதோடு மட்டுமல்லாமல்* **Running Commentary** *கொடுக்கும் வித்வான்களும் நம்மிடையே பீடு நடையிட்டுக் கொண்டு வலம் வருகிறார்கள். திருமலையப்பன் பெயரில் மக்களு டைய நம்பிக்கை காசாக்கப்படுகிறது. இதைவைத்து பிழைப்பை நடத்தும் ஸ்ரீவைஷ்ணவர்கள் நரகத்தைத்தான் சென்றடைவர். தர்ம தேவதை என்றும் பணத்துக்கும் புகழுக்கும் மயங்காத தேவதையாகும்.)*

21.11.2012 அன்று திருப்பல்லாண்டு, திருப்பாவை, நாச்சியார் திருமொழி ஆகியவை கோஷ்டியாரால் ஸேவிக்கப் பட்டது. திருக்கல்யாண உத்ஸவத்தின்போது 'நாச்சியார் திருமொழி' என்ற தலைப்பில் ஸ்ரீ.உ.வே. திருக்கோட்டியூர் மாதவன் ஸ்வாமி உபந்யஸித்தார். 16 திவ்யதேசங்களிலிருந்து மாலை ப்ரஸாதங்கள் கைங்கர்யஸ்ரீமான் ஜயராமன் தம்பதி யருக்கு அணிவிக்கப்பட்டன. மேலும் அன்றைய தினம் 800 வேத விற்பன்னர்கள் வருகை தந்து ரிக், சாம, யஜுர், மற்றும் அதர்வண வேத பாராயணம் செய்தனர். கடஸ்தாபனம் செய் யப்பட்டு, ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ரநாமபாராயணம் மேற்கொள் ளப்பட்டது. 108 க்ருஷ்ணநாமாவளி அர்ச்சனையின்போது 108 வேத விற்பன்னர்களுக்கு குடை, சால்வை, கமண்டலம்,

விசிறி, போர்வை, வஸ்திரம் ஆகியவற்றுடன் ரூ.2,500/- ஸம்பாவனை அளிக்கப்பட்டது. இதைத் தவிர அருளிச்செயல் கைங்கர்யத்தில் ஈடுபட்டிருந்த 143 ஸ்ரீவைஷ்ணவர்களுக்கும் மேற்குறிப்பிடப்பட்ட பொருள்களும், ஸம்பாவனைகளும் அளிக்கப்பட்டன. 80 வயதிற்கு மேற்பட்ட தம்பதிகள் ஐவர்க்குத் தம்பதிபூஜை நடைபெற்றது. ஒவ்வொரு தம்பதி யர்க்கும் வெள்ளித்தட்டு, வெள்ளி குங்குமச்சிமிழ், பட்டு வேஷ்டி உத்தரீயம், புடவை ஆகியன ஸம்பாவனையுடன் ஸமர்ப்பிக்கப் பட்டன. 22.11.2012 அன்று நூற்றுக்கும் மேற்பட்ட வேதவிற் பன்னர்கள் கூடி 'அஷ்டவிரதம்' என்னும் உயரிய வைதிகச் சடங்கினை நடத்தி வைத்தனர். 23.11.2012 அன்று முறைப் படி மந்திரங்கள் ஓதப்பட்டு வாரணமாயிரம் ஸேவித்து விவாஹம் பூர்த்தியாயிற்று. 56 திவ்ய தேசங்களிலிருந்து பரியட்டம் மற்றும் மாலை ப்ரஸாதங்கள் எழுந்தருளப் பண்ணப்பட்டு, அந்தந்த திவ்யதேசங்களுக்குரிய பாசுரங்கள் ஸேவிக்கப்பட்டு திருமணத் தம்பதியினர் ஸந்மானிக்கப் பட்டனர்.

விவாஹ சுபநிகழ்ச்சியின் நினைவாக திருவரங்கத்தில் அமைந்துள்ள ஸ்ரீ.உ.வே. பார்த்தசாரதி ஐயங்காரின் வேதபாட சாலைக்கு வேதஸம்ரக்ஷணத்தின் பொருட்டு ரூபாய். 25,000/- அன்பளிப்பாக அளிக்கப்பட்டது. அதே போன்று ரூபாய். 25,000/- க்ரந்த ஸம்ரக்ஷணத்தின் பொருட்டு ஸ்ரீவைஷ்ணஸ்ரீ நிறுவனத்திற்கும் உதவித் தொகையாக அளிக்கப்பட்டது. மேலும் ஒவ்வொரு ஆண்டும் மேற்குறிப்பிடப்பட்ட வேதபாடசாலைக்கு உதவிநிதியாக ஒருமாதச் செலவை தாம் ஏற்றுக்கொள்வதாக கைங்கர்ய ஸ்ரீமான் ஜயராமன் அவர்கள் வாக்களித்துள்ளார்.

✱✱✱

**நூல் மதிப்பீடு.**

**1. 'பழுப்பு' வெள்ளை சாத்திய ஸ்ரீமத் ராமாநுஜ மாமுனி - ஓர் அறிமுகம் மற்றும் ஒரு சிறிய ஆராய்ச்சி.**

எழுதி வெளியிட்டவர்: ஸ்ரீ.உ.வே. V. நரசிம்மன், பரம்பரை அறங்காவலர், (வெள்ளை சாத்திய ஸ்ரீராமாநுஜன் சென்ற பாதையில் உள்ள), அ/மி. கரிவரதராஜப்பெருமாள்

கோயில், கணக்கம்பாளையம், (கள்ளிப்பட்டி அருகில்) கோபி-638 505. கைபேசி: 94449 11440. 26 பக்கங்கள். அன்பளிப்பு ரூ. 15/-

'க்ருமிகண்டசோழன்' என்று குருபரம்பரை நூல்களில் குறிப்பிடப்பட்டிருக்கும் ஒரு சோழமன்னனுடைய அடாத செயலால் இராமானுசர் திருவரங்கத்தைத் துறந்து மேற்கு திசை நோக்கிப் புறப்பட்டார் என்றும், அந்தப் பயணத்தின் முடிவில் ஸாளக்ராமம் என்னும் ஊரில் தங்கியிருந்தார் என்றும், குருபரம்பரை நூல்கள்வழி அறியப்படுகிறது. குருபரம்பரை நூல்களில் காணப்படும் குறிப்புகளின் அடிப்படையில் இராமானுசர் எந்தவழியாக கொள்ளேகாலத்தைச் சென்ற டைந்தார் என்பதைப்பற்றிய ஓர் ஆராய்ச்சிக் கட்டுரையே இந்த நூலாகும். கேள்வி பதில் முறையில் இந்த நூல் எழுதப் பட்டுள்ளது. தாத்தா ஒருவர் கேள்வி கேட்க பேரக்குழந்தைகள் பதில் சொல்லுவதாகவும் இந்த நூல் அமைந்துள்ளது. திருவரங்கத்திலிருந்து புறப்பட்ட இராமானுசர் காவி உடைகளைக் களைந்து கூரத்தாழ்வான் அணிந்திருந்த பழுப்புநிறங்கூடிய வெள்ளை வேட்டியை எத்தனை நாள் அணிந்திருந்தார் என்பதை ஆய்வு நோக்கில் விவரித்து, கொள்ளேகாலம் என்னும் ஊரைச் சென்றடைந்ததை இந்நூ லாசிரியர் விவரித்துள்ளார். அவ்வாறு செல்லும்போது கணக்கம்பாளையம் வழியாக B.R.Hills எனப்படும் பாலை மலையைக் கடந்து கொள்ளேகாலம் சென்றிருக்க வேண்டும் என்றும் நிரூபித்துள்ளார். அனைவரும் படித்து இன்புற வேண்டிய ஓர் சிறுநூலாகும் இது.

**ஆசிரியர் குறிப்பு:** 2012ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் ஸாளக்ராமம் என்னும் திருத்தலத்திற்கு பாஞ்சஜன்யம் ஆசிரியர் மங்களாசாஸன நிமித்தமாகச் சென்று வந்தார். இன்றும் சுமார் மூவாயிரம் ஜைனர்கள் அந்த ஊரில் காணப் படுகிறார்கள். மூன்று பழமையான ஜைனக்கோயில்கள் அமைந்துள்ளன. வடுக நம்பியின் அவதாரஸ்தலம் ஸாளக்ராமமாகும். இராமானுசர் அங்குள்ள ஸ்ரீலக்ஷ்மிநரஸிம்ஹர் ஸந்நிதியில் எழுந்தருளி யிருந்தார் என்றும், அவர் வருகையை விரும்பாத ஜைனர்களையும்



(சைவர்கள் என்று ராமானுஜார்ய திவ்ய சரிதையில் குறிப் பிடப்பட்டுள்ளது.) மற்றையோரையும் ஸ்ரீ முதலியாண்டா னுடைய ஸ்ரீபாததீர்த்த மஹிமையினால் ஸாத்விகர்களாக ஆகச்செய்தார் என்றும், அவர்கள் உள்ளந் திருந்தி எம்பெருமானார் திருவடிகளை ஆச்ரயித்தனர் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. இன்றும் ஸ்ரீலக்ஷ்மிநரஸிம்ஹப் பெருமாள் ஸந்நிதிக்கு சிறிது தூரத்தில் ஸ்ரீபாததீர்த்தக் குளமும், எம்பெருமானார் திருவடிகளும் அமைந்துள்ள தனித்திருக்கோயில் காணப்படுகிறது. அந்தத் திருக்கோயில் வளாகத்தினுள்ளே வடுகநம்பிக்கும், ஸ்ரீமுதலி யாண்டானுக்கும் தனித்தனி ஸந்நிதிகள் அமைந்துள்ளன. அவற்றில் ஸாளக்ராமமூல விக்ரஹங்கள் எழுந்தருளப்பண்ணப் பட்டுள்ளன. திருக்கோயில் திருப்பணிகள் நடைபெற்று வருகின்றன. 2013 பிப்ரவரி மாதம் ஸம்ப்ரோக்ஷணம் நடைபெற உள்ளதாக அர்ச்சகர் தெரிவித்தார். இந்தத் திருக்கோயில்கள் கர்நாடகா தொல்பொருள் ஆய்வுத்துறையின் கட்டுப்பாட்டின்கீழ் உள்ளன.

கொள்ளேகாலத்திலிருந்து முப்பது கிலோமீட்டர் தொலைவிலுள்ள தலக்காடு என்னும் ஊர் காவிரியின் கரையில் அமைந்துள்ளது. ஆனால் நீண்டதூரம் கொள்ளே காலத்திலிருந்து காவிரியின் கரையோரம் பயணித்து (சுமார் 60 கி.மீ. தூரம்) ஸாளக்ராமத்தை இராமானுசர் சென்றடைவானேன் என்று ஆராய்ந்தபோது சில உண்மைகள் புலப்பட்டன. இராமானுசர் மேற்குதிசை நோக்கிச் சென்றபோது, தலக்காடு சோழர்கள் ஆட்சிப் பகுதியில் அமைந்திருந்தது. ஆகவே இராமானுசர் சோழர்களின் ஆட்சிப் பகுதிக்குட்பட்ட இடத்தில் தங்க விரும்பம் கொள்ள வில்லைபோலும். அதனால் தான் மிக அடர்ந்த காடுகளின் ஊடே சுமார் 60 கி.மீ. பயணித்து ஸாளக்ராமத்தைச் சென்றடைந்திருக்கக் கூடும். தற்போது நாம் இராமானுசர் சென்ற பாதையில் கொள்ளே காலத்திலிருந்து ஸாளக்ராமத்தைச் சென்றடைய முடியாது. ஆனால் மைசூர் சென்று, அங்கிருந்து பேருந்தில் ஹாஸன் செல்லும் சாலையில் 60 கி.மீ. தூரத்தில் அமைந்துள்ள 'கொச அக்ரஹாரம்' என்னும் ஊரில் இறங்கி, அங்கிருந்து 6 கி.மீ. தூரத்தைக் கடந்தால் ஸாளக்ராமத்தைச் சென்றடையலாம். ஸாளக்ராமத்திலிருந்து தொண்டனூருக்கு

தற்போது நேர் பாதை கிடையாது. ஆனால் இராமானுசர் காலத்தில் சுமார் 30 கி.மீ. தூரத்திலுள்ள தொண்டனூருக்கு சாலை வசதிகள் அமைந்திருக்க வேண்டும். ஏனெனில் தொண்டனூர் ஹொய்சாளர்களின் தலைநகரமாய் விளங்கியது குறிப்பிடத் தக்கது. ஆகவே தலைநகரத்திலிருந்து ஜைனர்கள் மிகுதியாக வசித்துவந்த (இன்று 3,000 ஜைனர்கள் ஸாளக்ராமத்தில் காணப்பட்டால், இராமானுசர் காலத்தில் குறைந்தபட்சம் 10,000 ஜைனர்களாவது இருந்திருக்க வேண்டும்.

மேலும் ஹொய் சாளர்கள் ஜைன மதத்தை தழுவி யவர்கள்.) பிட்டிதேவன் என்ற பெயர்கொண்ட விஷ்ணு வர்த்தனன் இராமானுசருடைய அருட்பார்வையால் ஸ்ரீவைஷ்ண வத்தைத் தழுவினான். மேலும் கி.பி. 1123ஆம் ஆண்டு தலக்காட்டை சோழர்களிடமிருந்து விஷ்ணு வர்த்தனனை மீட்டான் என்பது வரலாறு. தொண்டனூரைச் சென்றடைந்த இராமானுசர் அங்கிருந்து 6 கி.மீ. தூரத்தில் உள்ள (மலைப் பாதைவழியாக) திருநாராயணபுரத்தைச் சென்றடைந் திருக்க வேண்டும்.

ஆகவே திருவரங்கத்திலிருந்து மேற்கு திசைநோக்கிப் புறப்பட்ட இராமானுசர் காவிரிநதிக்கரையை ஒட்டியே சென்றுள்ளார் என்பது இதன்வழி தேறுகிறது. திருவரங்கத்தி லிருந்து ஈரோடு, ஈரோட்டிலிருந்து பவானி, பவானியிலி ருந்து கணக்கம்பாளையம், கணக்கம்பாளையத்திலிருந்து B.R.Hills மலைப்பகுதியில் அமைந்துள்ள எக்கரை மலையுச்சியைத் தாண்டி மலையின் கர்நாடகப் பகுதியில் அமைந்துள்ள கொள்ளே காலம், கொள்ளேகாலத்திலிருந்து தலக்காடு, தலக்காட்டிலிருந்து ஸாளக்ராமம், ஸாளக்ராமத்திலிருந்து தொண்டனூர், தொண்டனூ ரிலிருந்து திருநாராயணபுரத்தைச் சென்றடைந்திருக்க வேண்டும். எம்பெருமானார் கால்நடையாகவே தம் சிஷ்யர் களோடு இந்தக் கடினமான பாதையில் சென்றிருக்க வேண்டும். எம்பெருமானார் அவதரித்த ஆயிரமாவது ஆண்டுக் கொண்டாட் டங்களின் ஒரு பகுதியாக ஸ்ரீவைஷ்ணவ அடியார்கள் இராமானுசர் திருநாராயணத்தைச் சென்றடைந்த பாதையில் ஓர் அனு யாத்திரையை மேற்கொள்ள வேண்டும். ✱✱✱